# செய்யுட் கொத்து

## இரண்டாம் பாகம்


இது

சென்னைப் பச்சையப்பன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்கள்

**கா. ர. கோவிந்தராஜ முதலியார்**

**ஆ. வீ. கன்னைய நாயுடு**

தொகுத்தது



இரண்டாம் பதிப்பு

சென்னை

இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்

1925

விலை அணா 10]



[காபி ரைட்

# பொருளடக்கம்


| | | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பெருமாள் திருமொழி | 10 | 1 |
| 2. | கண்ட பத்து | 10 | 3 |
| 3. | கலிநீங்கு காண்டம் | 60 | 4 |
| 4. | துருவன் | 40 | 14 |
| 5. | பழியஞ்சின படலம் | 40 | 26 |
| 6. | நளன் திருமணம் | 16 | 33 |
| 7. | நரியும் பருந்தும் | 10 | 36 |
| 8. | நரி வென்றி | 24 | 39 |
| 9. | கடோற்கஜன் தூது | 14 | 42 |
| 10. | திருக்குறள் | 10 | 47 |
| 11. | நாலடியார் | 10 | 48 |
| 12. | நிலாத் தோற்றம் | 8 | 50 |
| 13. | கடற்கரைக் காட்சி | 1 | 51 |
| 14. | கலத்திற்கோர் விரு | 1 | 53 |
| 15. | பெண் கல்வி | 1 | 53 |
| 16. | முந்நீர்க் கடலும், மொழிக் கடலும் | 1 | 54 |
| 17. | தாமரை யிலைசார் தண்ணீர்த் திவலை | 1 | 55 |
| 18. | குயிலும், பாடகச் சிறுவனும் | 1 | 55 |
| 19. | முடிசூட்டுச் சிறப்பு | 10 | 57 |
| 20. | சீறாப் புராணம் | 2 | 60 |
| 21. | தேம்பாவணி | 2 | 61 |


மொத்தச் செய்யுள் 272

47060

ஸ்ரீ

# செய்யுட் கொத்து

கடவுள் வாழ்த்து

## பெருமாள் திருமொழி

வித்துவக் கோட்டம்மான் விஷயம்

(நாலாயிரப் பிரபந்தம்)

தரவு கொச்சகக கலிப்பா

தருதுயரம் தடாயேல்உன் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவககோட்டம்மானே!
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி அதுவேபோன் றிருந்தேனே.

கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்போல்
விண்டோய் மதிள்புடைசூழ் வித்துவக்கோட் டம்மா!நீ
கொண்டாளாய் ஆகிலும்உன் குரைகழலே கூறுவனே. (2)

மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மா!என்
பால்நோக்காய் ஆகிலும்உன் பற்றல்லால் பற்றிலேன்
தான்நோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே. (3)

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் டம்மா!நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே. (4)

வெங்கட்டின் களிறடர்த்தாய் வித்துவக்கோட் டம்மானே!
எங்குப்போய் உய்கேன்உன் இணையடியே அடையலல்லால்
எங்கும்போய்க் கரைகாணு தெறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே. (5)

செந்தழலே வந்தழலைச் செய்திடினும் செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால்;
வெந்துயர்வீட் டாவிடினும் வித்துவக்கோட் டம்மா! உன்
அந்தமில்சீர்க் கல்லால் அகங்குழைய மாட்டேனே. (6)

எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்; மற்றவைபோல்
மெய்த்துயர்வீட் டாவிடினும் வித்துவக்கோட் டம்மா! என்
சித்தமிக உன்பாலே வைப்பன் அடியேனே. (7)

தொக்கிலங்கி யாறெல்லாம் பரந்தோடித் தொடுகடலே
புக்கன்றிப் புறம்நிற்க மாட்டாத; மற்றவைபோல்
மிக்கிலங்கு முகில்நிறத்தாய்! வித்துவக்கோட் டம்மா! உன்
புக்கிலங்கு சீர்அல்லால் புக்கிலன்காண் புண்ணியனே. (8)

நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும் செல்வம்போல் மாயத்தால்
மின்னையே சேர்திகிரி வித்துவக்கோட் டம்மா!
நின்னையே தான்வேண்டி நிற்பன் அடியேனே. (9)

வித்துவக்கோட் டம்மா! நீ வேண்டாயே ஆயிடினும்
மற்றாரும் பற்றிலேன் என்றவனைத் தாள்நயந்த
கொற்றவேல் தானைக் குலசே கரன்சொன்ன
நற்றமிழ்பத் தும்வல்லார் நண்ணார் நரகமே. (10)

குலசேகர ஆழ்வார்.

# கண்ட பத்து

## (திருவாசகம்)

*தரவு கொச்சகக் கலிப்பா*

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொடில்லை கண்டேனே. (1)

வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை [யை
எனைப்பெரிது மாட்கொண்டென் பிறப்பறுத்த இணையிலி
அனைத்துலகுந் தொழுதில்லை அம்பலத்தே கண்டேனே. ()

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளமன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொடில்லை கண்டேனே.()

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் ஆய்வந்து வனப்பெய்தி இருக்கும்வண்ணம்
பல்லோருங் காணவென்றன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே. (4)

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை யல்லலறுத் தாட்கொண்டு [மாய்த்துக்
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரை
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே. (5)

பிறவிதனை யறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டும்
உறவினொடு மொழியச்சென் றுலகுடைய வொருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலமன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே. (6)

பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்
பித்தனிவன் எனஎன்னை ஆக்குவித்துப் போரமே
சித்தமெனுந் திண்கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே. (7)

அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்
களவிலா ஆனந்தம் அளித்தென்னை ஆண்டானைக்
களவிலா வானவருந் தொழுந்தில்லை கண்டேனே. (8)

பாங்கினொடு பரிசொன்றும் அறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர உலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலமறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே. (9)

பூதங்க ளாந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்க ளனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே. ()

மாணிக்கவாசக சுவாமிகள்

## நளவெண்பா

### (கலி நீங்கு காண்டம்)

முன்னீர் மடவார் முறுவல் திரள்குவிப்ப
நன்னீர் அயோத்தி நகரடைந்தான்—பொன்னீர்
முருகுடைக்குந் தாமரையின் மொய்ம்மலரைத் தும்பி
அருகுடைக்கு நன்னாட் டரசு. (1)

மான்றேர்த் தொழிற்கு மடைத்தொழிற்கு மிக்கோனென்
றான்றேய்க்கும் வேலான் உயர்நறவத்—தேன்றோய்க்கும்
தார்வேந்தற் கென்வரவு தானுரைமின் என்றுரைத்தான்
தேர்வேந்தன் வாகுகனாய்ச் சென்று. (2)

அம்மொழியைத் தூதர் அரசற் கறிவிக்கச்
செம்மொழியாத் தேர்ந்ததனைச் சிந்தித்தே—இம்
தக்கானை இங்கே தருமின் எனவுரைக்க [மொழிக்குத்
மிக்கானுஞ் சென்றான் விரைந்து (3)

பொய்அடையாச் சிந்தைப் புரவலனை நோக்கித்தன்
செய்ய முகமலர்ந்து தேர்வேந்தன்—ஐயா ! நீ
எத்தொழிற்கு மிக்கா னியாதுபெய ரென்றான்
கைத்தொழிற்கு *மிக்கானாக் கண்டு. (4)

அன்ன மிதிப்ப வலர்வழியுந் தேறல்போய்ச்
செந்நெல் விளைக்குந் திருநாடர்—மன்ன ! [றான்
மடைத்தொழிலுந் தேர்த்தொழிலும் வல்லன்யான் என்
கொடைத்தொழிலின் மிக்கான் குறித்து. (5)

(கொடைத்தொழிலின் மிக்கானாகிய நளன் வாகுகனாய் வந்து இங்ஙனங் குறித்துரைத்தவற்றைக் கேட்டு அவனை அவ்வாறே என்று கொண்டனன் அயோத்தியர்மன் இருதுபன்னன். நளன் இங்ஙனமிருக்கத் தமயந்தி தன் மகிழ்நன் நிலை யாதாயிற்றோ என மனத்தினாய்ந்து உயிர்நீத்த உடல்போல வாடுவாளாய்,)

என்னை யிருங்கானில் நீத்த இகல்வேந்தன்
தன்னைநீ நாடுகெனத் தண்கோதை—மின்னைப்
புரைகதிர்வேல் வேந்தன் புரோகிதனுக் கிந்த
உரைபகர்வ தானாள் உணர்ந்து. (6)

காரிருளில் பாழ்மண்ட பத்தேதங் காதலியைச்
சோர்துயிலின் நீத்தல் துணிவன்றோ—தேர்வேந்தர்க்
கென்றறைந்தால் நேர்நின் றெதிர்மாற்றந் தநதாரைச்
சென்றறிந்து வாஎன்றாள் தேர்ந்து. (7)

மின்னாடு மால்வரையும் வேலையும் வேலைசூழ்
நன்னாடுங் கானகமு நாடினான்—மன்னு

*மிக்கானை என்றும் பாடம்.

கடந்தாழ் களியானைக் காவலனைத் தேடி
அடைந்தான் அயோத்தி நகர். (8)

கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தர்க்குப் போதுமோ—தானென்று
சாற்றினான் அந்தவுரை தார்வேந்தன் தன்செவியில்
ஏற்றினான் வந்தான் எதிர். (9)

ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததுவும்
பண்டை விதியின் பயனேகாண்—தண்டாளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்வனத்தே
நீத்தானென் றையுறேல் நீ. (10)

(அதைக்கேட்ட புரோகிதன் மீண்டு தமயந்தியிட முற்று,)

வாக்கினால் மன்னவனை ஒப்பான் மறித்தொருகால்
ஆக்கையே நோக்கின் அவன்அல்லன்—பூக்கமழுங்
கூந்தலாய் ! மற்றக் குலப்பாகன் என்றுரைத்தான்
ஏந்துநூல் மார்பன் எடுத்து. (11)

மீண்டோர் சுயம்வரத்தை வீமன் திருமடந்தை
பூண்டாளென் றந்தண!நீ போயுரைத்தால்—நீண்ட
கொடைவேந்தற் கித்தூரந் தேர்க்கோலங் கொள்வான்
படைவேந்தன் என்றாள் பரிந்து. (12)

எங்கோன் மகளுக் கிரண்டாஞ் சுயவரம்என்
றங்கோர் முரசம் அறைவித்தான்—செங்கோலாய் !
அந்நாளு நாளை அளவென்றான் அந்தணன்போய்த்
தென்ஆளுந் தாரானைச் சேர்ந்து (13)

வேத மொழிவாணன் மீண்டுஞ் சுயம்வரத்தைக
காதலித்தாள் வீமன்தன் காதலிஎன்—றோதினான்
என்செய்கோ மற்றிதனுக் கென்றான் இகல்சீறும்
மின்செய்த வேலான் விரைந்து. (14)

குறையாத கற்பினாள் கொண்டானுக் கல்லால்
இறவாத ஏந்திழையாள் இன்று—பறிபீறி
நெல்லிற் பருவரா லோடுநெடு நாடா!
சொல்லப் படுமோஇச் சொல். (15)

என்மேல் எறிகின்ற மாலை எழில்நளன் தன்
முன்னே * விழுந்ததுகாண் முன்னாளில்—அன்னதற்குக்
காரணந்தான் ஏதென்றாே என்றான் கடாஞ்சொரியும்
வாரணந்தான் அன்னான் மதித்து. (16)

முன்னை வினையான் முடிந்ததோ? மொய்குழலாள்
என்னைத்தான் காண இசைந்ததோ?—தன்மரபுக்
கொவ்வாத வார்த்தை உலகத் துரைப்பட்ட
தெவ்வாறு கொல்லோ? இது. (17)

ஒற்றைத் தனிஆழித் தேர்என்ன ஓடுவதோர்
கொற்ற நெடுந்தேர் கொடுவந்தேன்—மற்றிதற்கே
போந்தேறு கென்றுரைத்தான் பொம்மென் றளிமுரலத்
தீந்தேறல் வாக்குந்தார்ச் சேய். (18)

முந்தை வினைகுறுக மூவா மயல்கொண்டான்
சிந்தை யினுங்கடுகச் சென்றதே—சந்தவிரைத்
தார்குன்றா மெல்ஓதி தன்செயலைத் தன்மனத்தே
தேர்கின்றான் ஊர்கின்ற தேர் (19)

மேலாடை வீழ்ந்த தெடுஎன்றான் அவ்வளவில்
நாலாறு காத நடந்ததே—தோலாமை
மேல்கொண்டான் ஏறிவர வெம்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல்கொண்ட மா. (20)

இத்தாழ் பணையில் இருந்தான்றிக காயெண்ணில்
பத்தா யிரங்கோடி பார்என்ன—உய்த்ததனில்

* 'விழுந்தது போனம்' என்னும் பாடம்.

தேர்நிறுத்தி எண்ணினான் தேவர் சபைநடுவே
தார்நிறுத்துந் தோள்வேந்தன் தான். (21)

ஏரடிப்பார் கோலெடுப்ப இன்தேன் தொடைபீறிக்
காரடுத்த சோலைக் கடல்நாடன்—தேர்அடுத்த [தான்
மாத்தொழிலும் இத்தொழிலு * மாற்றுதுமால் என்றுரைத்
தேர்த்தொழிலின் மிக்கானைத் தேர்ந்து. (22)

வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல † நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி. (23)

ஆமை முதுகில் அலவன் துயில்கொள்ளும்
காமர் நெடுநாடு கைவிட்டு—வீமன்தன்
பொன்னகரி சென்றடைந்தான் போர்வேட் டெழுங்கூற்றம்
அன்னகரி ஒன்றுடையான் ஆங்கு. (24)

வெற்றித் தனித்தேரை வீமன் பெருங்கோயில்
முற்றத் திருத்தி முறைசெய்யுங்—கொற்றவற்குத்
தன்வரவு கூறப் பணித்துத் தனிப்புக்கான்
மன்விரவு தாரான் மகிழ்ந்து. (25)

கன்னி நறுந்தேறல் மாந்திக் கமலத்தில்
மன்னித் துயின்ற வரிவண்டு—பின்னையும்போய்
நெய்தற் கவாவு நெடுநாட! நீ என்பால்
எய்தற் கவாவியவா றென். (26)

இன்றுன்னைக் காண்பதோர் ஆதரவால் யானிங்ஙன்
மன்றல் மலர்த்தாராய்! வந்தடைந்தேன்—என்றான்
ஒளிஆர்வேல் கண்ணாள்மேல் உள்ளந் துரப்பத்
தெளியாது முன்போந்த சேய். (27)

* 'மாற்றுதியோ' என்னும் பாடம். † 'நீங்குற்றான்' என்னும் பாடம்.

ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டவைஆற்றிக்
கோதில் அடிசில் குறைமுடிப்பான்—மேதிக்
கடைவாயில் கார்நீலங் கண்விழிக்கு நாடன்
மடைவாயில் புக்கான் மதித்து. (28)

ஆதி மறைநூல் அனைத்துந் தெரிந்துணர்ந்த
நீதி நெறிஆளர் நெஞ்சம்போல்—யாதும்
நிரப்பாமல் எல்லா நிரம்பிற்றே பொன்தேர்
வரப்பாகன் புக்க மனை. (29)

இடைச்சுரத்தில் தன்னை இடையிருளில் நீத்த [தொழில்கள்
கொடைத்தொழிலான் என்றயிர்த்த கோமான்—மடைத்
செய்கின்ற தெல்லாந் தெரிந்துணர்ந்து வாஎன்றாள்
நைகின்ற நெஞ்சாள் நயந்து. (30)

கோதை நெடுவேல் குமரனையுந் தங்கையையும்
ஆதி அரசன் அருகாகப்—போத
விளையாட விட்டவன்தன் மேல்செயல்நா டென்றாள்
வளையாடுங் கையாள் மதித்து. (31)

மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காள் ! நீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்கள் என்றுரைத்தான்
வன்மக் களியானை மன். (32)

மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட் டவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்றோம் எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான் என்றார் அழுது. (33)

ஆங்கவர் சொன்ன உரைகேட் டழிவெய்தி
நீங்கா உயிரோடு நின்றிட்டான்—பூங்காவில்
வள்ளம்போல் கோங்கு மலருந் திருநாடன்
உள்ளம்போல் கண்ணீர் உகுத்து. (34)

உங்கள் அரசொருவன் ஆளநீர் ஓடிப்போந்
திங்கண் உறைதல் இழுக்கன்றோ—செங்கை
வளவரசே ! என்றுரைத்தான் மாதவத்தால் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து. (35)

நெஞ்சால்இம் மாற்ற நினைந்துரைக்க நீஅல்லா
தஞ்சாரோ மன்னர் அடுமடையா !—எஞ்சாது
தீமையே கொண்ட சிறிதொழிலாய்! எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி. (36)

எந்தை கழல்இணையில் எம்மருங்குங் காணலாம்
கந்து சுளியுங் கடாக்களிற்றின்—வந்து
மணிமுடியில் பார்காக்கும் பார்வேந்தர் * தங்கள்
மணிமுடியின் தேய்ந்த வடு. (37)

மன்னர் பெருமை மடையர் அறிவரோ ?
உன்னை அறியா துரைசெய்த—என்னை
முனிந்தருளல் என்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண். (38)

கொற்றக் குமரனையுங் கோதையையுந் தான்கண்டு
மற்றவன்தான் ஆங்குரைத்த வாசகத்தை—முற்றும்
மொழிந்தார்அம் மாற்ற மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தாள் அழுது. (39)

மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத் தனித்தேருங் கொண்டணைந்து—மற்றும்
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்காண் எங்கள்
கொடைத்தொழிலான் என்றாள் குறித்து. (40)

போதலருங் கண்ணியான் போர்வேந்தர் சூழப்போய்க்
காதலிதன் காதலனைக் கண்ணுற்றான்—ஓதம்

* 'தாழும்' என்னும் பாடம்.

வரிவளைகொண் டேறும் வளநாடன் தன்னைத்
தெரிவரிதா நின்றான் திகைத்து. (41)

செவ்வாய் மொழிக்குஞ் செயலுக்குஞ் சிந்தைக்கும்
ஒவ்வாது கொண்ட உருவென்று—எவ்வாயும்
நோக்கினான் நோக்கித் தெளிந்தான் நுணங்கியதோர்
வாக்கினான் தன்னை மதித்து. (42)

பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை ஐயுற்று—மந்தி
தெளியா திருக்குந் திருநாடா! உன்னை
ஒளியாது காட்டுன் உரு. (43)

அரவரசன் தான்கொடுத்த அமபூந் துகிலின்
ஒருதுகிலை வாங்கி உடுத்தான்—ஒருதுகிலைப்
போர்த்தான் பொருகலியின் வஞ்சனையால் பூண்டளிக்கும்
கோத்தாய முன்இழந்த கோ (44)

மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோர் அருவினைபோல் போயிற்றே—அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு. (45)

தாதையைமுன் காண்டலுமே தாமரைக்கண் நீர்அரும்பப்
போதலருங் குஞ்சியான் புக்கணைந்து—கோதிலாப்
பொன்னடியைக் கண்ணின் புனலாற் கழுவினான்
மின்னிடையா ளோடும் விழுந்து. (46)

உத்தமரின் மற்றிவனை ஒப்பார் ஒருவரிலை
இத்தலத்தில் என்றிமையோர் எம்மருங்கும்-கைத்தலத்தின்
தேமாரி பெய்யுந் திருமலர்த்தார் வேந்தன்மேல்
பூமாரி பெய்தார் புகழ்ந்து. (47)

தேவிஇவள் கற்புக்குஞ் செங்கோல் முறைமைக்கும்
பூவுலகில் ஒப்பாயார் போதுவார்—காவலனே!

மற்றென்பால் வேண்டும் வரங்கேட்டுக் கொள்ளென்றான்
முற்றன்பால் பாரளிப்பான் முன். (48)

உன்சரிதஞ் செல்ல உலகாளுங் காலத்து
மின்சொரியும் வேலாய்! மிகவிரும்பி—என்சரிதம்
கேட்டாரை நீஅடையேல் என்றான் கிளர்மணிப்பூண்
வாட்டானை மன்னன் மதித்து. (49)

என்காலத் துன்சரிதங் கேட்டாரை யான்அடையேன்
மின்கால் அயில்வேலாய்! மெய்யென்று—நன்காவி
மட்டிறைக்குஞ் சோலை வளநாடன் முன்நின்று
கட்டுரைத்துப் போனான் கலி. (50)

வேத நெறிவழுவா வேந்தனையும் பூந்தடங்கண்
கோதையையு மக்களையுங் கொண்டுபோய்த்—தாது
புதையத்தேன் பாய்ந்தொழுகும் பூஞ்சோலை வேலி
விதையக்கோன் செய்தான் விருந்து. (51)

உன்னையான் ஒன்றும் உணரா துரைத்தஎலாம்
பொன்னமரு *மார்ப! பொறுஎன்று—பின்னைத்தன்
மேனீர்மை குன்றா வெறுந்தேர் மிசைக்கொண்டான்
மாணீர் அயோத்தியார் மன். (52)

விற்றானை முன்செல்ல வேல்வேந்தர் பின்செல்லப்
பொற்றேர்மேல் தேவியொடும் போயினான்—முற்றும்பல்
தேனீர் அளித்தருகு செந்நெற் கதிர்விளைக்கும்
மாநீர் நிடதத்தார் மன். (53)

தானவரை வெல்லத் தரித்தநெடு வைவேலாய்!
ஏனைநெறித் தூரமினி எத்தனையோ?—மானே! கேள்
இந்த மலைகடந் தேழுமலைக் கப்புறமா
விந்தமெனு நம்பதிதான் மிக்கு. (54)

* பொன்னமருந்தாராய் (என்றும் பாடம்.)

இக்கங்குல் போக இகல்வேல் நளன்எறிநீர்
செய்க்கங்குப் பாயுந் திருநாடு—புக்கங்
கிருக்குமா காண்பான்போல் ஏறினான் குன்றிற்
செருக்குமான் தேர்வெய்யோன் சென்று. (55)

மன்றலிளங் கோதையொடு மக்களுந் தானுமொரு
வென்றி மணிநெடுந்தேர் மேல்ஏறிச்—சென்றடைந்தான்
மாவிந்தம் என்னும் வளநகரஞ் சூழ்ந்தஒரு
பூவிந்தை வாழும் பொழில். (56)

மற்றவனுக் கென்வரவு சொல்லி மறுசூதுக்
குற்ற பணையம் உளதென்று—கொற்றவனைக்
கொண்டணைவீர் என்று குலத்தூ தரைவிடுத்தான்
தண்டெரியல் தேர்வேந்தன் தான். (57)

மாய நெடுஞ்சூதில் வஞ்சித்த வன்நெஞ்சன்
தூய நறுமலர்ப்பூஞ் சோலைவாய்—ஆய
பெருந்தானை சூழப் பெடைநடையா ளோடும்
இருந்தானைக் கண்டான் எதிர். (58)

செங்கோல் அரசன் முகநோக்கித் தேர்ச்சியிலா
வெங்கோல் அரசன் வினவினான்—அங்கோலக்
காவல் கொடைவேந்தே! காதலற்குங் காதலிக்கும
யாவர்க்குந் தீதிலவே என்று. (59)

அந்த வளநாடும் அவ்வரசும் ஆங்கொழிய
வந்த படியே வழிக்கொண்டான்—செந்தமிழோர்
நாவேய்ந்த சொல்லான் நளனென்று போற்றிசைக்கும்
கோவேந்தற் கெல்லாங் கொடுத்து. (60)

புகழேந்திப் புலவர்

## துருவன்

### (பாகவத புராணம்)

*கலி நிலைத்துறை*

முத்தா ரமார்பன் முடிமன் னவர்வந் திறைஞ்சப்
பைத்தா டரவஞ் சுமைகூர் கடற்பார்ப ரித்தான் [வேல்
கொத்தார் அலங்கல் குளிர்வெண் குடைக்கோதை வெள்
உத்தா னபாத னெனவோ துமுலங்கொள் தோளான். (1)

வெடிக்கும் புதுநாண் மலர்வேய்ந் தகில்விம்மி வேலை
குடிக்குங் கமஞ்சூல் குலமா முகில்வென்ற கூந்தல்
தொடிக்கைச் சுநீதி சுடர்பொன் குழைமேல டர்க்கும்
வடிக்கண் சுருதி யெனுமங் கையரைம ணந்தான். (2)

வரையுற் றசாயல் மயிலன் னசுநீதி யென்னும்
தெரிவைக் குதித்தான் துருவன் செருவென்ற செவ்வேல்
அரசற் கமுதாய் அலர்தா மரைஅன்ன மொத்த
சுருதிக் குமன்றல் தொடையுத் தமன்தோன் றினான் (3)

*அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்*

மத்தமாக் களிற்று மன்னன்
மாமணித் தவிசின் மீது
கத்திகைக் கருமென் கூந்தல்
கன்னியர் கவரி வீசத்
தித்தியா நின்ற தெய்வத்
தெள்ளமு தனைய தீஞ்சொல்
உத்தமன் குறங்கின் வைக
உவந்துவீற் றிருந்தான் அன்றே. (4)

வண்டுளர் தெரியல் வேந்தன்
மாமணிக் குறங்கின் ஏறி
ஒண்டொடி உடுத்த செங்கை
உத்தமன் உறைந்த செவ்வி
கண்டனன் துருவன் தானும்
ஏறுவான் கருதி நண்ணத்
தொண்டைஅங் கனிவாய் வேற்கண்
சுருதியாங் கியம்பு வாளால். (5)

கோற்றொடிப் புதல்வ! நீயெங்
கோவிளங் குமரன் என்று
மாற்றவள் வயிற்றின் வந்தாய்
வரத்தினென் வயிற்றின் வந்து
தோற்றுதல் புரிநோன் பில்லாய்
சொரிமதக் களிறு சாய்க்கும்
ஏற்றிளம் சிங்கம் அன்னான்
குறங்கினென் ஏறு மாறே. (6)

காதல்! உலகம் எல்லாங்
கவிக்கும்வெண் கவிகைச் செங்கோல்
கோதைவேல் தடக்கை வேந்தன்
குறங்கினீ ஏற வேண்டின்
தாதலர் கமலச் செல்வி
தலைவனை நோக்கி நின்று
மாதவம் புரிந்து வந்தென்
வயிற்றிடைப் பிறத்தி யென்றாள். (7)

வெஞ்சிலைத் தடக்கை வேந்தன்
திருமுகத் தருளுங் காணான்
அஞ்செவி வெதும்ப நங்கை
அறைந்தசொற் காற்றான் ஆகிக்

கஞ்சநாண் மலரை வெல்செங்
கண் இணை மாரி கால
மஞ்சனுங் கன்னை பாற்போய்
மணிஇதழ் துடிப்ப நின்றான். (8)

தன்னிளங் குழவி செங்கண்
தாமரை தழைத்த முத்தம்
பொன்னணிந் திலங்கு மார்பில
பொழிதர நிற்றல் நோக்கி
என்னுயிர்! என்கண்! ஏந்தல்!
என்னைநீ அழுங்கல் என்று
மின்னுயிர்த் தொளிரும் பைம்பூண்
மெல்லியல் விளைவி னாால். (9)

பட்டமை கண்டோர் கூறப்
பசுஞ்சிறைக் கிள்ளை அன்னாள்
விட்டெரி கின்ற காட்டு
வெங்கனல் படர்ந்து முற்றிச்
சுட்டவெப் புண்ட பொன்னந்
துணர்க்கொடி போல வாடி
நெட்டுயிர்ப் பெறிந்து செங்கண்
நித்திலஞ் சிந்தி நின்றாள். (10)

குதலைதெள் அமுதில் தேனில்
கொண்டமென் பவளச் செவ்வாய்
மதலை !நல் வினையி லேன்புல்
வயிற்றகம் பொருந்தி வந்தாய்
விதலையுற் றிரங்கல் வேண்டா ;
விளைந்ததண் அளியிற் காக்கும்
முதலைவாய் உம்பல் காத்த
முழுமுதல் கடவுள் மாதோ. (11)

ஐதெழில் அமுதின் சாயல்
ஆயிழை யுரைத்த வாறே
மைதப மனத்தின் ஓர்ந்து
வழுத்தினர் விழைந்த நல்கும்
நெய்தவழ் நேமி யானை
நினைத்தனை தவம்நின் றூற்றி
எய்தரும் பதமே மைந்த!
எய்துதி, கலங்கல், என்றாள். (12)

பனிமலர் அண்ணல் ஓங்கு
பதத்தினை அடைந்த வாறும்
மனுமிகச் சிறந்த வாறும்
மாயனைக் கருதி அன்றே
தனைய! நீ கங்கை பூத்த
தாமரைத் தாளி னானை
நினையினென் எய்தா தென்று
நெஞ்சகம் தெருட்டி னாளால். (13)

விடம்பொழி வென்றி வேற்கண்
விளங்கிழை மடந்தை மாற்றம்
கிடந்துளங் கனற்ற அம்பொன்
கிங்கிணி கவைஇய தாளான்
நடந்தனன் சென்ற காலை
நாரதன் வந்து நண்ணித்
தடங்கைஅங் கமல மைந்தன்
தலைமிசைச் சார்த்திச் சாற்றும். (14)

பருவம்ஐந் திறந்த தில்லை,
பாலன்நீ, தவம்எவ் வாறு
புரிதி? மா தவத்தோர் இன்னம்
புலப்படக் காண மாட்டாக்

கரியவன் தன்னை யாங்குக்
காணுதி ? கதழுஞ் சீற்றத்
திருகுமா வழங்கு கானஞ்
செல்வது செவ்வித் தன்றால் (15)

என்று பல இன்மொழிகளைக் கூறினர். வளர்பிறைக் கொழுந்து போன்றவனாகிய துருவன், "என் முன்னோர் செய்த நல்வினையின் பயனாக எனக்கின்னருள் புரிய வந்த எம்மடிகாள்! நீர் புகன்றன சீரியவே எனினும் என் மனத்திற்கிப்பொழுது உகப்புடையனவாகத் தோன்றவில்லை. என் மனம் சீரிய வான் பதத்தை அடைதலையே நாடுகின்றது. அந்நாட்ட முற்றுறு நெறியையே எனக் கருளுதல் வேண்டும்," என்று வணங்கி வேண்டினன். நாரதா அப்பச்சிளங் குழவிப் பருவத்துக் குமரன்றன் உறுதி யுரைகளைக் கேட்டுக் களிகூர்ந்து ஈடும் எடுப்புமில் இறைவன்றன் ஆயிரந் திருநாமங்களுள் ஒன்றாயதும், பன்னிரண்டு எழுத்துகளை உடையதுமாகிய திருமந்திரத்தை உபதேசித்து, "மதுரையின் ஒருபுறம் உள்ள மது வனத்துச் சென்று தவம் புரிக," என்றருளினர். அங்ஙனமே துருவன் அம்மது வனத்தை அடைந்து யமுனை யாற்றில் மூழ்கி மாமகள் கொழுநனை மன மலரின்கண் அமைத்துத் தவம் புரியலானன்.

ஊழிவெம் பரிதி உட்க
ஒளிசெய்செங் கதிரால் ஒற்றை
ஆழியந் தடக்கை அம்மான்
அகமிசை அமர்ந்த ஆற்றால்
தாழிருந் தடக்கை நம்பி
தவக்கனல் தவாது பொங்கி
ஏழிரும் பரவை வேலி
இருநிலங் கனன்ற தாமால். (16)

ஆவயின் துருவன் தன்மூச்
சடக்கிய திறத்தி னுள்ளத்
தேவரும் உயிர்க்க லாற்றார்
தெருமந்தார் தெருண்டு மொய்த்துக்

காவல! காத்தி என்று
   கண்ணனை அடைந்து கூறப்
பூவுறை விரிஞ்சன் தன்னைப்
   பூத்தவன் புகல லுற்றான். (17)

விட்டிலன் துருவன் மூச்சு
   விழுத்தவம் புரித லானே
முட்டிய துமக்கு மாங்கே
   மூச்சுநாங் காத்தும் என்னு
மட்டறு வேத மேனி
   வரிச்சிறைப் புள்ளின் மேல்திக்
கெட்டுநல் உருவக் காந்தி
   எறிதர ஏகி னானல். (18)

நெடியவன் முன்னம் வந்து
   நிற்பது நிகழ்த்த லாக
ஒடிவறு தவத்தின் மைந்தன்
   காண்கல னாக உள்ளம்
சுடர்தன துருவுத் தண்ணந்
   துளவினன் கரத்த லோடும்
கடிகமழ் கமல மன்ன
   கண்மலர் விழித்தான் மன்னோ. (19)

மண்டல நிறைந்த திங்கள்
   வதனமுங் கமலக் கண்ணும்
குண்டலஞ் சுடருங் காதுங்
   குறுநகைப் பவள வாயும்
தண்துழாய் அலங்கல் மார்புந்
   தடக்கையோர் நான்கு மாகக்
கண்டனன் மறையுங் காணாக்
   கரியவன் உருவ மம்மா. (20)

பருகுவான் போல நோக்கும்,
பங்கயக் கண்ணம் மானை
இருகையால் புல்லு வான்போல்
எய்திடும், இறைஞ்சா நிற்கும்,
உருகுநெஞ் சுவக்குங், கண்ணீர்
உகுக்கும்,உள் அழுங்கும், துள்ளும்,
முருகனுன் உவகை வேலை
மூழ்கினன் துளைவான் மன்னே. (21)

அவிர்மணிச் சுடிகை நெற்றி
அண்ணல்வாள் அரவம் ஏந்தும்
குவலயம் போற்றும் வேந்துக்
குழவிதன் மணிக்க போலம்
பவளவாய்ப் பச்சை மேகம்
பங்கயச் செங்கை தாங்கும்
தவளவெண் சங்கி னுலே
தகைபெறத் தடவா நிற்கும். (22)

பொழிகதிர் மதியை வென்ற
புரிவளை கொண்டு பொங்கித்
தழையுநல் எழிற்க போலந்
தைவரு திறத்தி னுலே
மழலைவாய்ச் சிறுவன் வாக்கு
மலிந்தெழ மகிழ்ச்சி கூர்ந்து
பழமறை பழிச்ச மாட்டாப்
பரமனைப் பரவல் உற்றுன். (23)

வேறு

வானே! வளியே! வயங்கெரியே!
வனமே! மண்ணே! இவ்வைந்தின்
ஊனே! உயிரே! உயிர்க்குயிரே!
உன்னும் உறுவர் உளத்தூறும்

தேனே! நங்கள் பெருவாழ்வே!
சிவனே! அயனே இருவருக்கும்
கோனே! நின்னைக் குணமில்லேன்
குறித்தென் சொல்லிப் பழிச்சுகோ. (24)

மூவா முதலே! முத்தொழிலும்
மூவ ராகி இனிதியற்றும்
தேவா! தேவர் சிகாமணியே!
சிந்தா மணியே! தெள்அமுதே!
நாவால் நின்சீர் எங்ஙனம்யான்
நவில்கோ என்ன, நகைமுகிழ்த்துப்
பூவாற் பொழில்பூத் தருள்உந்திப்
பூவை வண்ணன் புகலுகிற்பான். (25)

மின்னுஞ் சுடர்கான் றழல்குடுமி
வெள்வேல் அரச குமர!உணர்ந்
தின்னும் பொலந்தார் முடிஅமரர்
எய்தற் கேக்கற் றிருப்பதுயர்
பொன்னங் கிரியின் உச்சிமிசைப்
பொலிவ துலகின் மேலதென்றும்
மன்னப் படுவ தொருபதம்யாந்
தருதும் வாழி மற்றுனக்கே. (26)

கரடம் கவிழ்க்குங் கலுழிமதக்
கடவுள் களிறும் ஒளிறுகதிர்
சொரியும் அருமா மணிச்சூட்டுத்
துத்தி அரவுஞ் சுமந்தநிலம்
இருபத் தாறு யிரம்பருவம்
எழில்வெண் கவிகை தனிநிழற்றித்
துருவப் பதநீ அடைதிஎனத
தொன்மை முதல்வன் அகன்றனனால். (27)

நஞ்சு குழுமி எழுவேற்கண்
  நங்கை உரைத்த உரைகிடந்து
நெஞ்சு சுடநீள் பதம்வேட்டு
  நின்றேன் நெகிழ்ந்த தாமரைக்கண்
மஞ்சைக் கண்டுங் கேட்டிலமான்
  முத்தி என்று மகிழ்கூரான்
துஞ்சல் இல்லாச் சுடர்மணிப்பூண்
  தொடிக்கைத் துருவன் நகர்சார்ந்தான். (28)

வந்தான் துருவன் எனலோடும்
  வாரா மகிழ்ச்சி வந்தெழத்தேன்
சிந்தா நின்ற மென்மழலைச்
  சிறுவன் வரவு சாற்றினர்க்கு
மந்தா கினிபொன் வரைதவழு
  மாட்சி போல மருஉயிர்க்கும்
அந்தா ரகலத் தயல்வருபூண்
  ஆரங் கொடுத்தான் அரசெழுந்தான். (29)

கதலி நிறைத்து முத்தணிந்து
  கனக மணித்தோ ரணம்புனைந்து
மதியந் தொடவான் எழுந்துயர்ந்த
  மாடம் புதுக்கி மருக்கமழ்ந்து
புதுமட் டொழுகுங் கற்பகப்பூம்
  புனையல் வனைந்து புரந்தரன்தன்
பதியென் றுணர நகர்துலக்கிப்
  பரவை யெனயா வருந்தொடர. (30)

வேந்தர் வணங்க முழவதிர
  வெண்சங் கலற உத்தமனும்
சேந்த மலர்த்தாள் தேவியருஞ்
  செம்பொன் சிவிகைமேல்எய்திக்

கூந்தல்,பரித்தேர் கடிதோட்டிக்
குழவி ஞாயி றொளிமழுங்கக்
காந்தி தழைத்து வருகின்ற
காமர்ப் புதல்வன் தனைக்கண்டான். (31)

உருகு காதல் உளந்தளிர்ப்ப
உவகை பெருகுற் றலையெறிய
இருகை கூப்பித் தொழுதிறைஞ்சும்
இளவாள் முறுவல் காதலனைப்
பருகு வான்போல் நோக்கிஒளி
பரப்பு தொடித்தா மரைக்கரத்தால்
முருகு கமழ முகந்துச்சி
மோந்தான் விழிநீர் ஆட்டினான். (32)

கள்ளக் கருங்கண் சுருதியைச்செங்
கையால் துருவன் தொழுதிறைஞ்சப்
பள்ளத் தொழுகு தண்புனல்போல்
பழுக்கும் அன்பு தலைமணப்ப
உள்ளத் துவகை கூர்ந்தனள்அவ்
வொழுகு கொடிநுண் ணிடைமாது
வள்ளல் கமலை கொண்கன்அருள்
வாய்த்தால் ஆரே உவவாதார். (33)

காளைப் பருவங் கனிந்திடலுங்
கதிர்வேல் தடக்கைத் துருவனுக்கு
வாளக் கிரிசூழ் உலகேழும்
மதிவெண் கவிகை தனிநிழற்றி
ஆளக் கதிர்மா முடிசூட்டி
அழல்கான் அடைந்து தவம்புரிந்தான்
பாளைக் கமுகம் படைப்பைசெறி
பழனத் திருநா டுடையோனே. (34)

கலி விருத்தம்.

ஏழி ரும்பொழில் வாழுமி லங்குவேல்
பாழி மன்னர்ப ணிந்துதி றையிடச்
சூழி யானைத்து ருவன்வி ரிதிரை
ஆழி சூழ்நில மாழியொன் றுய்த்தனன். (35)

துருவன் உலகு ஓம்பலைக் கைக்கொண்டு கிஞ்சுமாரன் என்னும் பிரசாபதியின் புதல்வியாகிய பிரமை என்பவளையும், வாயுதேவன் புதல்வியாகிய விடை என்பவளையு மணந்து கொண்டனன். அவ் விருவருள் பிரமை என்பவள் கற்பன், வற்சரன் என்னும் இருமைந் தர்களை ஈன்றாள்; விடை என்பவள் உற்கலன்என்னு மைந்தனைப் பெற்றனள். துருவன் இங்ஙனம் இன்புற் றிருக்கையில் அவன்றன் இளவலாகிய உத்தமன் ஒருநாள் காட்டிற் சென்று வேட்டை ஆட, அங்கு அவனை ஓர் அரக்கன் கொன்று விட்டனன். அதை அறிந்த அவன் தாயாகிய சுருதி எரியிடை உற்று உயிர் துறந்தாள். அவற் றால் துருவன் மிகவு மன மழன்று அரக்கர்கள் எல்லாரையும் வீட்டு வேன் என்று கடல்போலும் தானை தன்னைப் புடைசூழச் சென்று அரக்கர்கட் கிறையாகிய குபேரன்றன் நகரை அடைந்து தனது வென்றி மிக்க சங்கத்தை முழக்கினன். அவ்வளை ஒலியைக் கேட் டுப் போர்க்களத்துற்ற அரக்கர்களை எல்லாந் துருவன் கொல்ல லானான். அப்பொழுது மனு அங்குற்று, "ஓர் அரக்கன் செய்த குற்றத்திற்றாக எல்லா அரக்கர்களையுங் கொல்லுதல் அறம் அன்று," என்று பல் இன்மொழிகள் கூறி அவன் சினத் தீயைத் தணித்துச் சென்றனர். பிறகு குபேரன் வந்து, "ஐய! நின் ஆற்றலும் அமை வும் சீரியவாம்; நினக்கு வேண்டிய வரத்தினைக் கேட்குதி, தருவல்," எனத் துருவன் அவ்விறைவனை வணங்கி, "ஐய! அருளாழி அங் கைப் பெருமான் திருவருளை யன்றி எனக்கு வேண்டுவது பிற தொன்றில்லை" என்றான். குபேரன், "ஐய? நின் கருத்து அதுவா யின் அன்னதே நினக்கெய்துவதாக," என்று கூறிச் சென்றனன். பிறகு துருவன், தன் நகர மெய்தி உலகினைப் பொதுவறப் புரந்து வந்தான். மீண்டும் அவனுக்குத் தவம் புரிந்து அருளாழிப் பெம் மான் அடியிணை எய்த வேண்டும் என்னும் விருப்பு உண்டாக,

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

வாங்கிய வரிவில் செங்கை
மைந்தனை அவனி காப்பத்
தேங்கமழ் தெரியல் மாலைச்
செழுங்கதிர் மௌலி சூட்டி
வீங்குநீர் விசாலை எய்தி
விழுத்தவம் புரிதல் செய்தான்
ஓங்குவான் மாரி காத்த
ஒருவனை உளததின் வைத்தே. (36)

உருள்உறப் பசும்பொன் திண்தேர்
ஊர்ந்தெழு கதிர்க ளெல்லாம்
வெருளவிட் டொளிசெய் ஒண்கேழ்
விழுமணி கிடந்த மார்பன்
அருள்பெறு சுநந்த நந்தர்
அவ்வழிக் குறுகி னரால்
இருள்அயில் திங்கள் போல
இமைக்குமோர் விமானங் கொண்டே. (37)

ஒருதனித் திகிரி மாயன்
ஒளிவிசும் படையல் வேண்டும்
வருகநீ வருக என்று
வழுத்தினர் கூற லோடும்
எரிகதிர்ப் பசும்பொன் போல
எவ்வெலாத் திசையுங் காந்தி
விரியும்ஓர் உருவு கொண்டு
விமானமீ திவர்ந்தான் மன்னோ. (38)

மன்னனுங் கீன்ற தாயை
மனத்தினில் நினைப்ப, மன்னன்
உன்னிய துணரா அன்னோர்
ஒருமுதல் அன்பர் உய்க்கப்

பொன்நெடு விமானம் ஊர்ந்து
போகுழி விசும்பின் மேல்உன்
அன்னையுஞ் சேறல் காண்டி
அரச!என் றியம்பி னோரால். (39)

உகாதொரு ஞான்றும் விண்ணத்
தோங்கிய பதங்கள் தம்மை
நகாஒளி கிளைத்து நின்ற
நனந்தலை உலகுக் கெல்லாம்
சிகாமணி என்னச் சேணில்
சேயுயர் பதத்தில் சென்று
புகாவிளங் கினன்அவ் வேந்தன்
புகழ்எவர் புகலற் பாலார். (40)

செவ்வைச் சூடுவார் என்னும் ஆரியப்பப் புலவர்

## பழியஞ்சின படலம்

### (திருவிளையாடற் புராணம்)

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

குரவன்செங் கோல்கைக் கொண்ட
குலோத்துங்க வழுதி செங்கண்
அரவங்கம் பூண்ட கூடல்
ஆதிநா யகனை நித்தம்
பரவன்பின் வழிபா டாற்றுப்
பத்திமை நியபம் பூண்டான்
இரவஞ்சுங் கதுப்பின் நல்லார்
ஈரையா யிரவர் உள்ளான். (1)

கொச்சகக் கலிப்பா

அப்பதினு யிரவர்க்கும் ஒவ்வொருத்திக் கவ்வாறு
ஒப்பரிய அறுபதினு யிரங்குமரர் உளர்அவருள்
செப்பரிய வல்லாண்மைச் சிங்கஇள ஏறனையான்
வைப்பனையான் முதற்பிறந்த மைந்தன்பேர் அனந்த
குணன். (2)

கலைபயின்று பரிநெடுந்தேர் கரிபயின்று பலகைவாள்
சிலைபயின்று வருகுமரர் திறநோக்கி மகிழ்வேந்தன்
அலைபயின்ற கடலாடை நிலமகளை அடல்அணிதோள்
மலைபயின்று குளிர்தூங்க மகிழ்வித்து வாழுநாள். (3)

(ஒரு வேதியன் திருப்பத்தூரிலிருந்து தன் அம்மானிடம் போதற்காகத் தன் மனைவியோடும் கைக்குழந்தையோடும் மதுரையை நோக்கி வந்து கொண்டிருந்தான்.)

வருவான்உண் ணீர்வேட்டு வருவாளை வழிநிற்கும்
பெருவானந் தடவும்ஒரு பேராலின் நிழலின்கீழ்
ஒருவாத பசுங்குழவி உடனிருத்தி நீர்தேடித்
தருவான்போய் மீண்டுமனை இருக்குமிடந் தலைப்படுமுன்.(4)

இலைத்தலைய பழுமரத்தின் மிசைமுன்னாள் எய்ததொரு
கொலைத்தலைய கூர்வாளி கோப்புண்டு கிடந்தது;கால்
அலைத்தலைய வீழ்ந்தும்மை வினைஉலப்ப ஆங்கிருந்த
வலைத்தலைய மான்நோக்கி வயிறுருவத் தைத்தன்றால். (5)

அவ்வாறவ் வணங்கனையாள் உயிரிழந்தாள். அவ்வேலைச்
செவ்வாளி ஏறிட்ட சிலையுடையான் ஒருவேடன்
வெவ்வாளி யேறனையான் வெயிற்கொதுங்கு நிழல்தேடி
அவ்வால நிழல்எய்தி அயல்நின்றான் இளைப்பாற. (6)

தண்ணீர்க்குப் போய்ஆவி தலைப்பட்ட மறையவனும்
உண்ணீர்கைக் கொண்டுமீண் டொருங்கிருந்த குழவியொடும்

புண்ணீர்வெள் ளத்துக்கால் தாழ்ந்துயிரைப் புறங்கொடுத்த
பண்ணீர மழலைமொழிப் பார்ப்பனியைக் கண்ணுற்றான். (7)

அயில்போலுங் கணையேறுண் டவ்வழிபுண் ணீர்சோர
மயில்போல உயிர்போகிக் கிடக்கின்றாள் மருங்கணைந்தென்
உயிர்போல்வாய்! உனக்கிதுவென் உற்றதென மத்தெறிதண்
தயிர்போலக் கலங்கிஅறி வழிந்துமனஞ் சாம்பினான். (8)

இனையதோர் பெண்பழியை யாரேற்றார் எனத்தேர்வான்
அனையதோர் பழுமரத்தின் புறத்தொருசார் அழல்காலும்
முனையதோர் கணையோடு முடக்கியகைச் சிலையேந்தி
வினையதோர்ந் தெதிர்நின்ற விறல்வேடன் தனைக்கண்டான்.

கலி நிலைத்துறை

கார்ப்பணி தாளன் வாளொடு வீக்கிய கச்சாளன்
கூர்ப்பக ழிக்கோல் ஏறிடு வில்லன் கொலைசெய்வான்
ஏற்பன கைக்கொண் டிவ்விடை நின்றான் இவனேயென்
பார்ப்பனி யைக்கொன் றின்னுயி ருண்டு பழிபூண்டான்.
என்னம தித்தே யேடா! வேடா! என்னேழை
தன்னவ தைத்தாய் நீயே என்னுத் தழல்கால்கண்
மின்னல் எயிற்றுக் கூற்றென வல்வாய் விட்டார்த்து
மன்னவன் ஆணைப் பாசமெ றிந்து வலித்தேகும். (11)

(இங்ஙனம் அவ்வேதியன் மாண்ட தன் மனைவியை முதுகில் எடுத்துக்கொண்டு குழந்தையையும் கையால் அணைத்துக்கொண்டு அரசன் அரண்மனையை அடைந்தான்.)

மட்டவிழ் தாரான் வாயில் மருங்கே வந்தெய்தா
உட்டுகள் இல்லா வேடனை முன்விட் டுயிர்அன்னாள்
சட்டக நேரே விட்டெதிர் மாறன் தமர்கேட்பக்
கட்டழல் சிந்தா முறையிடு கின்றான் கையோச்சா. (12)

கோமுறை கோடாக் கொற்றவர் ஏறே! முறையேயோ
தாமரை யாள்வாழ் தண்கடி மார்பா! முறையேயோ

மாமதி வாழேன் வழிவரு மைந்தா! முறையேயோ
தீமைசெய் தாய்போற் செங்கைகுறைத்தாய்!முறையேயோ

பிறங்குங் கோலான் மாறடு கொற்றம் பெறுவேந்தன்
உறங்கும் போதுந் தன்னருள் ஆணை யுலகெங்கும்
அறங்குன் றுவாக் காப்பதை யென்ப வஃதியாதிம்
மறங்குன் றுதான் செய்கொலை காவா வழியென்றான் (14)

வாயிலு ளார்த மன்னவன் முன்போய் மன்னாநங்
கோயிலின் மாடோர் வேதியன் மாதைக் கொலைசெய்தான்
ஆயினன் என்றோர் வேடனை முன்விட் டவிந்தாளைத்
தாயினன் வந்திங் கிட்டயர் கின்றான் தமியென்றார். (15)

இறைமகன் அஞ்சா என்குடை நன்றால்; என்காவல்
அறமலி செங்கோல் அஞ்சுப யந்தீர்த் தரசாளு
முறமையு நன்றால்; மண்கலி மூழ்க முயன்றேந்தும்
பொறைமையு நன்றால்; என்றுபு லந்து புறம்போந்தான்.(16)

வேதியன் நிற்குந் தன்மைதெ ரிந்தான் மெலிவுற்றான்
சாதியின் மிக்காய்! வந்தது னக்கென் தளர்கின்றாய்
ஓதுதி யென்னக் காவல னைப்பார்த் துரைசான்ற
நீதியு ளாய்!கேள் என்றுரை செய்வான் நிகழ்செய்தி. (17)

இன்றிவ ளைக்கொண் டார்வட நீழல் இடையிட்டுச்
சென்றுதண் நீர்கொண் டியான்வரு முன்னிச் சிலைவேடன்
கொன்றயல் நின்றான் என்றலை யூட்டுங் கொலைவேல்போல்
வன்திறன் மாறன் செவிநுழை வித்தான் மறையோன்ஆல்.

அந்தணன் மாற்றந் தன்னையும் உட்கொண் டறநோக்குஞ்
சந்தன வெற்பன் மறவனை நோக்கத் தாழ்ந்தன்னான்
எந்தைபி ரானே! நாயடி யேனின் றெய்ப்பாற
வந்துபு குந்தேன் அந்தம ரத்தின் மருங்கோர்சார். (19)

ஐயே! நானுங் கொன்றவன் அல்லேன் கொன்றாரைக்
கையேன் வேறுங் கண்டிலன் என்றான். இவளாகத்
தெய்யே றுண்ட வாறெவன் என்றார் எதிர்நின்றார்,
மெய்யே ஐயா! யானறி யேன்இவ் விளைவென்றான். (20)

இக்கொலை செய்தான் யான்அலன் என்று துளனென்னத்
தக்கவ னேயோ? தறுகண் மறவ னுரைமெய்யோ?
சிக்கலு றுத்தால் அல்லதை யுண்மை செப்பானென்
றொக்கவு ரைத்தார் மந்திரர் உள்ளார் பிறர்எல்லாம். (21)

மன்னன் தானு மற்றது செய்ம்மின் எனமள்ளர்
பின்னந் தண்டஞ் செய்தனர் கேட்கப் பிழையில்லான்
முன்னஞ் சொன்ன சொற்பெய ரானும் மொழியாநின்
றின்னந் தீரத் தேருமின் என்றான் என்செய்வான். (22)

ஆற்றலு றுக்குந் தண்டமும் அஞ்சான், அறைகின்ற
கூற்றமும் ஒன்றே, கொன்ற குறிப்பு முகந்தோற்றான்.
மாற்றவ ரேயோ? மாவோ? புள்ளோ? வழிவந்த
கோற்றொடி யைக்கொன் றென்பெற லல்லான்? கொலைசெய்வாது.

கைதவன் ஆமிக் கானவ னேயோ? பிறரேயோ?
செய்தவர் யாரே? இக்கொலை வேட்டஞ் செய்தோர்மா
எய்தஇ லக்கில் தப்பிய கோல்தான் ஏறுண்டிம்
மைதவழ் கண்ணாள் மாய்ந்தன ளேயோ? அறியேனால்.(24)

என்று முன்னித் தென்னவன் இன்னம் இதுமுன்நூல்
தன்னால் ஆயத் தக்கதை யென்றான்; தகவின்தம்
அன்னார் அந்நூல் ஆய்ந்திது நூலால் அமையாதால்
மன்னா! தெய்வத் தாலே தேறும் வழியென்றார். (25)

வேந்தர்கள் சிங்கம் வேதிய னைப்பார்த் திதுதீர
ஆய்ந்துன துள்ளக் கவலையொ ழிப்பேன் அஞ்சேல்நின்
ஏந்திழை ஈமக் கடனிறு விப்போ தென்றேவித்
தேந்துணர் வேங்கைத் தார்மற வோனைச் சிறைசெய்தான்.

மின்னனை யாள்தன் செய்கடன் முற்று மீண்டோனைத்
தன்னமர் கோயிற் கடைவயின் வைத்துத் தானேகிக்
கொன்னவில் வேலான் தங்கள் குடிக்கோர் குலதெய்வம்
என்னவி ருந்தா ரடிகள்ப ணிந்தான் இதுகூறும். (27)

கொச்சகக் கலிப்பா

மன்றாடு மணியே !யிம் மறவன்தான் பார்ப்பனியைக்
கொன்றானோ ? பிறர்பிறிதால் கொன்றதோ ? இதுஅறநூல்
ஒன்றாலும் அளப்பரிதாக் கிடந்ததால், உன்னருளால்
என்றாழ்வு கெடத்தேற்றாய் என்றிரந்தான் அவ்வேலை. (28)

திருநகரின் புறம்பொருசார் குலவணிகத் தெருவின்கண்
ஒருமனையின் மணமுளதங் கந்தணனோ டொருங்குநீ
வருதிஉன துளங்தேறு மாற்றம்எலாந் தேற்றுதும்என்
றிருவிசும்பின் அகடுகிழித் தெழுந்ததால் ஒருவாக்கு. (29)

திருவாக்குச் செவிமடுத்துச் செழியன்தன் புறங்கடையில்
பெருவாக்கு மறையவனோ டொருங்கெய்திப் பெரும்பகல்
[போய்க்
கருவாக்கு மருண்மாலைக் கங்குல்வாய்த் தன்னைவேற்
றுருவாக்கிக் கடிமனைபோய் ஒருசிறைபுக் கினிதிருந்தான்.

அன்றிறைவன் அருளால்அங் கவர்கேட்க அம்மனையின்
மன்றன்மகன் தனக்களந்த நாள்உலப்ப மறலிஇருட்
குன்றமிரண் டெனவிடுத்த கொடும்பாசக் கையினர்வாய்
மென்றுவருஞ் சினத்தவரில் ஒருவன்இது வினவுமால். (31)

இன்றேஇங் கிவனுயிரைத தருதிர்என இரும்பகட்டுக் [பில்
குன்றேறுங் கோனுரையால் கொள்வதெவன்? பிணியுடம்
ஒன்றேனும் இலனொருகா ரணமின்றி உயிர்கொள்வ
தன்றேஎன் செய்தும்?என மற்றவன்ஈ தறைகிற்பான். (32)

ஆற்றுலே றுண்டகனை அருகொதுங்கும் பார்ப்பனியைக்
காற்றுல்வீழ்த் தெவ்வாறு கவர்ந்தேம்அப் படிஇந்தச்
சாற்றுர வாரத்தில் தாம்பறுத்துப் புறநின்ற
ஈற்றுவை வெருளவிடுத் திவனுவி கவர்கென்றுன். (33)

அந்தமொழி கேட்டரசன்"அருமறையோய்!கேட்டனையோ
இந்தமொழி" எனப்பனவன்"இவன்இவ்வா றிறந்தால்என்
பைந்தொடியாள் இறந்ததும்அப் படியே ;என் மனக்கவலை
சிந்தஇது காண்பேன் "என் றெருங்கிருந்தான் தென்ன
[ணெடும். (34)

ஓட்டியபல் கிளைதுவன்றி ஒல்லொலிமங் கலந்தொடங்கக்
கொட்டியபல் இயமுழங்கக் குழூமியஓ சையின்வெருண்டு
கட்டியதாம் பிறப்புனிற்றுக் கற்றுவொன் றெதிர்ந்தோடி
முட்டியதால் மணமகனை முடிந்ததால் அவன்ஆவி. (35)

மணமகனே பிணமகனுய் மணப்பறையே பிணப்பறையாய்
அணிஇழையார் வாழ்த்தொலிபோய் அழுகைஒலி யாய்க்
[கழியக

கணமதனில் பிறந்திறும்இக் காயத்தின் வரும்பயனை
உணர்வுடையார் பெறுவருணர் வொன்றும்இலார்க்
[கொன்றும்இலை. (36)

கண்டான்அந் தணன்என்ன காரியஞ்செய் தேன்எனத்தன்
வண்டார்பூங் குழன்மனைவி மாட்சியினுங் கழிதுன்பங் [பா
கொண்டான்மற் றவனெடுந்தன் கோயில்புகுந் தலர்வேப்
தண்டாரான் அமைச்சர்க்கும் பிறர்க்கும்இது சாற்றினுன்.

மறையவனை இன்னும்ஒரு மணமுடித்துக் கோடிஎன
நிறையவரும் பொருளீந்து நீபோதி எனவிடுத்துச்
சிறைஅழுவத் திடைக்கிடந்த செடித்தலைய இடிக்குரல
கறையுடல்வே டனைத்தொடுத்த கால்யாப்புக் கழல்வித்து.

தெளியாதே யாமிழைத்த தீத்தண்டம் பொறுத்திளன
விளியாஇன் அருள்சுரந்து வேண்டுவன நனிநல்கி
அளியானு மனத்தரசன் அவனைஅவ னிடைச்செலுத்திக்
களியானை விழவெய்த கௌரியனைப் போய்ப்பணிவான்.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆதரம் பெருகப் பாவியேன் பொருட்டெம்
அடிகணீர் அரும்பழி யஞ்சு
நாதராய் இருந்தீர் எந்தையார்க் குண்டே
நான்செயத் தக்கதொன் றென்னாக்
காதலிற் புகழ்ந்து பன்முறை பழிச்சிக்
கரையில்மா பூசனை சிறப்பித்
தேதமக தகற்றி உலகினுக் குயிராய்
இருந்தனன் இறைகுலோத் துங்கன். (40)

பரஞ்சோதி முனிவர்.

## நளன் திருமணம்

### (நைடதம்)

கலி விருத்தம்

அழகு வாய்ப்பவ னைபவ ரண்ணலை
தொழுது நல்லருள் பூண்டுசு டர்விரி
மழவு நன்கதிர் மால்வரை சேர்ந்தெனச்
செழும ணிப்பொன்தி கழ்முடி சூட்டினர். (1)

புயங்க ளென்னும்பொ லங்கிரி மீதுவான்
தயங்கு சோதிக்க திர்கட வழ்ந்தெனக்
கயங்கொள் வள்ளைக்க வின்கவர் காதினில்
வயங்கு பைம்பொன்ம ணிக்குழை சேர்த்தினர். (2)

பூம லர்ச்செழுங் கற்பகம் புல்லிய
காமர் வல்லியெ னக்கவின் செய்திடத்
தூம ணிச்சுடர் தூங்குபொ லங்தொடி
தேம லர்த்தொடை திண்புயஞ் சேர்த்தினார். (3)

துளங்கு தெண்டிரை சூழ்கடல் வையகம்
அளந்து கோடற்க ருவிலைப் பூந்துகில்
விளங்கு பொன்னங்கி ரியினை வெண்முகில்
வளைந்த தென்னம ருங்கினிற் சாத்தினார். (4)

பாந்த ளேந்திய பார்பொது நீக்கிய
ஏந்தல் சேவடிப் போதின்எ ழில்பெறு
வேந்தர் பொன்முடி தேய்த்துவி ளங்கிய
காந்து பைம்பொற் கனைகழல் வீக்கினார். (5)

இன்ன பேர்அ ணியாவும் எழில்செயத்
துன்னி எங்கு முழவந் துவைத்திடப்
பொன்னஞ் சூழிப் புகர்முக வெற்பின்மேல்
மன்னர் மன்னன் மகிழ்ச்சியோ டேகினான். (6)

நேமி சூழ்ந்த் நெடுநிலை மன்னவர்
தாம வெண்குடை தாங்கினர் பின்வர
வாம மேகலை மங்கையர் அங்கையின்
காமர் செம்பொற் கவரிஇ ரட்டவே. (7)

தண்ணந் தாமரைத் தாக்கணங் கன்னவர்
கண்ணு நெஞ்சு முவந்து களிப்புற
எண்ணில் வேதியர் ஆசி இயம்பிட
வண்ண மாமணி மண்டபத் தெய்தினான். (8)

கள்ள ருமலர் நாற்றிஎண் காவத
முள்ள கன்ற ஒளிர்மணி மாடத்தின்
பிள்ளை மான்நிகர் நோக்கியைப் பெய்கழல்
வள்ள லோடு மணத்தவி சேற்றினார். (9)

உதக நல்குநல் லோரை இஃதென
விதியின் நாடிக் கணிதர்வி ளம்பலும்
பதலை ஆர்த்தெழப் பாவையை நல்கிய
மதும லர்த்தொடை மன்னெழுந் தானரோ. (10)

கமல மீதுசெங் காந்தள் அலர்ந்தெனக்
குமரன் அங்கையில் கோல்வளை செங்கைவைத்
திமய மாதும் இறைவனும் போலவாழ்ந்
தமைதிர் என்ன அரும்புனல் நல்கினான். (11)

சாந்த மூழ்கு தடம்புயன் ஆரழற்
கேய்ந்த யாவும் இனிதுமு டித்தபின்
ஆய்ந்த நான்மறை யின்வழி ஆய்இழை
காந்தள் மெல்விரற் கைப்பிடித் தானரோ. (12)

பொங்கு செந்தழல் சூழ்வந்து பூம்பொரி
செங்கை ஆரச்சொ ரிந்து திருமகள்
பங்க யப்பதம் பைம்பொனின் அம்மிவைத்
தங்கண் வானத் தருந்ததி காட்டினாள். (13)

ஏனை உள்ளன யாவுமு டித்தபின்
மானின் நோக்கிஓர் வல்லியின் ஒல்கிப்போய்த்
தானை அங்கடல் தாதைபொன் தாளினில்
தேன வாங்குழல் தேமலர் சூட்டினாள். (14)

சென்னி தாழ்ந்து வணங்கிய தேமொழி
மின்ன னாளொடு வந்துவி தர்ப்பர்கோன்
பொன்னந் தாமரைப் பூவையு மாலும்போல்
மன்னர் கோனொடும் வாழ்கென வாழ்த்தினான். (15)

கோதில் நான்மறைக் கோதமன் ஆதியா
மாத வத்துமு னிவரு மன்னருங்
காதல் வேலை கரைஅழிந் தோங்கிட
ஆத ரத்தொடும் ஆசிஇ யம்பினார். (16)

அதிவீரராம பாண்டியர்.

## நரியும் பருந்தும்

### அரங்கநாத கவிராயர் பாரதம்

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

உறையுமந் தணர்தங் குலத்தினில் ஒருவன்
 உதவிய மகன்உயிர் நீங்க
மறையவர் சூழக் கொண்டுபோய் ஈம
 வனத்தினிற் கிடத்தியே கூடி
முறைமுறை யாக அழுதிடுங் காலை
 முதிர்சிறைத் துண்டவாய்ப் பருந்து
நிறைதர விழிநீர் அழுவதென்? நீவிர்
 நெடிதிரங் கிடில்உயிர் வருமோ ? (1)

பிறந்தவர் தம்மில் இறந்திடா திருந்த
 பெற்றியோர் உளர்கொலோ? பிறந்தால்
இறந்திடல் திண்ணங் கூடிநீர் இடுகாட்
 டிருப்பது தகாதென ஆசை
துறந்தகல் போதோர் இகலன்ஆங் கெய்தித்
 தொடர்ந்தவர் தம்மையே கூவி
நிறந்தனில் மகவை அணைத்தினஞ் சற்று
 நேரநின் றழுதலா காதோ ? (2)

ஆருயிர் அனைய மகவினை விடுத்தே
 அகன்றிட மனதுவந் ததுவோ?
சூரியன் குடபால் வீழ்ந்திலன் இந்தத்
 தோன்றலும் பிழைக்கினும் பிழைக்கும்
வாருமென் றழைக்க அவ்வயின் அடுத்து
 வாய்திறந் தரற்றிடுங் காலைப்
பேருணர் வில்லாப் பேய்களே! அழுது
 பிதற்றிடில் போனது வருமோ ? (3)

எள்ளள வேனும் புத்திஇல் லாமல்
இகலனூர் வார்த்தையை மனத்துள்
கொள்ளவுந் தகுமோ இன்பதுன் பங்கள்!
கூறிடில் தொந்தம தன்றோ?
தள்ளுபட் டுலர்ந்த மரந்தளிர்த் திடுமோ?
தந்தையார்? பிள்ளையார்? காலம்
உள்ளவா றமைந்த தகலுமின் என்ன
ஒண்பருந் திகலன்ஆங் குரைக்கும். (4)

சாலவே இரக்கம் அற்றவெம் பருந்தின்
தன்னுரை வினவிடல் ஆமோ?
ஞாலமேல் பார்க்கும் பருவமே பார்த்தால்
நன்மைவந் தணுகில்ஒண் ணுதோ?
காலனோ டரனுங் கூடிடு வானோ?
கன்றினை இழந்திரங் கிடும்ஆன்
போலவே வருந்தல் கண்டுளம் பொறுமல்
புகன்றனன் என்னமீன் டனரே. (5)

ஆயிர மியாண்டிவ் வனத்திருந் தனன்யான்
ஆருயிர் இறந்தவர் பிழைத்துப்
போயின வாறு கண்டிலேன் நீவிர்
புலம்பல்சேய் செவிவின விடுமோ?
வாயுரை தருமோ? பார்க்குமோ? என்கொல்?
மதியிலீர்! உடலநித் தியமே
ஏயஎன் மொழிகொண் டேகுவீர் எனப்பா
றிசைத்திட ஏகுவான் இயைந்தார். (6)

மீட்டுமங் கவரைக் கூவியே இகலன்
விவேகம்இ லாதுசெல் கின்றீர்
தீட்டுசிந் தூர வாண்முகங் காணில்
சேய்பிழைத் திடுங்குறி உளது

தோட்டுமென் கமலங் குவிந்தில செந்தேன்
சொரிதரும் ஆம்பல்விண் டிலவா
நீட்டிய போது கண்டுபோம் என்று
நிகழ்த்திட இசைத்திடுங் கங்கம். (7)

எரிவிழிப் பேழ்வாய் நெட்டுடல் குறுந்தாள்
இளம்பிறை எயிற்றிரும் பூதம்
விரிதலைப் பிசாசு கருநிறத் தரக்கர்
மேவிடு மாலையி னீவிர்
பிரிவுறு திருக்கில் உங்களார் உயிர்க்கும்
பிழைவரும் போம்இனி என்னப்
பரிவுபோல் தத்தம் காரியங் குறித்தே
பற்பல பகர்ந்தவஞ் சனையும். (8)

இருதிறன் மொழியான் மயங்கியே மகவிட்
டேகிடா திவர்படுந் துயரும்
பொருதிரைக் கங்கை அணிசடைப் பெருமான்
பொன்மலை வல்லியோ டுணர்ந்து
பருதிமேல் திசையில் வீழ்வதன் முன்னம்
பாலனுக் காருயிர் அளித்துக்
கருதிய இகலன் பருந்திரண் டுக்குங்
கடும்பசி உறுவாங் கொடுத்தான். (9)

பகற்பொழு தகல்முன் தனக்கிரை ஆகப்
பார்த்தது பருந்திருள் வந்தால்
அகப்படுந் தனக்கென் றெண்ணிய திகலன்
அருமக வுய்ந்திடும் பொருட்டால்
மிகப்படுந் துயர்கொண் டுழந்தணர் மறையோர்
மேதினி மீதினில் தாம்தாம்
சுகப்பட நினைப்பார் எம்பெரு மான்தன்
சூழ்ச்சிஇன் றுய்முடிந் திடுமே. (10)

அரங்கநாத கவிராயர்.

# நரி வென்றி

தேனளவிப் பாட்டிசைக்குஞ் செய்ய மலர்க்கிளைகள்
வானளவு நீண்மரங்கொள் மாவனத்துத்—தானரிய
தந்திரத்தின் மிக்க சதுரார் நரியொன்றுங்
கந்திறத்தின் வாழ்ந்ததுவால் ஆர்ந்து. (1)

ஓடித் திரிந்துழன்றும் ஊனொன்றுங் கிட்டாதே
வாடித் தளர்ந்தொருநாள் மற்றிருந்து—நாடியே
என்னேகாண் இன்றெனக்கிங் கெங்கும் உணவிலையே
என்னேநான் செய்வன் இதற்கு. (2)

என்னா மனங்கவன்றுங் கேங்கி இருக்கையிலே
பன்னாள் பயின்ற பழஞ்செருப்பு—முன்னே
இரண்டிருக்கத் தானோக்கி எண்ணுமால் தன்னுள்
மருண்டமதி யோடிருந்து மன். (3)

தேர்ந்து தெளியாமற் செய்கருமத் தால்துன்பஞ்
சார்ந்து வருத்துமெனச் சாற்றுவர்நாம்—தேர்ந்தறிந்தே
இச்செருப்பை நல்உணவா ஏற்றலன்றேல் வேடுவனால்
வைச்சவலைக் குட்புகலா மற்று. (4)

அந்தோ ! கொடும்பசியால் அங்கிங்கு மாவுழன்று
நொந்தேன் உணவின்றி நோய்தீர்க்க—வந்த
மருத்துவரே போல்வந்தீர் மற்றிச் செருப்பை
இருத்தியவர் ஆரோ?நீர் இங்கு. (5)

தம்முயிர்போல் எவ்வுயிருந் தாமென் றினிதளித்தல்
செம்மை எனல்உணர்ந்தோர் செல்நெறியீர்—அம்மம்ம !
நற்சமயத் தேவந்தீர் நாடுநல மார்மக்கள்
இற்செறிய வாழ்வீர் *இனிது. (6)

ஒருசெருப்பை எற்கின் றுணவா யளிக்கின்
இருபணம்யான் உண்டவுடன் ஈவேன்—திருவுளந்தான்

47060
...லையடிகள் நூ...
...MALAI ADIG...

யாதோ ? உரைத்தருள்வீர் யாவருக்கும் வெம்பசியாந்
தீதோவச் செய்தல் திறம். (7)

என்று உரைத்தாங் கெவரேனுந் தாமிருப்பின்
முன்று வருவர்என முன்னியே—அன்னசெருப்
புள்ள திசையை யுறவெதிரே நோக்கியதால்
கள்ள மனத்தால் கணித்து. (8)

அந்நரியின் தந்திரத்தை யாய்ந்தங் கறிவதற்கா
உன்னிஅதன் முன்செருப்பாங் குற்றிருக்கத்—தன்னரிய
நற்றிறத்தாற் செய்த நவில்வனத்துத் தெய்வமதை
உற்றுறத்தான் கேட்டுரைக்கும் ஊங்கு. (9)

ஆர்ந்த கலையறிஞர் ஆய்ந்துரைத்த நல்நெறிகள்
தேர்ந்த எழில்நரியே ! செப்பியவா—நேர்ந்த
இரும்பசியைப் போக்கஅவற் றேற்றதனை உண்டு
தரும்பணங்கள் தாமிரண்டுந் தா. (10)

ஆங்கதனைத் தான்கேட் டவற்றொன்றைத் தின்றுநரி
ஓங்குபசி தீர்ந்துடனே ஓடியதால்—ஈங்கவன்வந்
தென்றன் பணந்தருக என்றுமுன் ஏகுதலே
நன்றென் றுளந்துணியா நன்கு. (11)

ஓடியொரு தூறதனை உற்றாங் கொளிந்துறலும்
பீடியலும் அத்தெய்வம் பின்றொடர்ந்து—கூடிமுன்
என்னேநீ என்பணத்தை ஈந்திலைமற் றீங்குற்றாய்
நன்னேய முள்ளாய் ! நவில். (12)

என்றுரைக்கக் கேட்டவ் வெழில்நரியான் உற்றதுயர்
ஒன்றொழிக்க எண்ணவே றொன்றுளதாய்—இன்றீங்
கலைத்திடுமால் ஈதென் அருந்துயரம் ? வேடன்
வலைத்தப்பத் தீச்சூழ்ந்த மாண்பு. (13)

என்று நினைந்தோடி ஏய்ந்தமற்றோர் தூற்றினிடைத்
துன்று மறைந்திருப்பச் சொல்திறஞ்சார்—அன்ன
அருந்தெய்வம் அங்கும் அடைந்துபணங் கேட்க
வருந்தியதே நெஞ்சயர்ந்து மற்று. (14)

அந்தோ! கடன்படுதல் ஆகாது மற்றதனால்
நொந்தே மனஞ்சலிக்கு நோய்பெருகும்—வந்த
கடன்காரர்க் காணிற் கலக்கமுறுஞ் சொல்லின்
திடங்கோடுஞ் சேருந் திகைப்பு. (15)

கலங்கா வுரஞ்சால் கலைவலோர் நெஞ்சுங்
கலங்க வரும்இக் கடனும்—நலங்கெடுக்கப்
பொங்குபகை எங்ஙன் பொறுக்கின்றார் மாந்தர்சிலர்
இங்கிதுமா ஆச்சரிய மே. (16)

உயிர்விடுதல் அன்றேல் உறுசூழ்ச்சி தன்னால்
செயிர்மி கும்இவ் வெந்துயரஞ் செய்ய—அயர்வின்றிப்
பின்றொடர்வோன் தான்மயங்கப் பேதுறுத்தல் என்றிவற்றின்
ஒன்றேநாம் செய்வதற்காம் உற்று. (17)

உயிர்விடுதல் நன்றாகா துற்றதொரு சூழ்ச்சி
மயர்வின்றிச் செய்து மயக்கி—வயமுறலே
தக்கதென உன்னிநரி தான்விரைந்தாங் கோடியதால்
தொக்கமுள்ளார் தூற்றினிடைத் தோய்ந்து. (18)

சோர்மனத்தோ டன்னநரி தூற்றினுள்ளாய் ஓடியதால்
கூர்முள்ளுங் கல்லின் கொடுமுனையும்—நேர்மைஅற
உற்றுடற்கண் கீற ஒழுகியதே செங்குருதி
அற்றதொரு கண்ணும் அதற்கு. (19)

மன்னும் உரஞ்சோர்ந்து வாம்விரைவார் கால்சோர்நது
பன்னும் ஒருமறைவாம் பாங்கிருப்ப—நன்னயங்கூர்
அத்தெய்வம் அங்கும் அடைந்துபணங் கேட்கநரி
சத்தெய்திக் கூறுந் தகைந்து. (20)

ஐயரீ ! கூறும் அருநரிக்கு வாய்ப்புடைய
செய்ய விழியிரண்டுஞ் செவ்வியவோ?—உய்யவிரை
மாணடிகள் வன்மையவோ ? வண்ணவுடல் நன்மையதோ ?
மாணவுரை என்றதுவால் மற்று. (21)

கண்ணிரண்டுஞ் செம்மையவே கால்நான்கும் வன்மையவே
வண்ணஉடல் நல்ல வளத்ததுவே—எண்ணம்
வளர்நரியே ! என்றதால்அம் மாவனத்துத் தெய்வங்
கிளர்நரியின் தந்திரச்சொல் கேட்டு. (22)

கண்ணொன்று பொட்டையதலால் கால்நான்குஞ் சோர்வினவால்
வண்ணஉடல் நோயின் வருந்துவதால்—எண்ணலுறும்
இன்னஇயல் என்னியலால் இன்புடையோய் ! நீகண்ட
அன்னரியான் அல்லேன் அறி. (23)

எனஉரைப்பக் கெட்டவ் வெழில்வனத்துத் தெய்வம்
மனமகிழ்ந்து மாண்நரியே ! மற்றுன்—துனியொழிந்து
வாழ்கஎன வாழ்த்தி மறையநரி அக்கானில்
தாழ்வகன்று வாழ்ந்ததின்பஞ் சார்ந்து. (24)

கா-ர-கோவிந்தராஜ முதலியார்.

## கடோற்கஜன் தூது

### வில்லிபுத்தூரார் பாரதம்

பதின்மூன்றாநாட் போரில் சயத்திரதன் அருச்சுனனுடைய மைந்தனை அபிமன்னனைக் கொன்று விட்டனன். அதனை உணர்ந்த அருச்சுனன், "நாளை மாலைச் சூரியன் மறை தன்முன் எவ்வளவாகக் காவல் மிகுத்திருப்பினும் சயத்திரதனைக கொல்லுவேன் ; அங்ஙனங் கொல்லேன் ஆயின், எரியிடை மூழ்குவேன்," என்று சபதம் செய்து சிவபெருமானிடம் அதற்குரிய படைக்கலங்களைப் பெறுதற்பொருட்டு ஸ்ரீ கண்ணபிரானுடன் கயிலைக்குச் சென்றனன். தருமர்

அதனைத் துரியோதனனுக்குத் தெரிவிக்கும்படி கடோற்கஜனை அவனிடம் அனுப்பக் கடோற்கஜன் அவனது பாசறைக்குச் சென்றான்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

எதிரெதிர் கொற்றவன் வாயிலின்
நின்றவர் யாரென வெய்துதலும்
அதிர்முர சக்கொடி யோன்அர
வக்கொடி அரசன்இ டைப்பகர்வான்
முதிரஉ ரைத்ததொர் மொழியுள
தச்சொன்மொ ழிந்திட வந்தனன்யான்
எதிர்அறு வெற்றிஅ ரிக்கொடி
யோன்மகன் என்றனன் விக்ரமனே. (1)

அம்மொழி தீயுறும் ஏறென
நீடவை அரசர்செ விப்படஓர்
செம்மொழி அற்றவன் மொழிவழி
சென்றொரு சிறிதும தித்தருளான்
நும்மொழி விட்டொரு மெய்ம்மொழி
கேள்என நோதகு நெஞ்சினனும்
வெம்மொழி வித்தக எம்மொழி?
நுந்தைதன் மெய்ம்மொழி என்றனனே. (2)

தன்திரு மைந்தனை மௌலிது
ணித்தசய த்திர தன்றனைவாள்
வென்றிகொள் காவலர் காவல்மி
குப்பினும் வெயிலவன் வீழ்வதன்முன்
கொன்றிடு வேன்அது தப்பின்அ
ருங்கன லூடுகு தித்திடுவேன்
என்றுமொ ழிந்தான் வாழ்கயி
லாயமும் எய்தினன் வில்விஜயன். (3)

வஞ்சனை யால்அம ரிற்பகை
  தன்னைம லைப்பது பாதகமென்
றஞ்சினன் ஆதலின் நீயறி
  யும்படி ஐயன்வி டுத்தனனால்
எஞ்சினன் நாளைஉன் மைத்துனன்
  என்றுகொள் என்றனன் வன்திறல்கூர்
நெஞ்சினில் வேறொரு சஞ்சல
  மற்றநி சாசரன் மாமருகன். (4)

வேறு

மன்மைந்தர் பலரொடும்போய் மறித்தொருவர்
  மீளாமல் மலைந்து வீழ
என்மைந்தன் இறந்திடவும் யாதொன்றும்
  புகலாமல் இருக்கின் றேன்யான்
தன்மைந்தன் இறந்தனனாந் தான்றழலின்
  மூழ்குவனாஞ் சபதங் கூறி
வின்மைந்தின் மிகுததவருக் கழுதிரங்கி
  அரற்றுவது வீரந் தானோ? (5)

பயத்திரவின் நடுங்கிஅரன் பருப்பதம்புக்
  கவன்கொடுத்த படையும் வாங்கி
வயத்திரத மால்கடவ வந்தெதிர்தோன்
  றுவனாகில் மகர மோதுங்
கயத்திரவி விழுவதன்முன் கையறுதன்
  புதல்வனைப்போற் களத்தின் மாளச்
சயத்திரதன் கொடுங்கணையால் தான்படுதல்
  உறுதிஎனச் சாற்று வாயே. (6)

என்னினும்பார் தனக்குரியன் சிலைத்தொழிலில்
  சிலைக்குருவாய் எவரும் போற்று
மன்னினுந்தான் மிகவலியன் தண்டெடுத்தால்
  உந்தையினும் வலியன் சால

உன்னினுந்தோள் உரனுடையன் மதியாமல்
இப்படிநீ உரைக்கல் ஆமோ?
தன்னினும்போர்க் கெளியனோ! சயத்திரதன்
தான்என்று சாற்று வாயே. (7)

ஆளையா ணிலைஅறிவ தல்லதுமற்
றறிபவர்யார்? அணிந்த போரின்
நாளையார் வெல்வரெனத் தெரியுமோ?
வெனநவின்று நகைத்தான் மன்னோ
பாளைவாய் நெடுங்கமுகின் மிடறொடியக்
குலைத்தெங்கின் பழங்கள் வீழ
வாளைபாய் குருநாடும் எந்நாடு
முழுதாளு மன்னர் கோமான். (8)

தாரரசன் மகன்துச்சா தனன்மகன்சல்
லியன்மகன்வேல் சகுனி என்னும்
பேரரசன் மகன்முதலா எத்தனைபேர்
பட்டாலும் பெரிய தன்றே
பாரரசா ளுதற்கிருந்த பார்த்தன்மா
மகன்ஒருவன் பட்டான் ஆகில்
ஆரரசுக் கினிஉரியார் அந்தோ!என்
றுரைத்தான்மற் றங்கர் கோமான். (9)

அங்கிருந்து சயத்திரதன் ஆவிகவர்ந்
திடுவல்என ஆண்மை கூறிப்
பங்கிருந்த உமாபதிபால் பணிந்துவரம்
பெறச்சென்றான் பார்த்தன் ஆகில்
கொங்கிருந்த தாராய்!நின் குடைநிழற்கீழ்
இதுகாலங் கூட்டங் கூடி
இங்கிருந்த வேழையரேம் என்செயமற்
றிருக்கின்றேம்? என்று சொன்னான். (10)

இவன்மொழிந்த இகல்உரைகேட் டிடிம்பன்மரு
 மகன்வெகுளுற் றென்சொன் னாலும்
அவனிதல முழுதுமினி அரசாள்
 நினைந்திருந்தீர் அறிவி லீர்காள் !
சிவனெரிசெய் புரம்போலும் பாடிவீ
 டழல்ஊட்டிச் சேனை யாவும்
பவனன்மகன் மகன்என்னும் பரிசறியத்
 தொலைத்திடு படுத்து வேனே. (11)

தசைகுருதி மிசையொழுகத் தனித்தனியே
 எதிர்த்தவரைத் தலைகள் சிந்த
விசையன்வர வேண்டுமோ ? மற்றுள்ளார்
 திரண்டுவர வேண்டு மோ ? தான்
நிசைபுலரு முனமுனைந்து நீறுக்கி
 விடுகுவன்எந் நிருபன் சொன்ன
அசைவில்மொழி மறுத்துடற்றல் ஆகாதென்
 றிருக்கின்றேன் அறிகி லீரே. (12)

இருவர்எதிர் எதிர்தம்மில் இகல்பொருதல்
 உலகியற்கை யாருங் கூடிப்
பருவமுறாத் தனிக்குதலைப் பாலகனுக்
 காற்றுமல் பறந்து போனீர்
ஒருவன்நெடுந் தேரழிக்க ஒருவன்மலர்க்
 கைதுணிக்க ஒருவன் பின்னைப்
பொருவன்என அறைகூவிப் பொன்றுவித்தான்
 இதுகொண்டோ ? புகல்கின் றீரே. (13)

வரைக்குவமை பெறுந்தடந்தோள் வீமன்மகன்
 இப்படியே மதியான் ஆகி
உரைக்குமொழி கேட்டிருந்த உரகமணி
 கொடிவேந்தன் உருத்து நோக்கி

இருக்கும்எழில் அவைக்கேற்ப இயம்பாமல்
தன்மதத்தால் இயம்பு கின்ற
அரக்கிமகன் உடனொன்றுங் கழறேல்என்
றனனிருந்த அரசர் யார்க்கும். (14)

பிறகு கடோற்கஜன் சயத்திரதனது உயிர் நீங்கல் தவறாது என்று கூறி மீண்டனன்.

வில்லி புத்தூரார்.

## திருக்குறள்

### " அறம் "

மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்தறம்;
ஆகுல நீர பிற. (1)

அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம். (2)

### " புதல்வர் "

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல். (3)

தம்மில்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. (4)

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (5)

மகன்றந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல் (6)

### " நன்றி "

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. (7)

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் ; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (8)

" கொல்லாமை "

அறவினை யாதெனில் கொல்லாமை ; கோறல்
பிறவினை எல்லாந் தரும். (9)

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க, தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. (10)

திருவள்ளுவதேவர்.

## நாலடியார்

' கல்விப் பொருள் '

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாம்உளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாங்காணேங் கல்விபோல்
மம்மர் அறுக்கு மருந்து. (1)

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற. (2)

" செல்வப் பொருள் "

வடுவிலா வையத்து மன்னிய மூன்றின்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்
நடுவண தெய்தாதான் எய்தும் உலைப்பெய்
தடுவது போலுந் துயர். (3)

நல்லாவின் கன்றாயின் நாகும் விலைபெறாஉங்
கல்லாரே ஆயினுஞ் செல்வர்வாய்ச் சொல்செல்லும்

புல்லீரப் போழ்தின் உழவேபோல் மீதாடிச்
செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல். (4)

“ ஈகை ”

உண்ணான் ஒளிநிறான் ஓங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ!
இழந்தானென் றெண்ணப் படும். (5)

உடாஅதும் உண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர்; வான்தோய் மலைநாட!
உய்த்தீட்டுந் தேனீக் கரி. (6)

“ நட்பு ”

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் ;—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. (7)

கனைகடல் தண்சேர்ப்ப! கற்றறிந்தார் கேண்மை
நுனியில் கரும்புதின் றற்றே.—நுனிநீக்கித்
தூரின் தின்றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரம் இலாளர் தொடர்பு. (8)

“ அறிவு ”

கடல்சார்ந்தும் இன்னீர் பிறக்கு மலைசார்ந்தும்
உப்பீண் டுவரி பிறத்தலால் தத்தம்
இனத்தனையர் அல்லர்; எறிகடல்தண் சேர்ப்ப!
மனத்தனையர் மக்களென் பார். (9)

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழ்இடு வானும், நிலையினு
மேல்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான். (10)

சமணமுனிவர்கள்.

## நிலாத் தோற்றம்

### கலி நிலைத்துறை

தெள்ளு தெண்டிரைக் கருங்கடல் எழுந்தவெண் திங்கள்
புள்ள வாங்கணை மதனனைப் பூம்புனல் ஆட்ட
வள்ளி தழ்க்கருங் குவளைபெய் திரவெனு மடந்தை
வெள்ளி வெண்குடம் ஏந்தினள் ஆம்என விளங்கும். (1)

புலவு நாறுவெஞ் சுறவெறி பொருதிரை முகட்டின்
நிலவு கொப்புளித் துயரிய நிகரில்வெண் மதியம்
அலகில் தாரகை மீன்பயில் ஆரிருட் கடலில்
உலகம் ஆழ்தலும் எழுந்தபுற் புதம்என ஒளிரும். (2)

குறைவில் வெண்மதி தோன்றமெல் குமுதநாள் முகையில்
சிறகர் வண்டுபாண் முரலல்நும் உயிரினில் சிறந்த
இறைவன் வார்திரைக் கடல்முகட் டெழுந்தனன் என்று
அறைய வந்ததூ தர்கள்சொலிற் றோன்றிய தன்றே. (3)

நள்ளி ருட்குறும் பெறிந்தெழு நளிர்மதிச் செல்வன்
விள்ளும் ஆம்பல்வாய்க் கங்குலாந் தெரிவையை வேட்ப
அள்ளி வான்மகள் சிதறுவெண் பொரிஎன அமைந்த
புள்ளி மீனினம் அகல்இரு விசும்பினில் பொடித்த. (4)

திங்கள் வேந்துவெண் தாரகைத் துணைவியர் செறிய
அங்கண் வானகத் தெழுதலும், ஆரமு துகுக்கும்
பொங்கு வெண்கதிர் வெள்ளியம் பிரம்புபார் போர்த்த
துங்க வல்இருள் குறுநில வேந்தினைத் துரந்த. (5)

தாழும் வண்டியிர் தண்மலர்த் தடஞ்சினைத் தருவின்
நீழல் எங்கணுந் துயல்வரு கின்றன நெடுநீர்
ஆழி வெண்டிரை முகட்டெழும் அவிர்மதிக் கதிர்வாள்
போழும் வல்இருள் துணிபல பதைப்பன போலும். (6)

அகல்வி சும்பெனும் ஆவின்மெல் மடிஎனத் தோன்றித்
திகழும் வெண்மதி உமிழ்தரு செழுங்கதிர்த் தீம்பால்
முகைநெகிழ்ந்துதேன் பிலிற்றிய முல்லையம் புறவின்
உகள்பு ளிற்றிளங் கன்றெனச் சகோரநின் றுண்ணும் (7)

துலங்கு வெண்மதித் தூநிலாக் கதிரினின் றிலங்கு
பொலங்கொள் மாடமேல் புதுநிலா மணிபுனல் பொழிதல்
நலம்பெய் நேமியம் புட்குலம் பிரிவுள நலியப்
புலம்பு மாறுகண் டுள்ளநெக் குருகுதல் போலும். (8)

அதிவீரராம பாண்டியர்.

## கடற்கரைக் காட்சி

### நேரிசை யாசிரியப்பா

இளவே னிற்கே யியைந்தவிம் மாலையிற்
காணற் குற்ற கடற்கரைக் காட்சி
மனக்குறு களிசெயு மாண்பென் புகல்கேன் ?
ஒருபாற் புகைக்கல மோங்கலி னிலகின ;
ஒருபாற் புகைரத மோடுத லுற்றது ;
ஒருபான் மண்ணின் தைல முற்றுள
சாலைகள் குன்றெனத் தாம்பல பொலிந்தன ;
அகங்கரைந் தீருயி ரொன்றா யமைதரக்
குறைவி லன்புறக் கூடிய விருவரின்
ஒருவர்தம் வாய்மொழி யொருவர்தம் செவிப்பால்
உற்றெனத் தண்கா லுலவியுற் றதுவே ;
ஒருபாற் சில்லோ ரொண்மீன் சினையன

சிறுமணல் தரையிடைச் செறிந்தமீ மகிழ்ச்சியின்
இருந்தனர், நண்பரோ டின்மொழி பகர்ந்தே ;
சில்லோர் நீரி னணித்தாச் சென்று
வெண்டிரை விநோதம் வியந்துநின் றனரே ;
இளைஞர் சில்லோர் திரையரு கெய்தியும்
ஓடியு முலவியு முளங்களித் தனரே ;
அன்ன காலையி னணிகெழு கதிர்த்திரள்
உலகிடைப் பரப்பி யிலகுதன் றிறத்தால்
ஒருதனிச் செங்கோ லுலகெலா மோச்சிப்
பொலிந்தன னிருந்த பொருவறு பரிதிக்
கஞ்சுபு மறைந்த வாரிருட் டொகைதம்
மாற்றல னவனியை யகன்றனன் மறைந்தமை
ஒருவா றுக வுய்த்துணர்ந் தனவெனும்
ஒருகாற் பற்பல வொண்மணித் திரட்கெலாம்
கரந்துறை யிடமாங் கடலிடைக் கரவா
இருந்தன னென்னி லென்செய் வாமென்
றனுப்பிய தூத ரஞ்சுபு மென்மெல
வந்தென முகிலனம் வானிடை வந்து
பைப்பயக் கடலை யணுகின படிந்து
மீண்டுமம் மாற்றல னீண்டுறு வண்ணம்
பித்திகை யமைத்தெனப் பிறங்குவான் றொட்டுத்
திகழ்ந்தவச் செவ்வி செப்பவு மெளிதோ ?
என்னே ! யென்னே !! யியற்கையின் வளந்தான்
என்னே ! யென்னே !! யிறைவனற் பெருமை
அம்ம ! வம்ம !! சிறுபுலத்
தெம்ம னோரா லியம்புதற் கரிதே. (1)

## கலத்திற்கோர் வினா

*நிலைமண்டில ஆசிரியப்பா*

பொருதிரைப் பெருங்கடல் புக்குலாங் கலமே !
செறிமணிக் கடலிடைச் செல்குவை நீயும்,
மறிந்துறு பிறவியென் வண்பெருங் கடலிடை
மாந்தருஞ் செல்குவர் ; மற்றுநீ கரையைக்
கலங்கரை விளக்கங் கண்டனை யணுகுவை
யன்றியே மற்றுக் கரையே றலையே,
கற்றுறு நெறியினர் கழறுநன் ஞானமென்
கலங்கரை விளக்கங் காணுறின் மாந்தர்
கரையே றிடுவ தன்றியக் கடலிடை
யுலவா ரீதென் ? னுரைமதி நீயே. (2)

## பெண் கல்வி

*நிலைமண்டில ஆசிரியப்பா*

உலகம் படைத்த வுயர்வுக் கெல்லாங்
கலைநல மன்றிக் காரணம் பிறிதெவன் ?
ஆதலி னதனை யாடவர் போல
மாதரும் படைக்கின் மாண்புறு வாரெனச்
செப்புறு மொழியது சீரிதே யாமென
ஒப்பிலா ருலகிய லுணர்கிலா தவரே ;
கற்ற மாதரார் கற்பினிற் பிழைப்பரென்
றுற்றுண ராம லுரைத்திடு வார்சிலர் ;
எங்ஙனம் விளக்கினை யேற்றிவைத் திடினும்
அங்குறு மிருடா னகலுத லனுபவம் ;
ஆயினு மவ்வயி னடுவளி யுறுமைக்
கேயுநல் வகையே யியற்றுதல் வேண்டும் ;
அன்ன வகைபோ லணிசிறு மகளிர்க்குப்
புன்மதி யொன்றும் புகாவிதம் புரிதல்

ஒன்றே நலஞ்செயற் குரியதா மன்றிக்
கல்லா ராக்குங் கரிசல ; அன்றியும்
சிறையிடை வைத்துச் சிதைத்திட லின்றி
நிறையெனுங் குணத்தை நிறையுறக் கொளுவித்
தற்காத் தொழுகுந் தன்மையி னிறுவி
இற்காத் திலகு மியல்பினை விளக்கி
மதிகெழ வளர்க்கு மாண்பின ராக்கும்
இவ்வன்றி யுளவோ வியற்றுநன் றவர்க்கே. (3)

## முந்நீர்க் கடலும், மொழிக் கடலும்

*நிலைமண்டில ஆசிரியப்பா*

வாழிய கடலே! வாழிய கடலே!
வாழிய வுலகின் மன்னிய வுயிர்களை
வான்முகி லுருவாய் வளர்த்திடுங் கடலே!
நீதான்,
அளக்க லாகா வளவினை யாகிக்
கலக்க லாகாக் கதிப்பினை மேவி
அகன்றவிர் கின்றனை ; அன்றியு நின்னுள்
உரைக்க லாகா வொண்பொருள் கொண்டனை ;
நின்போற் குறிக்கொளு நீர்மைய தாகும்,
பொன்போற் போற்றிப் புகன்மொழிக் கடலும் ;
அன்பா னின்பா லணுகுவோர் தம்மிற்
சில்லோர் நின்னைக் காண்குபு செல்குவர் ;
சிலர்நின் பெருமையின் றிறம்வியந் துரைப்பர் ;
சில்லோர் நின்பாற் செறிமீன் பிடிப்பர் ;
அரும்பெருந் துறையுண ரறிவினர் சில்லோர்
ஆழக் குளித்துநின் னகத்துற வமைந்த
நவிலெழின் முத்தா நற்பொருள் கொள்ளுவர் ;
நினைவுறு சில்லோர் நின்றுணை கொண்டு
பல்சே ணாட்டின் பகர்வளங் காண்குவர் ;

நலஞ்சார் மொழிக்கட னுறுவோர் தாமும்
இன்ன வகையின ராகுநர் ; என்னே !
உரைசா லும்மிய லொத்துள நேர்மை,
நயத்தகு நுண்புல நாவலோ ருளமும்
வியத்தகு நீர்மையின் விளங்குகின் றதுவே. (4)

## தாமரை யிலைசார் தண்ணீர்த் திவலை

பன்னிரு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

தண்ணங் கமலப் பாசடையிற்
றங்கிப் பொலியுந் தண் திவலாய் !
தமிழி னினிய மொழிமடவார்
தழைபொற் களமார் மாலையுறும்
வண்ணம் பொலிவெண் முத்தமென
வடிவம் பெற்றோ மெனச்செருக்கி
மதியா தொன்றுந் தலையாட்டம்
வாய்ந்தாய் நினது செயனன்றால் ;
எண்ணு மியலி னோர்நூலும்
ஏய்ந்த முறையி னுணராமுன்
எம்போற் புலவரெவ ரென்று
இறுமாப் போங்கு மனத்தினராய்ப்
பண்ணி னினிய கவியியலும்
பயிலார் சிலபுன் கவிசொல்லிப்
படிமே லாட்டங் கொள்கிற்போர்
பதமில் செயலே யொத்ததுவே. (5)

## குயிலும், பாடகச் சிறுவனும்

கற்பக மன்ன நற்பெருந் தருக்கள்
பற்பல செறிந்த பொற்புறு மாப்பொழில்
ஒன்றினி லின்னல மொன்றிய விளைஞன்
நல்லிசை யுணர்ந்தோன் மெல்லிசைக் குரலோன்

வளங்கெழு பரிதி இளங்கதிர் பரப்புறூஉம்
காலைப் போதினேர் பாவிருந் தின்தேன்
கைப்பெனும் படியிசை சொற்பொருட் கியையப்
பாடத் தொடங்கினன்; பாடுபு விடுதோறும்
சிறுகருங் குயிலொன் றருங்குர லோசை
கேட்போர் விழைதரப் பூப்பொலி யொருமரக்
குறுங்கிளை யிருந்து கூவுதல் கேட்டனன்,
'காமர்வண் பொழிலுறை கருங்குயிற் பிள்ளாய் !
பண்ணின் திறமுள பண்புட னுணர்ந்தேன்
இன்னிசை யமுதி னின்பம் விளைதரப்
பாடுதல் கேட்டுப் பணிவுட னிராது
நற்றிறத் தென்றனை நகுவாய் போலக்
கூவு கின்றனை; குரலின் செருக்கோ ?
நின்குர லினிமை நின்னரு முயற்சியின்
எய்திய தன்றால் இயல்பி னமைந்ததே ;
அதனால் நீசெருக் கடைத லடாதுகாண்'
எனக்கருங் குயில்தான் 'இன்னிசைப் புலவ !
நின்னுட னிருந்து நிகழ்த்திசை கற்றோர்
எத்தனை யோரதை யியம்புக' என்னப்
'பதின்மர்' என்னப் பகர்ந்தனன் இளைஞன்;
'அவருள்,
தேர்ந்தோ ரெண்ணெது? செப்புக' என்றது;
'நான்கு'என நவின்றான்; 'நன்றுநன் றவருள்,
யாரிசைப் பாடலை யாவரும் விழைந்து
கேட்கின் றனரது கிளத்துக' என்றது;
' என்னிசைப் பாடலை' என்றனன்; 'ஐய!
இசையி னின்னுட னியல்புறத் தேர்ந்தோர்
நால்வ ராக நயந்துநின் னிசையே
எவருங் கேட்டற் கேதுரை' என்றது ;
'கருங்குயிற் பிள்ளாய்! கண்டுகொள் கிலையோ?

என்குர லினிமை யேதுகாண்' என்றனன்;
' நின்குரற் கினிய நீர்மை யமைந்தது
செயற்கையோ? இயற்கையோ? செப்புக' என்றதால்
சிறுவனுந் திகைத்துச் 'சிறுகருங் குயிலே!
இயற்கையே' என்று வெழிற்சிர மசைத்தனன் ;
இயற்கை யமைதியு மியைந்துறி னன்றிச்
செயற்கை யமைதி சிறப்புறு தறிக;
எங்கெங் கெவரு மிசைத்திடும் படிநலம்
பொங்கி எழுந்து பொலிதரு மவணெலாம்
அருட்பே ராழி யமலன தருளாம்
' இயற்கை யமைதி யியைந்துள தென்று
அறிக நன்கு' என அறைந்ததாற் குயிலே ;
' கருங்குயிற் பிள்ளாய்! கருதிசைக் குரலோய்!
என்செருக் கொழிந்தாங் கென்மனந் தெளியக்
கோதி னன்மதி கூறினை குரவனில் .
உன்னைப் போற்றுவ னுவப்புடன்' என்றுப்
பன்னிச் சென்றனன் பண்வலா னினிதே. (6)

கா. ர. கோவிந்தராஜ முதலியார்.

## முடிசூட்டுச் சிறப்பு

### மேன்மை தங்கிய மகாராஜா ஐந்தாம் ஜார்ஜ்
### இந்திய சக்கரவர்த்தி அவர்களின்
### முடிசூட்டின் போது பாடியது

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருவோங்கு செயல்ஓங்கு தேர்ந்தஅறி
வினர்ஓங்கு தேயம் ஆகும்,
உருவோங்கு மணிமாடம் உத்தமச்சீர்
ஆங்கிலர்தம் உயர்ச்சி காட்ட

வருமோங்கு துவசம்என வானளவி
நிரைநின்று வளங்கள் ஆர்ந்து
மருவோங்கு குழலியரு மகிழஉறும்
இங்கிலாந்தென் வளமார் தேயம். (1)

உலகம்எலாந் தமதினிய வுயர்செங்கோல்
நலம்பெருக்கி ஓங்கும் வண்ணம்
பலகலையின் திறமார்ந்த பகருமதி
மன்னவராம் பண்பார் மேன்மை
அலகில்புகழ் எனுங்கதிரின் அணியார்ந்த
பரிதிகள்தாம் ஆர்ந்து தோன்றும்
வலம்உறுநல் உதயம்எனும் வரையாகி
அத்தேயம் வயங்கு மன்னோ. (2)

கலி விருத்தம்

மண்ணுந்தனி விண்ணும்புகழ் வளமார்தரும் அன்ன
நண்ணும்மெழில் திருநாட்டிடை நல்லோர்எவர் களுமே
கண்ணுந்திரு அருளார்தரு கருணைக்கிடம் இவன்என்
றெண்ணும்படி இனிதுற்றனன் இயல்சார்ச்செனும் இறைவன். (3)

கஞ்சம்பயில் எழில்நோக்கினன் கமலாசன மகள்சேர்
மஞ்சம்பயில் வருமார்புறு மறையோதிறை அன்னன்,
பஞ்சஞ்சுறு பதமேரிஎன் பனிமாமொழி இறைவி
நெஞ்சம்புள குறுநாயகன் நிகரிஇல்எம தரசே. (4)

கலித்துறை

விக்டோரி யாஎன்னும் எமதன்பின்
நிதியான மேதக்கசீர்
எக்காலும் அழியாத இசைஅன்னை
நிகர்என்ன இயல்சீர்த்தியான்

தொக்கான பொருள் நூலின் தொகையோடு
 கலமேவு துறையாறது
மிக்காக அறிவுற்ற மிகுஞான
 சதுராளன் இவன்மேன்மையாய். (5)

ஒருபானோ டோர்ஒன்ப துறுநூறொ
 டொருபத்தோ டொன்றெய்தியே
வருசோதி வருடத்தின் மதிஎட்டொ
 டொருநாலு மனுமாமதி
உருவாரும் அத்தெய்தி உடனொரு
 மிகுமேன்மை உறுநாளதே
திருவாரு முடிசூடு தினமென்று
 பெரியோர்கள் தேர்ந்தோதவே. (6)

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

ஒப்பிலாச் சீர்த்தி வாய்ந்த ஒள்ளிய இந்தி யாளன்
இப்பதி தன்னில் யாரு மின்புற மேரி என்னும்
அப்பனி மலரின் மேய அருள்திரு மகளே அன்ன
செப்புநல் துணைவி யோடு சேர்ந்தனன் இனிது மன்னோ.(7)

தூயநல் நீரி னாற்குத் தூயநீர் ஆட்டி வானில்
தோயவே ஆர்ந்த ஒப்பில் தூமணி மண்ட பத்தில்
ஏயசெம் பொன்னின் ஆகி எழில்மணி குயின்று காந்தி
மேயதாம் பொருவில் சீர்த்தி விளங்கரி அணைஒன் றிட்டபர்.

திருமகள் பாங்கர் ஓங்கச் சிறந்துவீற் றிருக்கு மால்போல்
உருவுறு மேரி யோடும் ஒண்புகழ்ச் சார்ச்சென் றோதும்
பெருமன்வீற் றிருந்தான், சீர்சால் பேசுமெய்ஞ் ஞான மென்று
மருவுபேர்க் குரவன் நெஞ்ச மகிழ்ந்தனன் புனைந்தான் மௌலி. (9)

நேரிசை ஆசிரியப்பா

தேசுலா மௌலி சென்னிகொண் டிடனே
நேசமிக் குறும்எந் நீதியார் மன்னன்

துவக்கக் கல்விக் களித்தனன், தொகையா
உவக்கவே ஐம்பான் இலக்கம் உரூபாய் ;
அரசாங் கஉத்தி யோகத் தமர்ந்தாங்
கொருமதி வேதனம் ஐம்பான் உரூபாய்க்
குட்படப் பெறூஉம் அவர்க்கெலாம் ஓங்குற
நட்புற அரைமதிச் சம்பள நல்கினன் ;
வங்கா ளத்தின் பிரிவினை மாற்றி
அங்கு ளார்க்கெலாம் அளித்தனன் களிப்பே ;
நண்புடன் அமர்ந்துதான் நன்முடி சூடிய
வண்புகழ் டில்லியை வளநகர் ஆக்கினன் ;
இன்னன பலநலம் இயற்றினன் ஆகி
மன்னிய இந்திய மாந்தர்தம் உளம்எலாங்
கொள்ளை கொண்டனன் ; கோதில்
வள்ளல் இவனையாம் வாழ்த்துதல் முறையே. (10)

கா-ர-கோவிந்தராஜ முதலியார்.

## கடவுள் வாழ்த்து

## சீறாப் புராணம்

### எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினுந் தெளிவதாய்ச் சிறந்த
மருவினு மருவா யணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி யனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்தபல் லுயிரின்
கருவினுங் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே. (1)

சிறந்தமெய்ப் பொருளை யழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமு முணர்ந்து
துறந்தவ ரிதயா சனத்திருந் தவனைத்
தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பென்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையு மறந்து
மண்ணினின் மதிமறந் தவரே. (2)

உமறுப் புலவர்.

௬௯

தேம்பாவணி

கலி விருத்தம்

வெருட ருங்குரல் வெஞ்சின வேறுமிழ்ந்
திருட ரும்புயல் பெய்தலி லேத்துவார்,
மருட ரும்புகர் மல்கினு மாறிலாப்
பொருட ருங்கையைப் போற்றுவர் யாருமே. (1)

வளர்ந்த பூங்கதிர் மாழ்கிய நெற்குயிர் ?
உளர்ந்த வான்புயல் ஊட்டிய நீரெனத்
தளர்ந்த வாழ்க்கையைத் தாங்கியில் லோர்க்கிடுங்
கிளர்ந்த வான்கொடை கேழ்த்தெழு மீகையே. (2)

வீரமா முனிவரென்னும் ரெவரண்ட் பெஸ்கி.

# குறிப்புரை

## பெருமாள் திருமொழி

### வித்துவக்கோட்டம்மான் விஷயம்

(1) தரு துயரம்—நீ தந்தருளும் துன்பங்களை, தடாய் எல்—நீக்காயாளுல், சரண்—திருவடி, சரண்—காப்பு. வித்துவக்கோடு—வைணவ தலங்கள் நூற்றெட்டில் ஒன்று, அரிசினம்—வருத்துகின்ற கோபம் (வினைத்தொகை.)

(2) இகழ்வனவே—இகழுதற்குரிய காரியங்களையே (இகழ்வன—வினையாலணையும பெயர். பின்னர், செய்திடினும் என்றலின், முன்னே இங்கு இகழ்வன என்றது இகழும் செயல்களை உணர்த்திற்று,) குலம் மகள்—சிறந்த குடியிற்பிறந்த பெண், குரை—ஒலிக்கின்ற, கழல்...வீரகண்டையை அணிந்த திருவடி (கழல் —வீரகண்டை—அது தானியாகு பெயராய்த் திருவடியை உணர்த்திற்று.)

(3) நோக்கும்—(வந்துவசிக்கக்) கருதும், நோக்காயாகிலும்—கருணைநோக்கம் புரியாய் ஆனுலும், உன் பற்று—உன்னுடைய ஆதரவு, பற்று இலேன்—வேறு ஆதரவு உடையேன் அல்லேன், கோல்—கட்டளையை, நோக்கி—(பின்பற்றிச் சொல்லுதலை) விரும்பி.

(4) வாளால்—கத்தியால், மருத்துவன் பால்—வைத்தியன் இடத்தில்.

(5) திண்—வலிமை, களிறு—குவலயாபீடம் என்னும யானை, வங்கம்—கப்பல், கூம்பு—கம்பம், (உன் இணை அடியே அடையல் அல்லால் எங்குப் போய் உய்கேன் என்றியைக்க.) உய்கேன்—பிழைப்பேன்.

(6) அழல்—வெப்பம், செய்திடினும்—உண்டாக்கினுலும், அந்தரம் சேர்—வானத்திற் பொருந்திய, வெம் கதிரோன்—வெவ்விய கிரணங்களையுடைய சூரியன், வீட்டாவிடினும்—போக்காவிட்டாலும், அந்தம் இல்—அளவு இல்லாத, சீர்—சிறப்பாகிய கலியாண குணங்கள், அகம் குழைய மாட்டேன்—மனங்கரையேன்.

(7) வான்—மேகங்கள் (வான்—ஆகாயம், இது இட வாகு பெயராய் மேகத்தை உணர்த்தியது.) எத்தனை மறந்த காலத்தும்—

எவ்வளவு மிகுதியாக மறந்தபோதினும், பைங்கூழ்—பசுமையாகிய பயிர்கள், மைத்து எழுந்த—(நீர்கொண்டிருத்தலால்) கருநிறமுற்று (ஆகாயத்தில்) தோன்றிய, முகிலே—அம்மேகங்களையே, (அவை போல்) மெய்த்துயர்—உண்மையாகிய துன்பம் (அநுபவித்தே ஆதற்குரிய துன்பம்.) மிக வைப்பன்—மிகவும் வைப்பேன்.

(8) தொக்கு இலங்கி—(வெள்ளநீரால்) திரண்டு விளங்கி, பரந்து—(எங்கும்) பரவி, தொடு—(சகரர்களால்) தோண்டப்பட்ட, கடல் புக்கு அன்றி—கடலிலே புகுந்து (நிற்றல்) அல்லாமல், புறம்—(அதற்கு.) வேறான இடத்லே, மிக்கு—(கருநிறம்) மிருந்து, இலங்கு—விளங்கும், முகில் நிறத்தாய்—மேகத்தைப்போன்ற நிறத்தை யுடையவனே, (நிறத்தாய்—விளிவேற்றுமை; இதன் முதல் வேற்றுமை நிறத்தான் என்பது; குறிப்புவினையா லணையும் பெயர்.) புக்கு—(என்றும் நிலையாகப்) பொருந்தி, இலங்கு —(எவற்றினுஞ் சிறந்து) விளங்குகின்ற, உன் சீர் அல்லால்—உன்னுடைய சிறந்த கலியாணகுணங்களில் அன்றி, புக்கிலன்—(யான் மனம்) சென்றிலேன்.

(9) நின்னையே வேண்டி—உன்னையே அடைய விரும்பி, நீள் செல்வம்—நீண்ட செல்வம் (மிக்கசெல்வம்) வேண்டாதான் தன்னையே—விரும்பாதவனையே, வேண்டும்—(அடையு) விரும்பும், மின்னை சேர்—ஒளியைக் கொண்டிருக்கின்ற, திகிரி—சக்கரம்.

(10) மற்று ஆரும் இல்லேன்—வேறு ஒருவரையும ஆதரவாகக் கொண்டிலேன், (யாரும் என்பது ஆரும் என மருவியது.) கொற்றம்—வெற்றியினையுடைய, வேல்—வேற்படையையும், தானை—அவ்விதச் சேனைகளையும் உடைய, குலசேகரன்—குலசேகரப் பெருமாள், சொன்ன—பாடிய, பத்தினையும்—பத்தையும், வல்லார்—(அவற்றின் பொருளொடு) கற்பவர், நரகம் நண்ணார்—நரகத்தை அடையார்.

## கண்ட பத்து

(1) (இந்திரியம்—ஐந்து, அவை தமிழில் பொறி எனப்படும், மெய், வாய், கண், மூக்கு, செவி.) அந்தரமே—ஆகாயத்திலேயே, (உயிருக்கு ஆதாவில்லாத வழியிலேயே) எனைச் சிவம் ஆக்கி—என்னை மங்களவடிவனாக்கி, அந்தம் இலா—முடிவில்லாத, ஆனந்தம்—இன்பத்தின் வடிவமான இறைவனை, தில்லை—சிதம்பரம், (ஆநந்தத்தைத் தில்லையிற் கண்டேன் என்க.)

(2) வினைப்பிறவி—இரு வினைகளினால் உண்டாகிய பிறப்பு, வேதனையில்—துன்பததில், தளர்வு எய்த—(அத்துன்பத்தினால்) மனந்தளர்ந்து, என்னே—என்ன வியப்பு? இணை இலியை—தனக்கு ஒப்பில்லாத இறைவனை, அனைத்து உலகம்—எல்லா உலகத்தவர் களும், தில்லை அம்பலம்—தில்லையின்கண் உள்ள பொன்னம்பலம்.

(3) உருத்தெரியாத காலத்து—(உண்மைப்பொருள்களின்) உருவத்தை இன்னதென அறியாத காலத்தில் (கடவுள், ஆன்மா, உலகம் என்னும் இவற்றின் உண்மை உருவம இன்னவென அறியும் ஞானமில்லாத காலத்தில்) உள்புகுந்து—(என்) அறிவினுள்ளே புகுந்து, (அம்முப்பொருள்களின் உண்மை உருவத்தை உணரும் ஞானத்தை அளிதது என்றபடி) என் உள்ளம் மன்னி—என் மனத்திலே (யான் தன்பால் அன்பு செய்ய) நிலைபெற்று, கருத்து இருத்தி—(தான் என்னை ஆட்கொள் வேண்டும் எனும்) கருத்தை யுடையவனாகி, தித்திக்கும்—இன்பத்தை அளிக்கும், சிவபதத்தை—சிவபதத்தின் வடிவமாயிருப்பவனை (ஈண்டுச் சிவபதம் என்றது பேரின்பவீட்டை, இறைவனையே சிவபதம் என்றார், இறைவனோடு இரண்டறக் கலத்தலே வீடுபேறு என்பது சைவநூற் கருத்தாதலான்.)

(4) கல்லாத—கல்வி இன்மையினாலாகிய, புல் அறிவின்—அற்ப உணர்வினால், நாயேன்—நாயைப்போன்ற யான், வல் ஆளாய் வந்து—ஆட்கொள்ளுதலில் வலியனாய் வந்து, வனப்பு எய்தி இருக்கும வண்ணம்—யான் அழகை அடைந்து இருக்கும்படி, பசு—நான் என்றெழும் என் ஆன்மத் தன்மையையும், பாசம்—எனது என்றெழும் உலகப்பொருள்களின் தன்மையையும்.

(5) பிறப்பு—பிறவியின் உயர்விற்குக் காரணம், சாதி குலம்—(உயர்ந்த) சாதியும், (உயர்ந்த) குடியும், என்னும்—என்கின்ற; (ஈண்டு, என்னும் என்பது நினைத்தலும், சொல்லுதலுமான இரண்டையுங் குறித்து நின்றது. பிறப்பு என்பது அதன் உயர்வை உணர்த்தி நின்றது. இங்ஙனமன்றிப் பிறப்பு—என் பிறப்பு, சாதி—(உயர்ந்த) சாதியில் உண்டானது, குலம்—குலம்—(உயர்ந்த) குடியில் உண்டானது, என்னும்—என்கின்ற என்றுரைத்தலுமாகும்).

(6) பிறவி தனை—இனிப் பிறத்தலை, (இனிப் பிறத்தற்குக் காரணமான இருவினைகளை என்பதுமாம்.) அற மாற்றி—முற்றும் ஒழித்து, பிணி—நோய், மூப்பு—முதுமை, உறவினொடும்— தமக்குத் துணையாகிய விஷய சம்பந்தங்களோடும், மன்னி—பொருந்தி,

(7) பத்திமையும்—அன்பும், பரிசு—நற்குணங்களும், பசு பாசம்—பசுத் தன்மையையும் பாசத் தன்மையையும், (நான் என்னும் அகப்பற்றையும், எனது என்னும் புறப்பற்றையும்.) அறுத்து அருளி—நீக்கி அருள்புரிந்து, சித்தம் என்னும்—மனமாகிய, திண் கயிற்றால்—வலிமையாகிய கயிற்றினால், திரு பாதம்—(தன்) திருவடிகளை, வித்தகனார்—ஞானமே திருமேனியாக உடைய இறைவர்.

(8) விளைவு ஒன்றும்—மேல் உண்டாகக் கூடியது ஒன்றையும், வெறுவியனாய்—பயன் அற்றவனாய், களவு இல்லா—வஞ்சனையாகிய எண்ணங்கள் இல்லாத.

(9) பாங்கு—மேன்மை, பரிசு—நல்ல தன்மை, உலப்பு இலா—ஒழிதல் இல்லாத, வினை வாங்கி—என் வினைகளை ஒழித்து, மலம் அறுத்து—மும்மலங்களையும் விலக்கி, (மும்மலங்கள், ஆணவம், காமியம், மாயை என்பன.) வான்—உயர்வாகிய, பயில்—வழங்குகின்ற (ஓதுகின்ற.)

(10) (ஐந்து பூதங்கள் ஆகி ஐந்து புலன் ஆகி என்க.) கேதங்கள்—(பிறப்பினால் உண்டாகும் என்) துன்பங்களை.

## கலி நீங்கு காண்டம்

(1) முன்+நீர்—எல்லா நீருக்கு முற்பட்ட நீர் (கடல்,) மடவார்—இளமைப் பருவத்தினை உடைய மாதர்கள், முறுவல்—பற்கள், அஃதிங்கு உவமை ஆகு பெயராய்ப் பற்களைப் போன்ற முத்துக்களை உணர்த்திற்று, திரள்—கூட்டம், ராசி. நல் நீர்—நன்மையாகிய தன்மை, அல்லது உலக நன்மைக்குக் காரணமான நன்மையாகிய தன்மை, அல்லது உலக நன்மைக்குக் காரணமான நீர், அயோத்தி—பகைவர் போர்புரிந்து வெல்ல முடியாதது, பொன்—அழகு, ஈர்—குளிர்ச்சி, முருகு—தேனனது, உடைக்கும்—உடைத்துச் செல்லும் (பீறிச் செல்கின்ற,) முருகு—வாசனை, அஃதிங்குப் பண்பாகு பெயராய்த் தேனை உணர்த்திற்று, மொய்—(இதழ்கள்) நெருங்கிய, தும்பி—வண்டுகள், அருகு உடைக்கும்—அருகிலிருந்து மலரச் செய்யும், நல்நாட்டு அரசு—நன்மையாகிய நாட்டிற்கு அரசனாகிய நளமகாராஜன்.

(2) மான் தேர் தொழில்—குதிரை கட்டிய தேரை ஓட்டும் தொழில், மடை தொழில்—சமைத்தற்றொழில், மிக்கோன்—சிறந்தவன், ஊன் தேய்க்கும்—பகைவர்களுடைய உடலை அழிக்கும்,

தோய்க்கும்—(தன்னிலே வந்து) தோயச் செய்யும், தார்—மாலை, தேர்வேந்தன்—தேரை ஓட்டுவதில் வல்லவனாகிய அரசன் (நளச் சக்கரவர்த்தி, வாகுவன்—நளன், வாகு—தோள், (தோள் குறைந் தமையால் இப் பெயா உண்டாயிற்று.)

(3) செம்மொழியா (க) தேர்ந்து—உண்மைச் சொல்லாகத் துணிந்து, தருமின்—அழைத்து வாருங்கள், மிக்கான்—உயர்ந்த வனாகிய நளன்.

(4) புரவலன்—அரசன் (காத்தலில் வல்லவன்,) எதடுதாழிற்கு மிக்கான்—எந்தத்தொழிலிலே சிறந்தவன், கைத்தொழிற்கு மிக் கான் (ஆக)—(தேர் நடத்துதலும், உண்டி சமைத்தலு மாகிய) கைத் தொழில்களில் சிறந்தவனாக, கண்டு—(குறிப்பால்) உணர்ந்து.

(5) அலர் வழியும்—தாமரையினின்று வழிகின்ற, தேறல் போய்- தேன் பாய்ந்து, கொடைத் தொழிலின்—ஈகைத் தொழிலில், மிக்கான்—மிகுந்தவனாகிய நளமகாராஜன், குறித்து—அவ்விரு தொழிலையுங் குறிப்பிட்டு.

(6) (நாடுக + என =, நாடுகென—தேடுக என்று கூறி, தண் கோதை—குளிர்ச்சியாகிய மாலையை அணிந்தவளாகிய தமயந்தி, மின்னை புரை—மின்னல் போன்ற.

(7) சோர் துயில்—அயர்ந்த தூக்கம், நேர் நின்று—(உன்னால் சந்தேகப் படுமவர்க்கு) எதிர் நின்று.

(8) மின் ஆடும்—மின்னல் தோன்றுகின்ற, மால்வரை—மேகங் களையுடைய மலை, வேலையும்—கடலைச் சார்ந்த இடங்களிலும், நாடினன் தேடி—கருதித்தேடி, மன்னு—மாறாத, கடம்—மதம், தாழ்—ஒழுகுகின்ற, களி யானை—களிக்கும் யானைச் சேனை.

(9) தார் வேந்தன்—வெற்றிமாலையை அணிந்த நளமகாராஜன், வேந்தர்க்குப் போதுமோ—அரசர்க்குத் தகுமோ?

(10) ஒண் தொடி—ஒண்மையாகிய வளையை அணிந்த நாயகி, பண்டை வினை—முன்னை யூழ், தண்—குளிர்ச்சியாகிய,தாளம்—முத்துகளால் அமைக்கப்பட்ட, தாமம்—மாலைகளை உடைய, பொன்மகளை—இலக்குமியைப் போலுமகளை, ஐயம்—சந்தேகம்.

(11) வாக்கினால்—பேசுஞ் சொற்களால், மறித்து—அச்சொல்லை யொழித்து, பூ கமழும்—மலர்கள் மணக்கின்ற, நூல் ஏந்து மார்பன் —பூணூலைத்தாங்கிய மார்பையுடையவனாகிய சுவேதன்.

(12) பூண்டாள்—மேற்கொண்டாள், நீண்டகொடைவேந்தற்கு—மிக்க ஈகைத் தன்மையையுடைய இருதுபன்னனுக்கு, இத்தூரம்—(அயோத்தியினின்று) இவ்வளவு தூரத்துக்கு, தேர் கோலம் கொள்வான்—தேரை ஓட்டுதற்குரிய கோலம் கொள்வான் (சாரதியாவான் என்பது.)

(13) அங்கு—அவ்விதர்ப்ப நாட்டில், செம்கோலாய்—நீதியாகிய ஆளுகையை யுடையவனே! நாளை அளவு—நாளைத்தினத்தின் அளவினது (நாளையே என்பது,) தேன் ஆளும—வண்டுகள் (இடைவிடாது) வசிக்கின்ற, (தேன் என்பது தென் எனக் குறுகியது; அன்றி—அழகை உடைய என்று பொருள்கூறுதலுமாம்; இப்பொருளில் தென் என்பது விகார மொழியன்று.)

(14) என்செய்கு—யாது செய்வேன்? ஓ—அசை, இகல்சீறும்—பகைவர்களாகிய இருளைச்சீறுகின்ற (கோபிக்கின்ற), மின்செய்த—ஒளியைச்செய்த (ஒளியைக்கொண்ட), வேலான்—வேலைத்தாங்கிய இருதுபன்ன மகாராஜன்.

(15) கொண்டானுக்கு—நாயகனிடத்து, அல்லால்—அன்றிப் (பிறரிடதது,) இறவாத—(கற்புக்குரிய வரம்பு கடந்துமனஞ்) செல்லாத, ஏந்திழையாள்—ஏந்திய ஆபரணங்களை உடையவள், பறி—மீன்பிடித்துப்போடும் ஓலைக்கூடை, நெல்வில்—நெல்வயலில், பருவரால்—பருமையாகிய வரால் மீன்கள்.

(16) அன்னதற்கு—என்மேல் எறிய வருகின்ற மாலை நளன்மேல் விழுந்ததற்கு, ஈது அன்றோ—காரணம் இதுவல்லவோ? கடாம்—மதநீரை, வாரணம் அன்னான்—யானையைப்போன்றவனாகிய இருதுபன்னமகாராஜன்.

(17) முடிந்ததோ—சம்பவித்ததோ? மொய் குழலாள்—மொய்த்த கூந்தலையுடைய தமயந்தி, இசைந்ததோ—இசைந்து சொல்லியதோ? உலகத்து உரைப்பட்டது—உலகத்தில் பேசுதலில் பொருந்தியதாகிய, தன் மரபுக்கு ஒவ்வாத வார்த்தை இது—தன் குலத்துக்குத் தகாத சொல்லாகிய (மறு சுயம்வரம் என்னும்) இச்சொல்.

(18) ஒற்றை ஆழித்தேர் என்ன—ஒரு சக்கரத்தினை உடைய (சூரியனது) தேரைப்போல, அளி—வண்டுகள், முரல—ஒலிக்க (ஒலித்தெழ), தீம்தேறல்—இனிமையாகிய தேன், வாக்கல்—ஊற்றல், சேய்—முருகன் (இஃதிங்கு நளமகாராஜனை உணர்த்தியது).

(19) முந்தைவினை—(நளமகாராஜனுடைய) முன்னைநல்வினையானது, குறுக—நெருங்க (நெருங்குகையில் என்பதுகருத்து.)

மூவா மயல்—முதுமையடையாத விருப்பம் (அதாவது புது விருப்பம்,) சந்தம்—மயிர்ச்சாந்து, விரை—வாசனை, மெல் ஓதி—மென்மையாகிய கூந்தலை உடைய தமயந்தி.

(20) அளவில்—அச்சொல் சொல்லிய அளவில், நால் ஆறு காதம்—(நாலும் + ஆறும்) பத்துக்காதம் (நாலாகிய ஆறு எனக்கொண்டு இருபத்துநான்கு காதம் என்பாரும் உண்டு.) வெம்மை கலி—கொடுமையாகிய கலியினால், சூதில் மால்கொண்டான்—சூதாட்டத்தில் மயக்கங்கொண்டவனாகிய நளச்சக்கரவர்த்தி, கோல் கொண்ட—முட்கோலைக் கொண்டு செலுத்திய, மா—குதிரை.

(21) இ தாழ்பணையில்—இந்தப் பள்ளமாகிய வயலில் உள்ள, தான்றி—ஒருவகை மரம், (இதற்குக் கலித்துருமம் எனவும் பெயருண்டு.) அதனில்—(அம்மரத்தின்) அருகில், தேர் உய்த்து—தேரைச்செலுத்தி, தேவர் சபை நடு—தேவர்கள் கூடிய சபையின் நடுவில், தார் நிறுத்தும்—(தமயந்தியினாற் போடப்பட்ட) மாலையைத் தன்மேலே நிறுத்திய.

(22 ஏர்—உழுமாடுகள், (பொருளாகு பெயர்,) கோல்—தாற்றுக்கோல், மா தொழில்—குதிரை ஓட்டுந் தொழில், இ தொழில்—இந்தக் கணக்குத்தொழில், மிக்கானை—சிறந்தவனாகிய நளமகாராஜனை, மாற்றுதும்—மாற்றிக்கொள்வோம்.

(23) எம் கோமான்—எம்முடைய பெருமானாகிய (சந்திரன் சுவர்க்கி என்க, இவன் சிற்றரசன், இந்நூலை இயற்றிய புகழேந்திப் புலவரை ஆதரித்தவன்; ஆதலின் இவனை இந்நூலிற் புகழ்ந்துகூறியிருக்கின்றனர். இது நன்றியறிதலின் பாற்படும்.) தண் தார்—குளிர்ச்சியாகிய மாலை, புனைதல்—அணிதல்.

(24) அலவன்—நண்டு, காமர்—அழகு, கைவிடல்—நீங்கல், பொன்—அழகு, நகரி—நகரம், (பட்டணம்,) போர் வேட்டு—போரை விரும்பி, கரி—யானைச் சேனை, ஒன்று—குதிரைச்சேனை, (இஃது எண்ணலளவை யாகு பெயர்.)

(25) கோயில் முற்றம்—அரண்மனையின் வாசல், பணித்து—(வாயில் காப்போனுக்குக்) கட்டளையிட்டு, தனிப்புக்கான்—(இருதுபன்ன மகாராஜன்) தனிமையாகச் சென்றான்.

(26) கன்னி—புதுமையாகிய, நறும்தேறல்—மணமுள்ள தேனை, மாந்தி—உண்டு, மன்னி—நிலைபெற்று, வரிவண்டு—இசையைப் பாடும் வண்டு, நெய்தல்கு—நெய்தல் மலர்த்தேனை, அவாவும்—(உண்ண) விரும்பும்.

(27) மன்றல்—வாசனை, உள்ளம் துரப்ப—(மனமானது தன்னைச்) செலுத்தியதனால், தெளியாது—(முன்னே) ஆராயாமல், போந்த—குண்டினபுரத்துக்கு வந்த, சேய்—முருகனைப்போன்றவனாகிய இருதுபன்னமாகாராஜன்.

(28) ஆதி—நேராய் ஓடல், நெடுந்தேர்ப்பரி—பெரியதேரிற் பூட்டிய குதிரைகள், விட்டு—அவிழ்த்துவிட்டு (ஆதிநெடுந்தேர்ப்பரி என்பதற்குச் சூரியனது தேரிற்பூட்டிய குதிரையைப் போன்ற குதிரைகள் என்றலுமாம்.) அடிசில்—உணவு, குறை— குறையாய் உள்ள வேலை, (இனிச் செய்யவேண்டிய வேலை,) கார்நீலம்—கருமையாகிய நீலோற்பல அரும்புகள், கண்விழிக்கும்—மலரும், மடைவாயில்—மடைப்பள்ளியில், புக்கான்—புகுந்தான்.

(29) தேர் வரம் பாகன்—தேரைச்செலுத்துதலிற் சிறந்த பாகனாகிய நளன், புக்க மனை—புகுந்த மடைப்பள்ளி, யாதும்—(நீர் முதலிய) யாதொன்றானும், நிரப்பாமல்—நிரப்பப் படாமல், எல்லாம் நிரம்பிற்று—எல்லா உண்டிகளும் நிரம்பியது.

(30) இடைச்சுரம்—காட்டின் நடு, இடையிருள்—நடு இரவு, (இவ்விரண்டும் இலக்கணப் போலி; இயல்பாயின் சுரத்திடை, இருளிடை என்றிருக்கும்), அயிர்த்த—(தன்னால்) சந்தேகிக்கப்பட்ட, கோமான்—நளன், மடைத் தொழில்கள்—(தான் செய்யும்) சமைத்தற்றொழிலிலே, செய்கின்றது எல்லாம்—செய்கின்றனவாகிய முறைகள் எல்லாவற்றையும், (செய்கின்றது எல்லாம்—பன்மையில் ஒருமை வந்த பால்வழுவமைதி).

(31) ஆதி அரசன்—(எல்லா அரசர்களினும்) முதன்மையான அரசனாகிய நளமகாராஜன், போத—புகவும், விளையாட—விளையாடவும், (விட்டு) மேல்—அதன்பின், அவன்—அப் பாகனது, வளை ஆடும்—(பொன்) வளைகள் அசைகின்ற, கையாள்—கைகளையுடைய தமயந்தி.

(32) காணா—கண்டு, மனம நடுங்கா—மனம் நடுங்கி, வெய்து உயிரா—வெப்பமானதாகிய மூச்சுவிட்டு (பெரு மூச்சு விட்டு என்பது), புக்கு—அவர்கள் அருகிற் சென்று, அணையா—அணைத்து, வன்மம்—தீராப் பகைக் குணமுள்ள.

(33) நிடதத்தார்—நிடதநாட்டில் இருப்பவர்களது, வாழ் வேந்தன்—வாழ்க்கைக்குக் காரணமாகிய அரசன் (நளமகாராஜன்), இநகர்க்கு—இந்த நகரில், மற்றொருவன்—மற்றோர் அரசனாகிய புட்கரன்.

(34) ஆங்கு—அவ்வாறு, அழிவு எய்தி—(மனச்) சோர்வை அடைந்து, நீங்கா உயிரோடு—பிரியாத உயிருடன், பூ காவில்—பூஞ்சோலையில், வள்ளம்—வட்டில், உள்ளம் போல்—(தன்) மனம் கரைவதுபோல.

(35) இங்கண்—(இங்கு, உங்கள் தந்தைக்கு வெட்கமாகிய இங்கு என்பது), இழுக்கு-குற்றம (மானக்கேடு), செங்கை வளம்—சிவந்த கையின் வளத்தினை உடைய (கைக்குவளமாவது, ஈகையை உடைமை), மாதவம்—சிறந்த தவம்.

(36) மன்னர் அஞ்சாரோ—அரசர்கள் பயப்பட மாட்டார்களோ? அடுமடையா—சமைக்கு மடைத தொழிலை உடையவனே! எஞ்சாது—குறையாமல் (நிறைவாக), தீமையே—அவமதிப்பையே, சிறு தொழில்—தேரோட்டுதலாகிய இழிதொழில், (முன்னே மடையா என்றமையின் இங்குச் சிறு தொழில் என்றது தேரோட்டுந் தொழிலை யுணர்த்தியது என்க.)

(37) கழல் இணை—இருபாதங்கள், எ மருங்கும்—எப் பக்கத்தினும், கந்து—கட்டுத் தறி, சுளியும்—கோபித்து முறிக்கும், கடாம் களிறு—மதத்தை யுடைய யானை (களிறு—ஆண் யானை, பெண் யானை பிடி எனப்படும்.) பார்வேந்தர்—பேரரசர், (பருமை + வேந்தர் = பார்வெந்தர்).

(38) உன்னை—உன்னுடைய பெருமையை, முடி சாய்த்து—தலையை வளைத்து, கரைந்து உருகி—(மனம்) கரைந்து உருகி, கண்—கண்ணினின்று, நீவார—நீர் ஒழுக.

(39) கொற்றம்—வெற்றி, கோதை—பெண் (இந்திரசேனை), அவன்—நளன்,மொழியாத முன்னே—சொல்லி முடியாத முன்னே, அழிந்தாள்—மனம் அழிந்து (அழுது விழுந்தாள் என்க.)

(40) மன்னவன் கு—இருதுபன்ன மகாராஜனுக்கு, கொற்றம் தனி தேரும் கொண்டு அணைந்து—வெற்றியைத் தருகின்ற தேரையும் ஓட்டிக்கொண்டு வந்து, கொடைத் தொழிலான்—ஈகைத் தொழிலை உடைய நளமகாராஜன், குறித்து—நிச்சயித்து.

(41) போது அலருங் கண்ணியான் — அரும்புகள் மலரும் மாலையை யுடையவன் (வீம மகாராஜன்), ஓதம்—கடல், வரி வளை கொண்டு—வரிகளை யுடைய சங்குகளை (அலைகளாகிய கைகளால்) கொண்டு (கரையில் ஏறும் என்க.)

(42) வாய்—வாயினிடத் துண்டாகும், செம்மொழிக்கும்—கம்பீரமான சொல்லுக்கும், சிந்தைக்கும்—எண்ணத்துக்கும், என்ஞ—

என்று கருதி, எ வாயும்—எல்லா வழியாலும், நோக்கி—ஆராய்ந்து, நுணங்கியது—நுட்பமாய் அறியத் தக்க பொருளுடையதாகிய.

(43) பூகத்தின்—பாக்கு மரத்தினது, ஐந்தலைய—ஐந்து தலைகளை உடைய, நாகம் பணம் என்று—பாம்பின் படம் என்று, ஐயுற்று—சந்தேகித்து, மந்தி—குரங்கு, தெளியாது—(இன்ன தெனத்) துணியாமல்.

(44) அரவு அரசன்—பாம்புகளுக்கு அரசன் (கார்க்கோடகன்), அம்—அழகாகிய, பூ துகில்—பூப்போலும் தொழிலை உடைய துணி, பொரு—வருத்துகின்ற (போர்செய்ய வல்ல என்றுரைப் பினுமாம்,) பூண்டு அளிக்கும்—மேற்கொண்டு (உயிர்களைக்) காக்கும், கோ—அரசுரிமை யாகிய, தாயம்—(முன்னோரீட்டிய) பொருள்.

(45) மிக்கோன்—தேவரெனப் படுவோரில் சிறந்த இறைவன், மெய் அடியே—உண்மையாகிய திருவடி களையே (என்று மழியாத இன்பத்தை அளிப்பன வாகலின் இறை வன் திருவடிகளை மெய்யடி என்றார்,) புக்கோர்—சரணமடைந்தவர்கள், அரு வினைபோல்—(பிறரால்) நீக்குதற்கு அரிய வினைகள் நீங்குதல் போல, நகம்—மலையை, தேர்ப்பாகன்—தேரை ஓட்டும் சாரதி (நள மகாராஜன்,) வடிவு—மேனியின் மாறுபட்ட நிறம்.

(46) (பேரரும்புகள்) அலரும்—மலர்கின்ற, குஞ்சியான்—இந்திரசேனன், மின் இடையாளோடும்—மின்னலைப் போன்ற இடையை உடைய இந்திரசேனையோடும், பொன்—அழகு.

(47) எம்மருங்கும்—எப்பக்கமும், தேன்மாரி பெய்யும்—தேனை மழைபோலப் பொழிகின்ற,பூமாரி—(கற்பகத் தருக்களின்) பூமழை.

(48) செம்கோல் முறைமை—செம்மையாகிய ஆளுகையினது முறைமை, ஒப்பு ஆ(க)—ஒப்பவராக, யார் போதுவார்—எம்மாதராட வர் வருவர், பார் அளிப்பான் முன்—பூமியைக் காப்பவனாகிய நள மகாராஜனுக்கு முன்னே.

(49) செல்ல—(முட்டின்றிச்) செல்லும்படி, வேலாய்—வேலினைத் தாங்கிய கலி புருடனே! என் சரிதம்—எனது நடக்கையை, கிளர்—விளங்குகின்ற, வாள்தானை—வாள்போரில் வல்ல சேனை.

(50) அயில்—கூர்மை, நல் காவி—நன்மெயாகிய நீலோற்பல மலர்கள், மட்டு—தேன், இறைக்கும்—பெருக்கும், கட்டுரைத்து—உறுதியாகச் சொல்லி.

(51) வேதநெறி—வேதத்தினது விதியை, வழுவா (த)—தப்பி நடவாத, பூ—தாமரைப்பூ, தட—பெருமையாகிய, கோதை—பெண் (தமயந்தி,) மக்கள்—அவள் பிள்ளைகள், தாது—மகரந்தம், புதைதல்—மறைதல், விதையம் கோன்—விதர்ப்பதேசத்து அரசனாகிய வீம மகாராஜன்.

(52) ஒன்றும்—சிறிதும், பொன் அமரும்—திருமகள் வீற்றிருக்கும், தன்மேல் நீர்மை குன்று—தன் புறத்தில் தோன்றுந் தன்மைகள் குறைந்து.

(54) வை—கூர்மை, ஏனை நெறிதூரம்—கடக்க வேண்டிய மற்ற வழியினது தூரம், இனி எத்தனை ஓ—இனி எவ்வளவோ, இந்த மலை கடந்து—இந்த மலையைக் கடந்து (செல்ல,) ஏழு மலைக்கு அப்புறம்—(உள்ள) ஏழு மலைகளுக்கு அப்புறத்தில், மிக்கு—எல்லா நகரங்களிலும் சிறந்து.

(55) இ கங்குல் போக—(நளன் தான் சென்ற) இந்நாளின் இராப்பொழுது கழியும்படி, இகல் வேல்—(பகைவர்களைப்) பகைக்கின்றவேல், எறி நீர்—அலைகள் எறியும நீர், செய்க்கு—வயலில், காண்பான்போல்—பார்க்க வருபவன்போல், குன்றில்—உதயகிரியில், செருக்கும்—களிக்கின்ற.

(56) இளம் கோதை—புதுமலர்களாலாகிய மாலையை அணிந்த தமயந்தி, மணி நெடுமை தேர்—மணிகளைப் பதித்த பெரிய தேர், பூவிந்தை—தாமரைப்பூவில் வீற்றிருக்கும் இலக்குமி, பொழில்—சோலை.

(57) கொற்றவனுக்கு—புட்கரனுக்கு, பணயம்—பந்தயப் பொருள், அவனை கொண்டு அணைவீா—அவனை அழைத்துக்கொண்டு வாருங்கள், குலம்—சிறந்த.

(58) நெடு மாயம் சூதில்—மிகுந்த வஞ்சனையை யுடைய சூதாட்டத்தில், வல்நெஞ்சன்—இரக்கமில்லாத மனமுடைய புட்கரன், ஆய—(மேன்மை) பொருந்திய, பெருமைதானை—பெரிய சேனை, பெடை நடையாளோடும்—பெண் அன்னத்தின் நடையைப் போன்ற நடையை உடைய தமயந்தியோடு.

(59) தேர்ச்சி இல்லா(த)—ஆராயும் அறிவு இல்லாத, காவல் கொடை வேந்தே—காக்குந் தொழிலையும் கொடுக்குந் தன்மையையும் உடைய அரசனே! காதலன் கு உம்—அன்புடைய நாயகனாகிய உனக்கும், காதலிக்கு உம்—(உனது) அன்புள்ள நாயகிக்

கும், யாவாக்கு உம்---மக்கள் முதலியவர்களுக்கும், தீது இலவே—தீமைகள் இலவே (சுகமா என்பது.)

(60) அரசு—ஆளுகை, ஆங்கு—(பிறகு அவர்கள் ஆடிய) சூதாட்டத்தில், செந்தமிழோர்—செந்தமிழில் வல்ல புலவர்கள், நாவேய்ந்த—நாவினால் தொடுக்கப்பட்ட, சொல்லால்-- செய்யுளால், கோவேந்தன்கு—அரசனாகிய நளமகாராஜனுக்கு, வந்தபடியே—(ஒரு பொருளும் இன்றி) வந்த விதமாகவே, வழிக்கொண்டான்---போயினான் (புட்கரன் என்க.)

## துருவன்

(1) முத்து ஆரம்—முத்துகளாலாகியமாலை, வந்து இறைஞ்ச—வந்து வணங்க, பைத்து ஆடு அரவம்—படத்தை உடையதாகி ஆடுகின்ற ஆதிசேடன் (அரவம்— பாமபு,) சுமைகூர்—மிகவும் சுமக்கும, கடல் பார்—கடலாற் சூழப்பட்ட பூமி, பரித்தான்--காப்பாற்றினான், அலங்கல்—மாலை, கோதை—மாலை, உலங்கொள்—திரண்ட கல்லைப்போன்ற.

(2) வெடிக்கும்—(இதழ்கள்) விரியும, நாள்—அப்பொழுது மலர்ந்த, (புது மலர் என்க.) அகில் விம்மி—அகிற்கட்டைப் புகையின் வாசனை மிகுந்து, கமம் சூல்—நிறைந்த கரு, (கர்ப்பம்) சுடர்--பிரகாசிக்கும், பொன் குழை—பொன்னாற் செய்த குண்டலங்களை அணிந்த காதுகள், அடர்க்கும்—(அக்காதை) நெருக்கும், வடிகண்-மாவடுவைப் போன்ற கண்.

(3) வரை உற்ற—மலையிற் பொருந்திய, செருவென்ற—போர்க்களத்து வந்த பகைவர்களை வென்ற, அமுது ஆய்—அமுதம்போலும் இனியவளாகி, அலர் தாமரை அன்னம்—மலர்ந்த தாமரைப் பூவில் வீற்றிருக்கும் அன்னம போன்ற திருமகள்.

(4) மத்தம்—மதத்தினை உடைய, மா களிறு மன்னன்—சிறந்த யானைச் சேனையுடைய (அந்த) உத்தானபாதமகாராஜன், தவிசு—ஆசனம், (இஃதிங்குச் சிங்காதனத்தை உணர்த்தியது.) கத்திகை—பூமாலை, கரு மெல் கூந்தல்—கருமையையும் மென்மையையும் உடைய கூந்தல், கவரி—சாமரை, குறங்கு—தொடை, உவந்து—களிப்புற்று.

(5) வண்டு உளர்—வண்டுகள் சுழலாநிற்கும், தெரியல்—மாலை, மா மணிக் குறங்கு—மிகவும் அழகாகிய தொடை (வேந்தனது

குறங்கு என்க.) ஒள் தொடி—அழகிய வளை, உறைந்த செவ்வி—வீற்றிருந்த அழகு, ஏறுவான் கருதி—ஏற எண்ணி, நண்ண—(அருகில்) போக.

(6) கோல்தொடி—கோல் போலும் திரண்ட வளை அணிந்த சுநீதி, மாற்றவள் வயிற்றின் வந்தாய்—(எனது) மாற்றாள் வயிற்றிலே பிறந்தனை, வரத்தின்—(சிறந்த) வரத்தினை உடைய, என் வயிற்றின்—என்னுடைய வயிற்றிலே, வந்து தோற்றுதல்—வந்து பிறக்கும், நீ—அத்தகையனாகிய நீ; குறங்கின் ஏறும் ஆறு என்—தொடையில் ஏறி வீற்றிருத்தற் குரிய வகை யாது.

(7) உலகம் எல்லாம் கவிக்கும்—உலக முழுதையும் தனக்குள் அடக்கிக்கொண்டிருக்கும், தாது அலர்—இதழ்கள்விரிந்த (அன்றி மகரந்தப்பொடிகள் மிகுந்த எனலுமாம்,) கமலம் செல்வி தலைவன்—தாமரைப்பூவில் வீற்றிருக்கும் திருமகளின் நாயகனை, நோக்கி—குறித்து.

(8) வெம்மை சிலை—(பகைவர்களுக்குக்) கொடுமையைச் செய்யும் வில், அம செவி வெதும்ப—அக்குமரன் தன் அழகிய காதுகள் வருந்த, நாள்கஞ்ச மலர்—அன்று மலர்ந்த தாமரைப்பூ, கண் இணை (இணைக்கண்)—இரண்டு கண்கள், மாரி கால—மழையைப்போல் நீரைச் சொரிய, மைந்தன்—மஞ்சன்போலி. மணி இதழ்—அழகிய இதழ்கள்.

(9) தழைத்த—(தம்மிடத்தினின்று) மிக்குப்பெருகிய, முத்தம்—முத்துக்களை ஒத்த நீரை, பொன் அணிந்து—பொன்னாலாகிய ஆபரணங்களை அணிந்து, என் உயிர், என் கண், எந்தால்—என்னுடைய உயிரே, என்னுடைய கண்ணே, எங்கள் குடிக்குத் தலைவனே, நீ அழுங்கல் என்னை—நீ வருந்து தற்குரிய காரணம் யாது? மின் உயிர்த்து—ஒளியை வீசி, ஒளிரும்—விளங்கும், பைமபூண்—அழகிய ஆபரணங்கள், மெல் இயல—மென்மையான தன்மையினை உடைய சுநீதி.

(10) பட்டமை—(அங்கு) நிகழ்ந்த செய்தியை, பசுமை சிறை—அழகிய இறகுகள், கிள்ளை—கிளி, விட்டு—(ஒளி) விட்டு, காட்டு வெம்மை கனல்—காட்டின் கண்ணதாகிய கொடியநெருப்பு, படர்ந்து முற்றி—பரவிமுதிர்ந்து, சுட்ட—சுட்டதனாலாகிய, வெப்பு உண்ட—சூட்டினைக்கொண்ட, பொன் அம்—மிக்க அழகினை உடைய, துணர் கொடி—பூங்கொத்துகளை உடைய கொடி, நெட்டுயிர்ப்பு—பெருமூச்சு, செம்மைகண்—சிவந்த கண்களினின்று, நித்திலம்—முத்துகளைப் போன்ற நீரை.

(11) தெள் அமுதில்—தெளிவாகிய அமுதத்தைப் போலவும், தேனில்—தேனைப்போலவும், கொண்ட—(இனிமை, கொண்ட, குதலை—குதலைச் சொற்களைப் பேசுதலை உடைய, மெல்பவளம செவ்வாய்—மென்மையாகிய பவளமபோலும் செம்மையாகிய வாயை உடைய, மதலை—பிள்ளையே! புல்வயிறு அகம—இழிவாகிய வயிற்றில், பொருந்தி வந்தாய்—பொருந்திப் பிறந்தவனே! விதலை—நடுக்கம், அளி—கருணை, வாய் உம்பல்—வாயில் அகப்பட்ட யானை, முழுமுதல்—நிரம்பிய முதன்மையை உடையவர்.

(12) ஐது எழில்—மிக்க அழகு, (ஐது என்பதில் து—பகுதிப் பொருள் விகுதி.) இழை—ஆபரணம், எய்துதி—அடைவாயாக, கலங்கல்—கலங்காதே.

(13 பனிமலா அண்ணல்—குளிர்ச்சியாகிய தாமரைப் பூவில் வீற்றிருக்கும பெரியோராகிய பிரம்மதேவர், ஓங்குபதம்—உயர்ந்த பதத்தை, என் எய்தாது—யாது உண்டாகாது, என்று—என்று சொல்லி, தெருட்டினுள்—தெளியச் செய்தாள்.

(14) விடம்பொழி—விடம்போலும் கருநிறத்தைச் சொரிகின்ற (கருநிறம் மிக்க என்பது கருத்து,) மாற்றம்—சொல், கனற்ற—கனலைச்செய்ய, கிங்கிணி—சதங்கை, (கிங்கிண் அல்லது கிண்கிண் என்னும ஓசை உடையது.) கவைஇய—மூடிய (அணிந்த), தாளன்—அடிகளை உடையவன், தட கை அம கமலம—விசாலமாகிய கையாகிய அழகிய தாமரை, மைந்தன்—துருவனது, சார்த்தி—வைதது, சாற்றும்—சொல்லலானுர்.

(15) பருவம்—வயது, இன்னம—இதுவரையினும், புலப்பட—அறிவில்விளங்க, அறியமுடியாத, கரியவன் தன்னை—கருநிறத்தினை உடைய இறைவனை (விஷ்ணுவை,) யாங்கு காணுதி—எவ்வகையில் காண்பாய்? கதழும் சீற்றம்—மேன்மேல் வளருங் கோபத்தினை உடைய), திருகு—மாறுபட்ட (எல்லா உயிர்களோடும் பகைக்கும்), மா—கொடியனவாகிய விலங்குகள், வழங்கு—சஞ்சரிக்கின்ற, செவ்விதது அன்று—நன்மையை உடையது அன்று.

(16) ஊழி—யுக முடியுங் காலம், வெமபரிதி—வெப்பமாகிய கிரணங்களை உடைய சூரியன், ஒற்றை ஆழி—ஒற்றைச் சக்கரம, அமமான்—சுவாமி, அகமிசை—மனத்தில், தாழ்—(முழங்கா லளவும) தாழ்ந்த, இரு தட கை—பெரிய விசாலமான கை, நம்பி—ஆடவரிற் சிறந்தோன், துருவன் (நம்பிக்குப் பெண்பால் நங்கை.) தவம் கனல்—தவத்தினு லுண்டாகிய நெருப்பு, தவாது—நீங்காமல்,

பொங்கி—மிக்கு எழ, (அதனால்), இரு எழ் பரவை வேலி —பெரிய ஏழு கடலாகி வேலியை உடைய, கனன்றது—வெப்பமுற்றது.

(17) ஆவயின்—அப்பொழுது, திறத்தினால்—வகையினால், உயிர்க்கல் ஆற்றார்—மூச்சுவிட முடியாதவராய், தெருமந்தார்—வருந்தி, தெருண்டு—தெளிந்து, மொய்த்து—ஒன்றாய்க் கூடி, பூ உறை விரிஞ்சன் தன்னை—தாமரைப் பூவில் வீற்றிருக்கும் பிரப்மதேவரை, பூத்தவன்—பெற்றவர் (இறைவராகிற திருமால்) புகலல் உற்றான்—சொல்லலானார்.

(18) (துருவன்) மூச்சு விட்டிலன்—மூச்சு விடாதவனாய், விழு தவம் புரிதலான்—சிறந்த தவத்தைச் செய்தலாலே, ஆங்கு—அவன் மூச்சை அடக்கி இருப்பதுபோல் (உமக்கும் மூச்சு) முட்டியது—தடைப்பட்டது (அடங்கியது), மட்டு அறு—அளவில்லாத, வேத மேனி—வேத மாகிய மேனியை உடைய (மேனி—உடல்), வரி சிறை—கீற்றுகளை யுடைய சிறகுகளை வாய்ந்த, புள்—பறவை, (கருடன்), நல் உருவம் காந்தி—அழகிய (தன்) மேனியின் ஒளி, எறிதர—வீச (பரவ).

(19) நெடியவன்—இறைவன் (யாவருக்கு மேலானவன்), நிகழ்த்தல் ஆக—சொல்ல, ஒடிவு அறு தவத்தின்—நீங்குதலில்லாத தவத்தினாலே, காண்கலனாக—(அவ்விறையோனைக் கண்திறந்து) பார்த்திலனாக, தண்—குளிர்ச்சியாகிய, அம்துளவினோன்—அழகிய துழாய் மாலையைஅணிந்த அவ்விறைவன், உள்ளம் சுடர்—(அவனது) மனதத்தில் பிரகாசித்துக்கொண்டிருந்த, கடி—வாசனை, கண்மலர் விழித்தான்—கண்ணை மலர்ந்து விழித்தான். (மலர்ந்து என்னும் வினையெச்சம ஈறு தொகுத்தலாய் மலர் என நின்றது, மலர்ந்து—திறந்து, விழித்தல்—பார்த்தல்.)

(20) மண்டலம்—(தன்) மண்டலம் (முழுதும்), நிறைந்த—கலை நிரம்பிய, வதனம்—முகம், குண்டலம்—குழைகள், சுடரும்—ஒளி வீசுகின்ற, குறுநகை—புன்முறுவல் (புன் சிரிப்பினையுடைய), துழாய் அலங்கல்—துழாயினாலாகிய மாலை, மறையும் காணா—வேதத்தினாலும் காணமுடியாத.

(21) புல்லுதல்—தழுவிக்கொள்ளுதல், எய்திடும்—அருகிற் செல்வான், இறைஞ்சா நிற்கும்—பலமுறையும் வணங்குவான், நெஞ்சுருகும்—மனங் கரைவான், உகக்கும்—களிப்பான், உகுத்தல்—சிந்தல், உள் அழுங்கும்—(அப் பெருமானைப் பிரிய நேரிடுமோ என்றெண்ணி) மனம் வருந்துவான், முருகு—முருகன் (சுப்பிரமணியன்.)

(22) சுடிகை—உச்சி, அண்ணல் வாள் அரவம்—மேன்மையையும் ஒளியையும் உடைய பாம்பு (ஆதிசேடன்), குவலயம்—பூமியில் உள்ளவர்கள், வேந்து குழவி—அரச குமாரன், மணி கபோலம்—அழகாகிய கன்னம், பவளவாய் பச்சை மேகம்—பவழம் போன்ற வாயையும் குளிர்ச்சியையும் உடைய மேகம்போன்ற இறைவன், (பச்சை என்பது இங்குக் குளிர்ச்சியை உணர்த்தியது.)

(23) புரிவளை—(வலமாகிய) புரியினை உடைய சங்கு, (வலம்புரிச் சங்கம), புரிவு—முருக்கு, தைவரு திறத்தினால்—தடவிய தன்மையால், வாக்கு—சொல்வன்மை, மிகுந்து எழ (எழுந்து மிக)—உண்டாய் மிகுவதாக, பழமறை—(முனிவர்கள் அருளிச் செய்த) பழமையாகிய வேதத்தினாலும், பழிச்சமாட்டா—(இன்ன தன்மையன் என்று சொல்லித்) துதிக்க முடியாத, பகவன்—கடவுள், ஆறு குணங்களை உடையவன். (ஆறு குணங்களாவன :—ஞானம், பலம் ஐஸ்வரியம், வீரியம், சக்தி, தேஜஸ் என்பன).

(24) வானம்—(எல்லாப் பதங்களுக்கும் இடமான) ஆகாயமாய் இருப்பவனே! வளி—(உலகத் துயிர்கள் உயிர்த்திருப்பதற்குக் காரணமான) காற்றாய் இருப்பவனே! வயங்கு எரியே—(எல்லா உருக்களுமு) விளங்கித தோன்றுதற்குக் காரணமான நெருப்பாய் இருப்பவனே! வனமே—(உலகத் துயிர்களை ஓம்பாநிற்கும்) நீராய் இருப்பவனே! மண்ணே—(உலகத் துயிர்களுக்கு இடமாகிய) மண்ணா யிருப்பவனே! இ ஐந்தின் ஊனே—இந்த ஐந்து பூதங்களினாலாகிய உடலாய் இருப்பவனே! உயிரே—(அவ்வுடல்களிலிருக்கும்) உயிர்களாய் இருப்பவனே! உயிர்க்கு உயிரே—அவ்வுயிர்களுக்கும் உயிராய் இருப்பவனே! உறுவர் உளத்து—ஞானிகளுடைய மனத்தில் (உறுவர் கடவுளிடத்தில் அல்லது உண்மைப் பொருள் ஆராய்ச்சியில் மனம பொருந்துதலை உடையவர்கள்), நங்கள்—எங்கள், பெருவாழ்வு—சிறந்த வாழ்க்கை (நிலையான வாழ்க்கை எனினுமாம்), சிவனே—சிவன் வடிவாய் இருந்து அழிப்பவனே! அயனே—பிரமன் வடிவமாய் இருந்து படைப்பவனே! கோனே—(மேற்சொல்லப்பட்ட பூதஙகள் முதலியவற்றிற்கும் சிவன் அயன் முதலிய இறைவர்களுக்கும்) இறைவனே! நின்னை—(இங்ஙனம் எவையும் எவருமாய் இறைவனுமாய் இருக்கின்ற) உன் தன்மையை, குணம் இல்லேன்—(உணர்தற்கு ஏற்ற தவம், ஞானம் முதலிய) குணங்கள் இல்லாதவனாகிய யான், என்குறித்துச் சொல்லிப்பழிச்சுகு—என்ன என்று குறித்துச் சொல்லித் துதிப்பேன். (ஓ—அசை.)

(25) மூவா—கெடாத, முதலே—இறைவனே, முத்தொழில்—மூன்று தொழில் (அவை :-படைத்தல், காத்தல், அழித்தல் என்பன), மூவர்—பிரம்மா, விஷ்ணு, சிவன் என்று கூறப்படும் இறைவர் மூவர், இனிது இயற்றல்—நன்ருகச் செய்தல், (தேவர்களுக்கு) சிகாமணி—முடியில் அணியுமணி, நின்சீர்—உன்னுடைய சிறப்பு, எங்ஙனம் நவில்கு—எப்படிச் சொல்வேன்? என்ன—என்று துருவன் சொல்ல, நகைமுகிழ்த்து—புன்னகை புரிந்து, (முகிழ்த்தல்—அரும்புபோலச் சிறிதாகத் தோற்றுவித்தல்,) பூவால்—பூவில் இருந்து, பொழில்—உலகங்களை, பூத்து அருள்—தோற்றுவித் தருளிய, பூவை வண்ணன்—காயா மரதநின் பூவைப்போன்ற நிறத்தை உடையவன்.

(26) அழல்—வெப்பத்தைச் செய்கின்ற, குடுமி—உச்சியினையுடைய, பொலம்தார்—அழகிய மாலை, ஏக்கறல்—தாழ்ந்து நிற்றல், அங்கலாய்த்தல், அம் பொன் கிரி—அழகாகிய மேருமலை, பொலிவது—விளங்குவது, உலகின்மேலது—(எல்லா உலகங்கட்கும் மேலே இருப்பது), என்றும மன்னப் படுவது—எப்பொழுதும் அழியாம லிருப்பது, (மன்னுவது என்பது மன்னப்படுவது என்ருனது மரூஉ வழக்கு. உண்ணு மனிதன் என்பது உண்ணப்பட்ட மனிதன் என வழங்குவது பேன்றது), தருதும்—தருவோம்.

(29) கரடம்—சுவடு, கவிழ்த்தல்—மூடுதல், கலுழி மதம்—காட்டாற்றைப் போன்ற மதம், கடவுள் களிறு—தேவர்களுக்குரிய யானை (ஐராவதம்), ஒளிறு—பிரகாசிக்கும், அரு—(கிடைத்தற்கு) அருமையான, மா—சிறந்த, மணிசூடு—மணியை உடைய உச்சி, துத்தி—படப்பொறி, பருவம்—வருடம, எழில் வெண் கவிகை—அழகையும வெண்ணிறத்தையும் உடைய குடை, தனி நிழற்ற—ஒப்பின்றி நிழலைச்செய்ய.

(28) நஞ்சு குழுமி—விஷந் திரண்டு, எழு—(மேல்) எழுதலைப்போன்ற, நெஞ்சு சுட—மனத்தை வருத்த, நெகிழ்ந்த தாமரை—மலர்ந்த தாமரைப் பூ, மஞ்சை—மேகம்போன்ற இறைவனை, துஞ்சல் இல்லாத—மங்குதல் இல்லாத (கெடுத லில்லாத என்று கூறலுமாம்), சுடர்—ஒளி, மணிப்பூண்—இரத்தினங்களைப் பதித்த ஆபரணங்கள், தொடி கை—வளை அணிந்த கை.

(29) வாராமகிழ்ச்சி—இதுகாறும் உண்டாயிராத களிப்பு, மெல் மழலை—மென்மையாகிய குதலைச் சொற்கள், மந்தாகினி—கங்கை, பொன்வரை—அழகிய இமயமலை, மாட்சிபோல—அழகைப்போல, அகலம்—மார்பில் அணிந்த, துயல்வரு—அசையா நிற்கும், ஆரம் பூண்—முத்து மாலையாகிய ஆபரணம்.

(30) கதலி—வாழை, முத்து அணிந்து-முத்து மாலைகளை அணிந்து (தொங்கவிட்டு), கனகமணிதோரணம்—பொன்னாலும் மணிகளாலும் அமைக்கப்பட்ட தோரணங்களால், புனைந்து—அலங்கரித்து, வான் எழுந்து உயர்ந்த—வானினளவில் மிகவும் உயர்ந்துள்ள, புதுமட்டு—புதிய தேன், கற்பகம்பூ புனையல்—கற்பக மலர்களாகிய மாலை, பதி என்று உணர—நகரம என்று நினைக்கும்படி, துலக்கி—விளங்கச் செய்து, உத்தமன்—சுருதியின் மைந்தன்.

(31) சேந்த—சிவந்த. தேவியர்—மனைவியர் (சுநீதியும், சுருதியும்), கூந்தல் பரி தேர்—பின்கழுத்து மயிரை உடைய குதிரைகளைக்கட்டிய தேர், குழவி ஞாயிறு—இளஞ்சூரியன் (காலைச்சூரியன்), காமா புதல்வன் தனை—துருவனை, (காமர்—அழகு).

(32) உருகு காதல்—மனம்கரைதற்குக் காரணமான அன்பு, இளமுறுவல்—புன்னகை, விழுநீர் ஆட்டினான்—(காதலனைக்) கண்ணீரால் ஆட்டினான், கள்ளம் கருமைகண்—வஞ்சனையாகிய நோக்கினை உடைய கரியகண், (கருங்கண்- கருவிழு), பழுக்கும் அன்பு—முதிர்ந்த அன்பு, (பழுத்த என்பது மழுக்கும் என்றானது இயல்பினால்வந்த காலவழுவமைதி), தலைமணப்ப—கூட (தலைமணத்தல்—ஒரு சொல்), உவகை கூர்ந்தனள்—களிப்பு மிக்கனள்.

(34) காளைப்பருவம்—எவ்வன வயது, கனிந்திடலும்—நன்கமைதலும், வாலம்கிரி—சக்கரவாளமலை, அழல்கான் அடைந்து—அழற்சியைச் செய்யுங்காட்டை அணுகி, பாளை கமுகம்—தாறுகளையுடைய பாக்கு மரங்கள், படப்பைசெறி—சோலைகளில் மிக்குள்ள, பழனம் திருநாடு—வயல்களாற் சூழப்பட்ட அழகாகிய நாடு.

(35) இருமை—பெரிய, எழ்பொழில்—எழுலகம், (எழு தீவுகள் எழுலகம் எனப்பட்டன, எழுதீவுகள் ஆவன சம்புத்தீவு, பிலக்கத்தீவு, சான்மலித்தீவு, குசத்தீவு, கிரவுஞ்சத்தீவு, சாகத்தீவு, புட்கரத்தீவு என்பன, சுப்பிரமயணியரால் எறியப்பட்ட கிரவுஞ்சம் என்னும் மலை கிரவுஞ்சத்தீவிலும், மேருமலை கமலமென் பொகுட்டின் நாவலந்தீவின் நடுவிலும் இருக்கின்றன எனப்பாகவத புராணம் கூறும்) பாழி—வன்மை, சூழி—முகபாடம், ஒன்று—தனது ஒரே ஆஞாசச் சக்கரத்தை.

(36) வாங்கிய—வளைந்த, வரி—கட்டினையுடைய, விசாலை—ஒரு நகரம, (உச்சயினி என்ப,) விழுதவம்—சிறந்த தவம், புரிதல்—செய்தல், காத்த—(கோவத்தனமென்னு மலையால்) தடுத்த, ஒருவன்—மிக்காரை இல்லாதவனாகிய இறைவனை.

(37 உருள்—(ஒற்றைச்) சகமரம, உறு—உற்ற, அ பசும் பொன்—அச்சப் பசுமை நிறத்தினையுடைய, ஊர்ந்து எழு—பொருந் திஎழுகின்ற, விட்டு ஒளிசெய்—விட்டு விட்டுப் பிரகாசிக்கும், ஒள் கேழ்—அழகிய நிறத்தை உடைய, விழுமணி—சிறந்த கௌத்துவம் என்னு மணியானது, கிடந்த மார்பன்—பொருந்திய மார்பை உடைய இறைவன், சுநந்த நந்தர்—சுநந்தன் நந்தன் என்னும் பெயரை உடையவர்கள், (சீ வைகுந்தத்திலிருப்பவர்கள்) அ வழி—துருவன் தவம்செய்யும அந்நகரின் கண், (வழி—இங்கு இடப்பெயர், எழன் உருபன்று), இருள் அயில்—இருட்டைப் போக்கும்.

(38) ஒருதனி—சிறிதேனும் ஒப்பாகக் கூடியது பிறிதொன் றில் லாத, திகிரி—(சுதரிசனம் என்னும்) சக்கரம், மாயன்—பிறரால் அறி யமுடியாத ஆற்றல் உடையவன், எல்லாம்திசையும்—எவ்வளவு மிக்க ஒளியினையுடையனவாகிய எல்லாத் திசைகளினும்.

(39) மன்னன் - துருவன், ஆங்கு—அப்போது, (நினைப்ப), மன் னன் உன்னியது—அங்ஙனம் துருவன் நினைத்ததை, உணரா—(சுநந்தநந்தர்கள்) அறிந்து, அன்பர் உய்க்க—அன்பர்கள் செலுத்த, பொன்நெடு-அழகிய நெடிய, விமானம் ஊர்ந்து—விமானத்தில் ஏறி, உழி—நீ போகும் இடத்தில், சேறல்காண்டி—(உன் அன்னையும்), வந்து சேருதலைப் பார்ப்பாய்.

(40 ஓங்கிய பதங்கள் தம்மை—உயர்ந்துள்ள உலகங்களை, நகா—இகழ்ந்து, ஒளி கிளைத்து—பிரகாசம் மிக்கு, ஒரு ஞான்றும் உகாது—ஒருபோதும் அழியாமல், நனம் தலை—அகலத்தைத் தம் மிடங்கொண்ட, உலகுக்கு எல்லாம்—எல்லா உலகங்களுக்கும், சேய் உயர்—மிகவும் தூரமாய் உயர்ந்திருக்கின்ற, பதத்தில்—(துருவ) பதத்தில், சென்று புகா—சென்று சேர்ந்து, புகலல் பாலார்—செல் லுதற்குரிய பான்மையை உடையவர்கள், வேந்தன்—துருவன்.

## பழியஞ்சின படலம்

(1) குரவன்—தகப்பன், செங்கோல்—நீதியான ஆளுகை, (இதற்கு எதிர்மொழி கொடுங்கோல்,) குலோத்துங்க வழுதி—குலோத்துங்க பாண்டியன், அரவு அங்கம் பூண்ட—பாம்புகளைத் திருமேனியில் அணிந்தருளிய, ஆதிநாயகன்—யாவர்க்கு முதல்வ ஞகிய தலைவன், வழிபாடு—பூசனை இயற்றலும், ஆறுப்பததிமை—நீங்காத அன்பு, செய்தலுமாகிய, நியமம்—கடன், பூண்டோன்—மேற்கொண்டோன்.

(2) அவ்வாறு (க)—ஆறு ஆறு பிள்ளைகளாக, பேர் அநந்த குணன்—அநந்தகுணன் என்னும் பெயுரை யுடையவன், வல் ஆண்மை—வன்மையினலான ஆண்மையில், வைப்பு அனையான்—சேர்த்து வைத்த நிதி போன்றவன்.

(3) கலை பயின்று—(பலவகையாகிய) நூற்களையுங் கற்று, பரி நெடுந்தேர் கரி பயின்று—குதிரையேற்றம், பெரியதேர ஏற்றம், யானை ஏற்றம் என்பவற்றைக் கற்றுப் பழகி, கைவாள்—சிறு வாட் போரையும், திறம்—வன்மை, அலைபயின்ற—அலைகள் பொருந்திய, அடல்—வென்றியாகிய ஆபரணத்தை, அணி—அணிந்த, தோள்மலை பயின்று—தோளாகிய மலையிலே ஏற்று, குளிர் தூங்க—குளிர்ச்சி யுண்டாக (இன்பமுண்டாகும்படி).

(4) உண் நீர் வேட்டு—(தன் மனையாள்) பருகுதற்குரிய நீரை வேண்ட, பெருவானம் தடவும்—பெரிய வானத்தை அளாவிய, ஒரு வாத—விட்டு நீங்காத, நீர் தேடித் தருவான் போய்—நீரைத் தேடிக் கொண்டு வந்து கொடுக்கும் பொருட்டுச் சென்று.

(5) இலைதலைய—இலைகளையுடைய உச்சியை உடைய, பழு மரத்தின் மிசை—ஆலமரத்தின் மேல், எய்தது—எய்யப் பட்டது, கொலைதலைய—கொல்லுதலைச் செய்யும் முனையினை யுடைய (அன்றிக் கொல்லுந் தொழிலில் தலைமையினை யுடைய என்றேனும், கொல்லுந் தொழிலை யுடைய போர்க்களத்துக்கு உரிய என்றேனுங் கூறுதலுமாம்.) கோப்புண்டு—சிக்குண்டு, கால்—காற்று, அலைய—(அமமரம்) அசை யும்படி, அலைத்து—(வீசி) அலையச்செய்ய, உம்மை வினை—முன் செய்த நல்வினை, உலப்ப—குறைதலால், வலைத்தலைய—வலையில் அகப்பட்ட, மான் நோக்கி—மானினது பார்வையைப் போன்ற (மருண்ட) பார்வையை உடைய பார்ப்பனியின், வயிறு உருவ—வயிற்றின் உள்ளாக, தைததன்று—தைத்து.

(6) அணங்கு—தெய்வப் பெண், அ வேலை—அச்சமயத்தில் ஏறிட்ட—ஏற்றிய (பூட்டிய), சிலை—வில், வெம்மை ஆளிஏறு அனை யான்—கொடிய ஆண்சிங்கம போன்றவன் (வேடன்), ஒதுங்கு நிழல் தேடி—ஒதுங்கி நிற்றற்குரிய நிழலைத்தேடி.

(7) ஆவி—தடாகம், புண்ணீர் வெள்ளத்து—இரத்தப் பெருக் கில், கால் தாழ்ந்து—கால் அமிழ்ந்து, உயிரை புறம் கொடுத்த—உயிரைவிட்ட, பண்—இசையைப் போலும் இனிய, ஈரம—குளிர்ச்சி யாகிய, மழலை மொழி—நிரம்புதல் இல்லாதமென் சொல்.

(8) அயில்போல்—(கூர்மையினால்) வேலைப்போன்ற, அ வழி—அம்பு தைத்த அந்த வாயிலிருந்து, சோர—பெருக, மருங்கு—பக்கம், அணைதல்—சேர்தல், உனக்கு என் இது உற்றது—உனக்கு யாது காரணத்தால் இத்துன்பம் உண்டாயிற்று, மத்து எறி—மத்தினால் கடையப்பட்ட, தண் தயிர்போல—குளிர்ச்சியாகிய தயிரைப் போல, சாம்பல்—வாடல்.

(9) இனையது—இப்படிப்பட்டதாகிய, தேர்வான்—அறிய, புறத்து—பக்கத்தில், ஒருசார்—ஓர் இடத்தில், காலுதல்—கக்குதல், முடக்கிய கை—முடக்கிய கையில், ஓர்ந்து—ஆராய்ந்து, விறல்—வலி.

(10) காப்பு—தொடுதோல் (செருப்பு,) வீக்குதல்—கட்டுதல், கச்சாளன்—கச்சை உடையவன், கூர்—கூர்மை, பகழிக்கோல்—குதையினை உடைய பாணம், பகழி—குதை, (அன்றிப்பகழி என்பதற்கு அம்பு எனவே பொருள் கொண்டு பகழிக்கோல் என்பதை ஒரு பொருட் பன்மொழி என்றலுமாம); எறிடு—எறிட்ட (பூட்டிய), கொலை செய்வான்—உயிர்களைக் கொல்ல, எற்பன—(அக்கொல்லுதற் றொழிலுக்கு) எற்றனவற்றை.

(11) எடா வேடா!—அடேவேடா! என் எழைதன்னை—என்மனைவியை, என்ன—என்று, எயிற்று—பற்களை உடைய, கூற்று—எமன், வல்வாய்விட்டு ஆர்த்து—வலிய வாயைத்திறந்து மிகவும இரைந்து (பெருங்கூச்சலிட்டு), மன்னவன் ஆணைப்பாசம் எறிந்து—அரசனது கட்டளையாகிய கயிற்றை அவ்வேடன்மேல் வீசி (க்கட்டி), (அன்றி மன்னவன் ஆணைப்பாசம் என்பதற்கு அரசனைக் குறிக்கொண்டு செய்த சததியமாகிய கயிறு என்று பொருள் கூறுதலுமாம.

(12) மட்டு அவிழ்—தேன்பெருகும், உள் துகள் இல்லா (த)—மனத்திற் குற்றம இல்லாத, சட்டகம்—உடல், நேர்—எதிராக, விட்டு—கிடத்தி, மாறன்—பாண்டியன், தமர்—உறவினர், கட்டழல்—மிக்க நெருப்பு, சிந்தா—(கண்களினின்று) சிந்தி, கை ஓச்சா—(மார்பினுங்) கையால் அடித்துக்கொண்டு.

(13) கோமுறை—அரசர்களுக்குரிய நீதியில், கோடா—தவறாத, முறை—(உனக்கு விண்ணப்பம், (முறையோ என்பதில் எ—அசை, ஒ— இரக்கக்குறிப்பு), கடி—வாசனை, மா—சிறந்த, மதிவானோன் வழி—சந்திரனாகிய தேவனது மரபு, தீமை செய்தாய்போல்—(நீ தீமைசெய்யாமலிருந்தும் செய்தவனாக) உன்னைக் கருதி.

(14) பிறங்கும் கோல்—புகழ் விளங்குதற்குக் காரணமாகிய முறையான ஆளுகை, மாறு அடு—பகைவர்களை அழிக்கும், மறங்

குன்று ஆறு—தன் வன்மை குறையாதபடி, காப்பது—காக்கும் இயல்பினது (காப்பதை—இதில் ஐசாரியை.) மறங்குன்றுதான்—பாவச் செயலை ஒழியாதவன் (வேடன்), செய்கொலை—செய்யுங் கொலைகளை, காவா(த) வழி—தடுக்காத இடத்து.

(15) வாயில் உளார்—வாயிற் காவலர், கோயிலின் மாடு—அரண்மனையின் பக்கம், அவிந்தாள்—இறந்தவளாகிய பார்ப்பனி, தாயினன்—தாங்கி, தமி—தனியாக, அயர்கின்றான்—வருந்துகின்றான்.

(16) என் குடை நன்று, என் காவல் நன்று என்று கூட்டுக, நன்றாயில்லை என்பது குறிப்பு, அறமலி செங்கோல்—தருமம் வளர்தற்குக் காரணமான ஆளுகையினால் (பயங்கள் ஐந்தாவன: அரசனாலும், அரசனது பரிவார மாந்தர்களாலும், பகைவராலும், கள்வராலும், மற்றும் விலங்குகளாலும் உண்டாவன.) மண்—மண்ணிலுள்ள உயிர்கள், கலி மூழ்க—துன்பத்தில் அமிழ, முயன்று ஏந்து—முயற்சி செய்து உயிர்களைத் துன்பத்தினின்று மீட்டுக்காக்கும், பொறைமை—பொறுக்குந் தன்மை, (அங்ஙனங் காக்கையில் உண்டாகுந் துன்பங்களைப் பொறுக்குந்தன்மை.) புலந்து—வாடி, போந்தான்—வெளியில் வந்தான்.

(17) உரைசான்ற—புகழானது மிக்க, நிகழ் செய்தி—நடந்த விடயத்தை.

(18) ஆர்—(இலைகள்) நிறைந்த, வடம் நீழல் இடை—ஆல மரத்தினது நிழலில், உலை ஊட்டும்—(கொல்லனால் உலைக்களத்திலிட்டுக் காய்ச்சப்பட்ட.

(19) அறம் நோக்கும்—தருமத்தையே கருதும் (அன்றி நீதி முறைகளை ஆராயும் என்பதுமாம்.) சந்தன வெற்பன்—சந்தன மரங்களை உடைய பொதிய மலையை உடையவனாகிய அப்பாண்டிய அரசன்; மறவன்—(கொல்லுதலாகிய) பாவச் செயலைச் செய்கின்றவன்; வன்மையுடையவன் என்றுரைத்தலுமாம், வேடன்.) எய்ப்பு ஆற—இளைப்பு நீங்க, மருங்கு ஓர் சார்—பக்கத்தில் ஓரிடத்தில்.

(20) கையேன்—இழிஞனாகிய யான், (கை—சிறுமை, அஃது இங்கு இழிவை யுணர்த்தி நின்றது.)

(21) தறுகண்—(தீமையைச் செய்தற்கு) அஞ்சாமையுடைய, மறவன்—இவ்வேடன், இக்கொலை செய்தான்—இந்தக் கொலையைச் செய்தவன்; யான் அலன் என்னாது—நான் அல்லேன் என்று சொல்லாமல், உளன் என்ன—அக் கொலைக்குற்றத்தை உடையவன்

யானே என்று உண்மை சொல்ல, சிக்க—மனந்தளரும்படி, ஒறுத்தால் அல்லது—தண்டித்தாலன்றி,(அல்லதை என்பதில் ஐ-சாரியை) ஒக்க—(அரசன் மனத்திற்குத்தமதுசொல்) ஏற்கும்படி, மந்திரர் உள்ளார்—ஆலோசனைக்குரியவர்களாய் உளவர்களும், பிறர் எல்லாம்—பிறருமாகிய யாவரும்.

(22) மள்ளர்—படைவீரர், (இங்கிது தண்டமியற்றும் சேவகர்களை யுணர்த்திற்று.) பின்னம்—பின்னர் (பின்னம் என்பதில் அம் சாரியை), பிழையில்லான்—குற்றம் இல்லாதவனாகிய வேடன், சொல் பெயராளுய்—சொல்லினின்று மாருதவனுய், தீர தேருமின்—நன்ருய் ஆராயுங்கள், என் செய்வான்—வேறு யாதுசெய்வான்.

(23) ஆற்ற—மிகுதியாக, ஒறுக்கும்—வருத்தும், தண்டமும்—தண்டத்துக்கும், கூற்றம்—சொல், மாற்றவரே—(இவர்கள் அவ் வேடனுக்குப்) பகைவர்களா? மாவோ—(இவர்கள் அவன் உணவுக் குரிய) மிருகங்களா? புள்ளா—பறவைகளா? (இவற்றுள் ஒன்று மல்லர்,) கோல் தொடி—கோல்போலுந் திரண்ட வளையலை அணிந்தவள், (பார்ப்பனியை வழிவந்த கோற்ருெடி என்ருர், அவளை அவ் வேடன் அறிந்திராதவன் என்றற்கு,) கொலை செய்வான்—கொல்லுந் தொழிலை யுடைய வேடன்.

(24) கைதவன்—(விலங்கு முதலியவற்றை) வஞ்சித்துக் கொல்பவன், கானவன்—வேடன் (காட்டில் வசிப்பவன்,) கொலை வேட்டம்—கொலையாகிய வேட்டை, வேட்டையாவது விலங்குகளையும், பறவைகளையும் கொல்லுதலும், பிடித்தலுமாம்,) ஓர் மா—ஒரு விலங்கை, எய்த இலக்கின் தப்பிய—எய்த இலக்கினின்று தப்பிய, கோல்தான்—அம்பே.

(25) தென்னவன்—பாண்டியன்,(தக்கதை என்பதில் ஐ சாரியை) தகவின்—தகுதியினல் (இன் ஐந்தனுருபு; ஏதுப் பொருளது) தம் அன்னர்—தம்மைத் தாமே ஒப்பவர்கள், இது நூலால் அமையாது—இது நூலால் அறிந்துரைக்க முடியாதது, தெய்வத்தாலே தேறும் வழி—தெய்வத்தால்தான் இதை அறிதற்குரிய வழி யுண்டாக வேண்டும்.

(26) இது—இதனை தீர ஆய்ந்து—நன்கு ஆராய்ந்து, ஈமம் கடன்—சுடலையிற் செய்தற்குரிய கடமைகள், நிறுவி—முடித்து, போது—(இங்கு) வா (புகுது என்பது போது என மருவிற்று.); தேம்—வாசனை (அல்லது தேன் என்பதுமாம்), வெங்கைத் துணர் தார்—வேங்கை மரத்தினுடைய பூங் கொத்தாலாகிய மாலை.

(27) முற்ற—செய்து முடித்து, கோயில்,—அரண்மனை, கடைவயின்—கடையில், கொன்—வன்மை, தங்கள் குடிக்கோர் குலதெய்வம் என்ன இருந்தார்—தங்கள் குடிக்கு ஒப்பற்ற குலதெய்வமாகப் பொருந்தியவராகிய சோமசுந்தரக் கடவுள், பணிந்தான்—வணங்கி, இதுகூறும்—(அடியில் வரும்) இதனைச் சொல்லலாயினன்.

(28) மன்று—(கநக) சபை, மறவன்—வேடன், அளப்பு அரிது ஆ—அளவிட்டுச் சொல்லுதற்கு அரியதாக, அவ்வேலை—அச்சமயம், இரத்தல்—வேண்டல்.

(29) புறம்பு ஒருசார்—பக்கத்தில் ஓரிடத்தில், உளம்தேற—மனத்தில் தெளியாமல் இருக்கும், மாற்றம் எலாம்—செய்தி முழுதும்,தேற்றுதும்—தெளியச் செய்வோம்,அகடு—வயிறு (நடு இடம), ஒரு வாக்கு—(அசரீரியாகிய) ஒப்பற்ற வாக்கு.

(30) செழியன்—பாண்டியன், செவிமடுத்து—கேட்டு, ஒருங்கு எய்தி—ஒன்றாய்க்கூடி. கரு ஆக்கும்—கருமையை உண்டாக்கும், மருள்மாலை—மயக்கத்தைச் செய்யும் மாலை, வேற்று உரு ஆக்கி—மாறு உருவம் புனைந்துகொண்டு, ஒருசிறை—ஓரிடம்.

(31) இறைவன்—கடவுள், மன்றல் மகன்—கலியாணப் பிள்ளை, மறலி—எமனால், இரண்டு இருள் குன்றம் என—இரண்டு கரிய மலைகளைப்போல, விடுத்த—அனுப்பப்பட்ட, கொடும்பாசம்—(உயிர்களைப் பிடிக்கும்) கொடிய கயிறு.

(32) இரு பகடு குன்று ஏறும்—பெரிய எருமைக் கடாவாகிய மலையில் ஏறும், கோன்—நம் அரசனாகிய தருமன், தருதிர்—கொண்டுவந்து கொடுங்கள், கொள்வது எவன்—கொள்ளுவது எப்படி? பிணி—நோய், என்செய்தும்—(நாம் இதனுக்கு) என்ன செய்வோம்.

(33) ஆறு ஆல்—வழியில் (வழியில் வந்த இளைப்பினால் எனப் பொருள் கூறுதலுமாம்.) ஆரவாரம்—பேரிரைச்சல், தாம்பு—கயிறு, புறம்—வெளி, ஈற்றுஆ—கன்றையுடைய பசு, (ஈன்—பகுதி, தட்டான் என்பதிற் போல் இதன் பகுதியும் தொழிற் பெயர் என்க. கவர்க என்றான் என்பது நிலைமொழியீற்றகரந் தொகுத்தலாய்க் கவர்கென்றான் என்றாயிற்று.)

(34) பனவன்—பார்ப்பான், பைந்தொடியாள்—பசுமையாகிய வளையலை அணிந்த பார்ப்பனி, சிந்த—நீங்க.

(35) ஒட்டிய — நெருங்கிய, பல்கிளை—பல சுற்றத்தவர்கள், துவன்றி—நிறைந்து, ஒல் ஒலி—ஒல்லென்னும் ஓசையோடு, மங்க

லம் தொடங்க—மங்கலச் சடங்கு தொடங்கியதனுல் (தொடங்கிய போது என்றலும் ஆம்,) பல் இயம்—பலவகையாகிய வாத்தியங்கள், குழுமிய—ஒன்ருய்க் கூடிய.

(36) பறை—வாச்சியம், ஆய்க்கழிய—ஆய்விட, ஒன்றும் இலை—(இவ் வுடம்பாற் பயன்) சிறிதுமில்லை, புனிறு—இளமை.

(37) மனைவி மாட்சியினுங்—மனைவியினது சாவினும் (தன் மனையாட்டி இறந்த துன்பத்தினும்) கழிதுன்பம்—மிக்க துன்பம் (இது உரிச் சொற்ருெடர்,) அலர்—மலர்ந்த, (இது என்பது மணமனைக்கண் நடந்த செய்தியைச் சுட்டிற்று.)

(38) போதி—போவாய், சிறை அழுவத்திடை—சிறையிடமாகிய கொடிய நிலத்தின்கண், (சிறை—குற்றஞ் செய்தார்க்குரிய காவல்,) செடி—முடை நாற்றம, தலைய—தலையை யுடைய, (இது சினையடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம், (குரல—மிடற்றின் ஒலியை யுடைய (இது பண்பின் அடியாகப் பிறந்த குறிப்புப் பெயர் எச்சம், இப்பெயரெச்சங்கள் இரண்டும் வேடன் என்பதோடியையும்.)

(39) தீத்தண்டம்—கொடிய தண்டனை, பொறுத்தி—பொறுப்பாய், விளியா—அழைதது, நனி நல்கி—மிகவும் அளித்து, அளி ஆறு—அருள் நீங்காத, (களியானை விழ எய்த கௌரியன் என்க.)

(40) எந்தையார்க்கு நான் செயத் தக்கது ஒன்று உண்டே என்றியைக்க.) பழிச்சி—துதித்து, கரைஇல்—அளவில்லாத, ஏதம்—குற்றம், (அ—து—சாரியை,) உலகு—உலகத்தில்உள்ளவர்கள், (இடவாகு பெயர்.)

## நளன் திருமணக் கோலம்

(1) வாய்ப்ப—பொருந்த, அண்ணல்—பெருமையை உடையவன் (நளன்,) அருள்பூண்டு—அருளைப்பெற்று, (உத்தரவுபெற்று), நல்மழவுகதிர்—அழகிய இளஞ்சூரியன், மால்வரை—பெரிய (இமய) மலையை, செழுமணி—சிறந்த மணிகள்.

(2) புயங்கள் என்னும்—தோள்களாகிய, பொலம்கிரிமீது—பொன்மலையின்மேல் (உருவகம்), தயங்கல்—விளங்கல், சோதி—ஒளி, கதிர்கள் தவழ்ந்தால் என—சூரியர்கள் தவழ்ந்தாற்போல, காதுகளில் அணிந்த குழைகள் புயங்களில் தவழ்தல் பொன்மலையின்மேல் ஞாயிறுகள் தவழ்தல்போன்றிருந்தது என்க. கயம்கொள்—குளங்களில் பொருந்திய, வெள்ளை கவின்—வெள்ளை இலையின் அழகு, வயங்கல்—விளங்கல்.

(3) (கற்பகத் தருவினை அழகிய பூங்கொடி தழுவியது போலத் தோள்களில் தோள்வளை அணிந்தார்கள். கற்பகம் புல்லிய—கற்பகத்தருவைத்தழுவிய, காமர்வல்லிஎன—அழகிய பூங்கொடிபோல, கவின்—அழகு, தூ—பரிசுத்தமாகிய, மணிசுடர்—மணியினது ஒளி, தூங்குதல்—பொருந்துதல், பொலம் தொடி—பொன்னாற் செய்த வளை, திண்புயம்—வலிமையாகிய தோள்.

(4) (நளனது அரையில் வெண்மையாகிய ஆடையை அணிந்தது, வெண்முகிலானது மேருமலையைவந்து சூழ்ந்ததுபோல் இருந்தது என்க), துளங்குதல்—அசைதல், தெள்திரை—தெளிந்த அலைகள், வையும் அளந்து கோடற்கு—அளவிட்டுக் கொள்ளுதற்கு, அருவிலை—அரியவிலையினை உடைய, பூ துகில்—அழகிய ஆடை, மருங்கு—இடுப்பு, சாத்தல்—அணிதல்.

(5) பாந்தள்—பாம்பு, பார்பொதுநீக்கிய—பூமி (பல மன்னர்க்கும்) பொதுவாயிருத்தலை நீக்கிய, சேஅடி போதினில்—சிவந்த திருவடிகளாகிய செந்தாமரை மலர்களில், கனைகழல்—ஒலிக்கின்ற வீரகண்டை, காந்துதல்—பிரகாசித்தல், வீக்கினார்—கட்டினார்.

(6) முழவம்துவைத்திட—முரசுஒலிக்க, அம்—அழகிய, பொன் சூழி—பொன்னாற்செய்யப்பட்ட முகபடாம், புகர்முகம்—புள்ளிகளை உடையமுகம், புகர்முகம்—யானை, (புள்ளிகளையுடைய முகத்தை உடையது, அன்மொழித்தொகை, மகிழ்ச்சியோடேகினான் என்பதில் ஓடு விசேடணப்பொருளது.)

(7) நேமி—கடல், தாமம்—வெற்றிமாலை, தாங்கினர்—தாங்கிக் கொண்டு (முற்றெச்சம்), வாமம்—அழகு, மேகலை—மேகலாபரணம், காமர்—அழகிய, செம்பொன்கவரி—செம்மையாகிய பொன்னாற் செய்யப்பட்ட சாமரை, இரட்ட—வீச.

(8) தாக்கணங்கு—திருமகள், உவந்து களிப்பு உற—மகிழ்ந்து களிக்க, வண்ணம் மா மணி—அழகிய சிறந்த மாணிக்கக் கற்கள், மண்டபம்—கலியாணமண்டபம், எய்தினான்—சேர்ந்தான்.

(9) கள்அறா—தேன்நீங்காத, மலர்—மலர்மாலை, நாற்றி—தொங்கவிட்டு, அகன்ற—விசாலமான, மாடம்—உப்பரிகை, பிள்ளை மான்—இளமானின் பார்வையை(மான் என்பது அதன் பார்வையை உணர்த்தலின் முதலாகுபெயர்) நிகர் நோக்கி—ஒத்த பார்வையை உடையவள், (தமயந்தி.), பெய்கழல் (கழல்பெய்)—வீரண்டை அணிந்த, மணம் தவிசு—கலியாணமேடை.

(10) கணித்தா—சோதிடர், விதியின்நாடி — (சோதிடநூலிற் சொன்ன) முறைப்படி ஆராய்ந்து, உதக நல்கும்—தாரைவார்க்கின்ற, நலம் ஓரை—நல்லமுகூர்த்தம், (நல்லவேளை), பதலை—வாத்தியங்கள், ஆர்த்துஎழ—மிகவும் ஒலிக்க, பாவையை நல்கிய—தமயந்தியைப் பெற்ற (மன்—வீமமகாராஜன்) மதுமலர்த்தொடை—தேனை உடைய மலர்மாலையை அணிந்த (மன் எழுந்தான்) ஆரோ—அசை நிலை.

(11) குமரன்—காளைப் பருவத்தினனாகிய நளன், கோல்வளை—கோல்போலுந் திரண்ட வளையை அணிந்த தமயந்தி, இமயமாது—பார்வதி, (பர்வதராஜனுடைய புதல்வி,); இறைவன்—சிவபிரான், அமைதிர்—பொருந்தி யிருங்கள், என்ன—என்று சொல்லி.

(12) சாந்தம் மூழ்கும்—சந்தனக்குழம்பில் மூழ்கப்பெற்ற, ஆர் அழல்கு—பொருந்திய அக்கினிகாரியத்திற்கு, எய்ந்த யாவும்—பொருந்திய எல்லாவற்றையும், இனிது—நன்கு, ஆய்ந்த—ஆராயப்பட்ட, நான்மறையின்வழி—நான்கு வேதங்களின் நெறியின்படி, ஆய் இழை—தமயந்தி, காந்தள் மெல்விரல் கை—காந்தள் மலர்களின் இதழ்களைப்போன்ற விரல்களை உடைய கை.

(13) வந்து—வலம்வந்து, ஆர—நிறைய, திருமகள்—திருமகளைப் போன்ற தமயந்தி, பங்கயம் பதம்—தாமரை மலரைப்போன்ற பாதங்களை.

(14) (தமயந்தி கலியாணத்திற்குரியன யாவு முடிந்தபின் தன் தந்தையை வணங்கினாள் என்பது.) வல்லியின்—கொடியைப் போல், ஒல்கிப்போய்—அசைந்து சென்று, (தந்தை தாளில் குழல் தேமலர்சூட்டினாள் என்க), தேன் அவாம்—வண்டுகளால் விரும்பப்பட்ட (குழல் என்பது.)

(15) தேன்மொழி—தேன் போன்ற இனிமையாகிய மொழியை யுடைய, விதர்ப்பர்கோன்—வீமமகாராஜன், உவந்து—களித்து (திருமகளும், மாலும்போல நீ நள மகாராஜனோடு கூடிவாழ்க என்று வாழ்த்தினன் என்க), பூவை—குயில், (குரலாற் குயில்போன்ற திருமகள் என்க. பூவை உவமை யாகுபெயர்.)

(16) மாதவத்து முனிவரும்—சிறந்த தவத்தினைச்செய்யும முனிவர்களும், காதல்வேலை—ஆசையாகிய கடல், ஆதரத்தொடும்—அன்புடனே (ஆசி இயம்பினர் என்க.)

## நரியும் பருந்தும்

(1) ஒருவன்—ஒரு மறையோன், உதவிய—பெற்ற, ஈம வனம்—சுடுகாடு, முதிர்சிறை—முதிர்ந்த இறகுகள், துண்டம்வாய்—துண்டமாகிய வாய், (விழி நீர்நிறைதர நீவிர் அழுவது என் என்க.)

(2) பெற்றியர்—தன்மையர், இகலன்—நரி, நிறந்தனில்—மார்பில்.

(3) தோன்றல்—பிள்ளை, அ வயின்—அந்த இடம்.

(4) இகலனார்—நரியார் (இழிவான் அஃறிணை உயர்திணையாயிற்று.), இன்பதுன்பங்கள்—சுகமும் துன்பமும, தொந்தம் அன்றோ—(ஒன்றோடொன்று) தொடர்பு உடையன அல்லவோ (அ-து—சாரியைகள்.)

(5) சால—மிகுதியும், பாாக்கும்—நன்மையாக நோக்கும், பருவம்—(நல்லூழின் பயனைச்செய்யும்) காலம்.

(6) பிழைத்து போயின ஆறு—உயிர் பிழைத்துப்போன வகையை, (கண்டிலேன் என்று பருந்து கூறியது.) சேய்செவி—குழந்தையின் காதில், (வினவிடுமோ) வாய் உரைதருமோ—பேசுமோ, அநித்தியமே—நிலையற்றதே, ஏ—தேற்றம்,) பாறு—பருந்து.

(7) தீட்டிய—இடப்பட்ட, சிந்தூரம்—திலகம், வாள்முகம்—ஒளியையுடைய முகம், தோடு—இதழ், ஆம்பல்—அல்லிப்போதுகள், விண்டில—மலரவில்லை, நீட்டியபோது—(இன்னும்) நீடித்துள்ள பகற்காலத்தளவும், கண்டுபோம்—பார்த்திருந்துபோமின், கங்கம்—பருந்து.

(8) எரிவிழி—நெருப்புப்போன்றகண், பேழ்வாய்—பெரிய வாய், பிறை எயிறு—பிறைச் சந்திரனைப்போன்ற பற்கள், இரும்பூதம்—பெரியபூதம், விரிதலை—(மயிர்) விரிந்ததலை, பரிவுபோல்—அன்புடைமையாற் கூறுவனபோல, வஞ்சனை—கபடம், பற்பல—பல்பல தந்திர மொழிகள்.

(9) இருதிறன்—இரண்டு பக்கத்து, மகவு—குழந்தை, பொன்மலை—அழகிய மலையரசனுடைய புதல்வியாகிய, வல்லியோடு—பூங்கொடிபோல் பவளாகிய பார்வதிதேவியோடு, கருதிய—(அக்குழவியைத தங்கள் பசியை நீக்கற்குரிய உணவாகும் என்று) எண்ணிய, உறா வரம்—உண்டாகாத வரம.

(10) மிகப்படும்—மிக்க, உழந்தனர்—வருந்தினார்கள், (மேதினி மீதினில் தாம் தாம் சுகப்பட நினைப்பார், எம்பெருமான் சூழ்ச்சி ஒன்றாய் முடிந்திடும்: ஏ—அசை, இது நாம ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும் என்னும் பழமொழியின் கருத்து; இது வேற்றுப் பொருள் வைப்பணி) சூழ்ச்சி—ஆலோசனை, ஒன்றாய்—வேறொன்றாய், முடியும் என்பது.)

## நரி வென்றி

நரி வென்றி—இதற்கு நரியினது வென்றியை யுணர்த்தும் நூலென்பது பொருள். வென்றி=வெல்+தி, வெல்—பகுதி, தி—தொழிற் பெயர் விகுதி, லகர தகரங்கள் றகரமானது சந்தி, ற்—ன் ஆனது மெலித்தல் விகாரம்.

(1) தேன் அளவி—வண்டுகள் சேர்ந்து, செய்ய—அழகிய, மாவனத்து—பெரிய காட்டில், சதுர் ஆர்—வல்லமைபொருந்திய, அம் திறத்தின்—அழகிய சாமார்த்தியத்தால், (சிறந்த சாமர்த்திய மென்பது, அம் நரி யெனினுமாம்) ஆர்ந்து—பொருந்தி.

(2) உழன்று—வருந்தி, ஊண்—உணவு, தளர்ந்து—சோர்ந்து, நாடி—(தனக்குள்) ஆலோசித்து, என்னே—என்ன அதிசயம், என் செய்வன்—யாது செய்வேன், காண்—ஏ—இரண்டும் அசைகள்.

(3) என்னு—என்று, கவன்று—வருந்தி, பல்நாள் பயின்ற—(மனிதரதுகாலில்) பலநாளளவும் பழகிய, மருண்ட மதி—மயங்கிய அறிவு, மன் எண்ணும்—மிகுதியாய் நினைக்கும.

(4) தேர்ந்து தெளியாமல்—நன்றா யாராய்ந்தறியாமல், ('எண்ணித்துணிக கருமம்' என்னுந் திருக்குறளின் கருத்தை யிங்கு நோக்குக); தேர்ந்து அறிந்து—ஆராய்ந்தறிந்து, நல் உணவு ஆக ஏற்றல்—சிறந்த உணவாகக் கொள்ளுதல் வேண்டும், அன்றேல்—அங்ஙனம் ஆராயாமல் கொள்ளின், வைச்ச வலைக்குள்—வைக்கப் பட்ட வலையில், படல் ஆம்—அகப்படுதலோடு ஒக்கும், (வைச்ச—வைத்தவென்பதன் போலி, நன்கு ஆராய்ந்தறியாமல் இச்செருப்பைக் கடித்துத் தின்னல் வேடாவலையி லகப்படுவதை ஒக்கும் என்பது.)

(5) அந்தோ—ஐயோ! மருத்துவா—வைத்தியர், இருத்தியவர் நீர் ஆர் ஓ—வைத்தவராகிய நீர் யாரோ? (நரியினெதிரில் ஒருவரு மில்லாதிருந்தும் செருப்பைக் கண்டு அதனை அங்குவிட்டவர் ஒருவரிருக்க வேண்டுமெனக் கருதி அஃதவ்வாறு வினவிற்றென்க.)

(6) இனிது அளித்தல்—நன்ருய்க் காப்பாற்றல், செம்மை—தகுதி, செல் நெறியீர்—செல்லும் வழியில் நடப்பவரே! அம்மம்ம—ஆச்சரியம்! ஆச்சரியம்!!; நலம் ஆர்—நன்மை பொருந்திய, இல் செறிய—வீட்டில் நிரம்பியிருக்க.

(7) என் கு இன்று—எனக்கு இப்போது, திரு உளம்—அழகிய மனக்கருதது, வெம்பசி ஆம் தீது—கொடிய பசியாகிய துன்பம், ஓவச் செய்தல்—நீக்கல், திறம் வன்மையாம்.

(8) முன் ஆ(க)—(எனக்கு) எதிராக, முன்னிட—நினைத்து, உற—பொருந்த, கள்ள மனம்—கபட எண்ணம், கணித்து—ஆலோசித்து

(9) ஆய்ந்து—பரிசோதித்து, உன்னி—நினைத்து, உற்று இருக்க—பொருந்தியிருக்க, நல் திறத்தால்—சிறந்த சமர்த்திஞல், நவில் வனத்து தெய்வம்—சொல்லப்பட்ட வனதேவதை, (காட்டில் வசிக்கும் ஒருவகைத் தெய்வமென்க). அங்கு உற்று—அவ்விடத்திற் சென்று, உற கேட்டு—நன்ருய்க் கேட்டு, (தான்—அசை.)

(10) ஆர்ந்த கலை—(அழியாமல்) பொருந்திய நூல்கள், ஆய்ந்து உரைத்த—ஆராய்ந்து சொல்லிய, நல் நெறிகள்—சிறந்த (நியாய) வழிகள், எழில் நரியே—அழகிய நரியே! செப்பிய ஆ (று)—(நீ) சொல்லியபடி, நேர்ந்த—(உனக்கு) உண்டாகிய, இரும் பசி—மிக்க பசி, அவற்று ஏற்றதனை—அந்தச் செருப்புகளில் (உனக்குத்) தகுதியானதை.

(11) ஓங்கு பசி—மேலும் மேலும் மிகும் பசி, என்ஞ முன்—என்று கேட்பதற்கு முன்பே, ஏகுதல்—(இவ்விடம் விட்டு) செல்லுதல், உ(ள்)ளம் துணியா—மனத்தில் துணிவுகொண்டு.

(12) தூறு அதனை உற்று—புதரை யடைந்து, பீடு இயலும்—பெருமை பொருந்திய, முன்கூடி—(அதன்) எதிரில் தோன்றி, ஈங்கு உற்ருய்—இந்தப் புதரில் (வந்து) சோர்ந்தாய், நல்நேயம் உள்ளாய்—மேன்மையாகிய அன்பை யுடையாய்! நவில்—(நீ) சொல்.

(13) ஈது என் அருமை துயரம்—இதுவென்ன கொடுந் துன்பம், துயரம்—இங்கே துன்பமென்னும் பொருள்பட நின்றது, தீ சூழ்ந்த மாண்பு—தீயிஞல் சூழப்பட்ட தன்மைபோலும், ("வேடன் வலை... மாண்பு" என்றது, ஒரு துன்பத்தினின்றுந் தப்பமுயன்று வேருெரு துன்பத்திற் குள்ளாதலைக் குறித்தது, காட்டிலே ஓரிடத்தினின்றுவோடிப் புதரில் மறைய, அங்குத் தன்னைவிடாது அவ்வன தெய்வந் தொடர்ந்து வந்தமைபற்றி நரி இவ்வாறு கருதிற்றென்க.)

(14) துன்னு—அடைந்து, சொல் திறம் சார்—சொல்வன்மை பொருந்திய, நெஞ்சு அயர்ந்து—மனஞ் சோர்ந்து.

(15) சொல்லின் திடம் கோடும் —சொற்களின் உண்மைகெடும், (சொல்லின்—சொன்னால், திடம்கோடும்—(சரீர) வலிமை கெடுமெனினுமாம்,) கோடுதல்—வளைதல், (இங்கே அது கெடுதலுக்காயிற்று), திகைப்பு—பிரமிப்பு, (இன்னது செய்வதெனத் தோற்றாத நிலைமை.)

(16) உரம் சால்—(மன) வலிமை நிறைந்த, கலை வல்லோர்—நூல்களில் வல்லவர், பொங்கு பகை—மிகுந்த பகை ('கடனும்பகை' எனக் கூட்டுக.)

(17) உறு சூழ்ச்சி—பொருந்திய உபாயம், செயிர்—குற்றம், அயர்வு இன்றி—தளர்ச்சி யில்லாமல், பேதுறுத்தல்—புத்திமயங்கச் செய்தல், (இஃதிங்கு ஏமாற்றல் என்னும் பொருளில் நின்றது, நரி அவ்வன தெய்வம் தன்னைவிடாது பின் தொடர்வதைக் கண்டு, "இனி நாம நமது உயிரையாயினும் விடுதல்வேண்டும்; அன்றி, இதனை யேமாற்றவாவது வேண்டும்" எனத் தனக்குள் நினைத்ததென்பது).

(18) சூழ்ச்சி—உபாயம், மயர்வு இன்றி—மயக்கமில்லாமல், வயம் உற—வெற்றியடைய, தொக்க முள் ஆர்—(ஒன்று) கூடிய (பல) முட்கள் நிறைந்த, தூறு இன் இடை—புதாகளின் நடுவில், தோய்ந்து—பொருந்தி.

(19) சோர் மனம்—தளர்ந்த மனம், கொடுமை முனை—கொடிய கூரிய முனை, நேர்மை அற—தகுதி நீங்க, (நேர்மை அழகெனினுமாம்), உடல் கண் உற்று கீற—சரீரத்தில் வைத்துக் கீற, செம்மை குருதி—சிவப்பாகிய இரத்தம், ஒரு கண்ணும் அற்றது—ஒரு கண்ணும் நீங்கினது.

(20) மன்னும் உரம சோர்ந்து—நிலைபெறும வலிமை தளர்ந்து, வா (வு) ம் விரைவு ஆர் கால்—தாவியோடும் விரைவு பொருந்திய கால்கள், மறைவு ஆம் பாங்கு—மறைவாகிய இடம்,நல் நயம் கூர்—மேன்மையாகிய இன்பம் மிகுந்த, சத்து எய்தி—வலிமையடைந்து, தகைந்து—மறுத்து.

(21) வாய்ப்பு உடைய—தகுதியுடைய, செய்ய விழி—அழகிய கண்கள், செவ்வியவோ—தகுதியானவையோ, உய்ய—பிழைக்க, விரை மாண் அடிகள்—வேகமாய்ச்செல்லும் பெருமை பொருந்திய பாதங்கள், வன்மையவோ—வலிமையுள்ளவையோ, வண்ணம்

உடல்—அழகிய உடம்பு, மாண உரை—உண்மையாகச்சொல், மாண்பு—பெருமை, (இஃதிங்கே உண்மை யென்னும் பொருள் தந்து நின்றது.)

(22) செம்மைய—தகுதியானவை, வன்மைய—பலமுள்ளவை, வளத்தது—வளப்பத்தினையுடையது, கிளர் நரி—விளங்குகிற நரி.

(23) சோர்வின—தளர்ச்சியையுடையன, நோயின்—துன்பத்தால், இன்ன இயல்—இப்படிப்பட்ட தன்மை, என் இயல்—எனது தன்மையாம்.

(24) மாண் நரி—பெருமை பொருந்திய நரி, துனி—கவலை, (நடுக்கமெனினுமாம்) தாழ்வு அகன்று—குறைவு நீங்கி, சார்ந்து—அடைந்து.

## கடோற்கஜன் தூது

(1) கொற்றவன்—அரசன் (துரியோதனன்), வாயில் இன்—அரண்மனை வாயிலின் கண், நின்றவர்—வாயிற் காவலா, பகர்வான்-சொல்லும்பொருட்டு, முதிர—மேன்மையுற, எதிர் அறு வெற்றி அரிகொடியோன் மகன்—(நான்) ஒப்பில்லாத வெற்றியை உடைய சிங்கக்கொடியை உடைய வீமனுடைய புதல்வன், (என்றனன்), விக்ரமன்—பராக்கிரமமுடையவனான கடோற்கஜன்.

(2) தீ உரும் ஏறு என—தீயைச் சிந்தும் பேரிடிபோல, ஓர் செம்மொழி இலாதவன்—சிறிதும் நல் மொழியைப் பேசுதல் இல்லாத வனாகிய துரியோதனனது, மொழி வழி—கட்டளையின்மேல், (புதல் வனை யிழைந்தமையின் வருந்தும் மனத்தினை உடைய துரியோதனன்), வெம மொழி—கடுஞ் சொல், வித்தகன்—தூதன், (நுந்தை மெய்ம்மை எம் மொழி என்று துரி யோதனன் கேட்டனன்.)

(3) மௌலி—தலை, வெயிலவன்—சூரியன், கனல்—நெருப்பிலே,

(4) அமரில்—போரிலே, பகை—பகைவரை, மலைப்பது—கொல்லுதல், ஐயன்—(எங்கள் தந்தையாகிய) தருமன், எஞ்சினன்—இறந்தான் (என்க) வன்திறல்—வன்மையாகிய வீரமிக்க, வேறு—(அவ்வீரத் துக்கு) மாறான, ஒருசஞ்சலம்—கவலை ஒன்றும், நிசாசரன்—இரவில் சஞ்சரிக்கும் அரக்கன்.

(5) வில் மைந்தில் மிக்கவருக்கு—வில் வலியிற் சிறந்த வீராகள் இறந்ததற்காக, அழுது—புலம்பி, இரங்கி—வருந்தி, அாற்றுதல்—கதறுதல்.

(6) நடுங்கி—(அருச்சுனன்) நடுக்கமுற்று, பயத்து இரவின்—அச்சத்தைச் செய்யும் இராப்போதில், அரன் மருப்பதம்—கயிலை மலை, படை—பாணம் (பாசுபதாஸ்திரம்), மகரம் மோதும் கயம்—மகரமீன்கள் பாய்கின்ற கடல், (கயம—ஆழமான இடம்).

(7) என்னினும்—என்னைவிட, பார்தனக்கு உரியன்—பூமியை ஆளுதற்குரிய வல்லமை யுடையவன், சிலை தொழில்—விற்போரில், உந்தையினும்—உங்கள் தந்தையாகிய பீமனிலும், சால வலியன்—மிகவும் வன்மை உடையவன், தோள் உரன்—புய வன்மை.

(8) ஆளை—ஒருமனிதனை, ஆள்—மற்றொரு மனிதன், நிலை அறிவது அல்லாது—(எதிரில் நின்று காணப்படும்) உருவத்தை மாத்திரம் அறிவது அல்லாமல், மற்று—அவனுடைய வலிமை முதலியவற்றை, அறிபவர் யார்—அறிய வல்லவா எவர்? (ஒருவரு மிலர், அணிந்த—அணிவகுத்துச் செயப்படும, (மன் ஓ, அசைகள்) பாளை வாய்—பாளையை உடைய, கமுகு—பர்க்குமரம், மிடறு—கழுத்து, (உச்சியின் கீழ் பாளை பொருந்திய இடம்,) பழம்—நெற்றுகள், முழுது ஆளும்—முழு உரிமையுடன் ஆளு கின்ற, மன்னர் கோமான்— அரசர்க்கரசனாகிய (துரியோதனன்.)

(9) அரசன் மகன்—துரியோதனனுடைய மகன், பெரியது அன்று—பெரிது அல்லவாம், அங்கர் கோமான்—அங்கதேசத்தில் உள்ளவர்களுக்கு அரசனாகிய கர்ணன்.

(10) ஆண்மை கூறி—வீரம் பேசி, பங்கு இருந்த—இடப் பாகத்தில் இருக்கும், உமாபதிபால்—உமாதேவியின் நாயராகிய சிவபெருமானிடம், கொஙகு—வாசனை, மற்று என்செய—(அவ்வருச்சுனனை அழிப்பது அன்றி) வேறு யாது செய்ய.

(11) இவன்—கர்ணன், இடிம்பன் மருகன்—கடோற்கஜன், புரம் போல்—திரிபுரங்களைப் போல, பாடிவீடு—பாசறையை, அழல் ஊட்டி—தீ யுண்ணச் செய்து, (எரித்து), பவனன் மகன் மகன் என்னும்—வாயுவின் புதல்வனாகிய வீமனுடைய மகன் நான் என்னும், பரிசு—தன்மையை, ஈடு படுத்துவேன்—பெருமையையும் அழித்துவிடுவேன்.

(12) தசை குருதி—தசையும் இரத்தமும், நிசை புலரும் முனம்—இவ்விரவு கழிதற்குள், முனைந்து—போர் செய்து, மறுத்து—நீக்கி, உடற்றல் ஆகாது என்று—போர் செய்தல் கூடாது என்று எண்ணி.

(13) இகல் பொருதல்—போர் செய்தல், பருவம் உறு—தக்க வயது நிரம்பாத, தனிகுதலை—ஒப்பற்ற மழலைச் சொற்களைப் பேசும், இது கொண்டோ—இந்த வெற்றியைக் கொண்டோ? புகல்கின்றீர—(நீங்கள் வீரம) பேசு கின்றீர்கள், (ஏ—இகழ்ச்சிக் குறிப்பு.)

(14) வரைக்கு—மலைக்கு, உரகம் அணி—பாம்பினுருவத்தை கொண்ட, உருத்து நோக்கி—சினந்து பார்த்து, அரக்கியின் மகன் என்றது கடோர்கஜனை, அரக்கன் ஆதலின் அவனுக்கு இராப் பொழுது வன்மை அதிகமாய் இருக்கும், அவனை இப்பொழுது வெல்லுதல் முடியாது என்பது கருத்து.) அரக்கி—இடிம்பி.

## திருக்குறள்

### அறம்

(1) மாசு இலன் ஆதல்—குற்றமில்லாதவனுகுக ; மனத்துகண்—மனத்திலே, அனைத்து—அறத்தின் இயல்பு அவ்வளவினதே, பிற—மற்றவை, ஆகுல நீர—ஆரவாரத்தின் தன்மை யுடையன.

(2) அழுக்காறு—பொறாமை, அவா—ஆசை, வெகுளி—கோபம், இன்னு சொல்—கடுஞ்சொல், இழுக்கா—ஒழித்து, இயன்றது—நடந்தது.

(3) மகன் கு ஆற்றும் நன்றி—பிள்ளைகளுக்குச் செய்யும் நன்மை, அவையத்து—சபையில், முந்தி இருப்ப செயல்—முந்பட்டவனய் இருக்கும்படி செய்தலாம.

(4) தம்மின் இனிது—தமமினும இனிதாம் (தம் மக்களது அறிவுடைமையைக் கண்டபோது பெற்றோர்களுக் குண்டாகும் மகிழ்ச்சியினு மிக்க மகிழ்ச்சி அறிவுடைய பெரியோர்களுக் குண்டாகும் என்பது கருத்து.) ‘தம்மின் இனிது’ எனக் கூட்டுக.

(5) பெரிது உவக்கும்—மிகவும் சந்தோஷிப்பான், சான்றோன்—(கல்வி கேள்விகளில்) நிரம்பியவன்.

(6) ஆற்றும் உதவி—செய்யும உபகாரம, என் நோற்றான் கொல்—என்ன தவஞ் செய்தானே ?

### நன்றி

(7) நன்றி—(பிறா தனக்குச்செய்த) உதவி, நன்று அல்லது—தீமை.

(8) எ நன்றி கொன்றார்க்கு உம் —எவ்விதமான நன்மையை அழித்தவர்களுக்கும், செய் நன்றி கொன்ற மகன்கு— பிறர் செய்த உதவியை மறந்தவனாகிய ஒருவனுக்கு, உய்வு இல்லை—பிழைத்தற்குரிய வழி இல்லை.

## கொல்லாமை

(9) அறம்வினை— எல்லா அறங்களுமாகிய செய்கை, கொல்லாமை—(ஒருயிரையும் கொல்லாதிருத்தல், கோறல்—(அவற்றைக்) கொல்லுதல், பிறவினை எல்லாம் தரும்—பாவச்செயல்கள் யாவற்றையும் (தானே) தரும்.

(10) தன் உயிர் நீப்பினும்—தன் உயிர் உடம்பினின்று நீங்கிப் போவதாயினும், பிறிது இன் உயிர்—வேறொன்றினது, இனிய உயிரை.

# ந ா ல டி ய ா ர்

## கல்விப்பொருள்

(1) (கல்வி) இம்மை—இப்பிறப்பின் பயனை, பயக்கும்—தரும், ஈய—(பிறர்க்கு) ஈதலால், குறைவு இன்று—குறைதல் இல்லை, தம்மை—(கற்ற) தம்மை, விளக்கும்—(அறிவினால்) விளங்கச்செய்யும், தாம் உளர் ஆக—தாம் உளராகும்படி செய்து, கேடு இன்று—(தான்) கெடுதல் இன்றியிருப்பது (ஆதலால்,) கல்வி போல்—கல்வியைப்போல், மம்மர்—பேதைமையாகிய நோய், எம்மைஉலகத்தும்—எவ்வுலகத்திலும், காணேம்—கண்டிலோம்.

(2) (கல்வி) வைப்பு உழி—வைத்த அடத்தினின்று, கோட்படா—(தாயாதிகள்) முதலியோரால் கொள்ளப்படமாட்டா, வாய்த்து—கிடைக்கப்பெற்று, ஈயின்—(ஏற்போர்க்கு ஈ) கொடுத்தால், மிக்க சிறப்பின்—(கற்றோர்க்கு) மிகுந்த சிறப்பு உடைமையை நோக்கி, செறின்—(அரசர்) (கோபித்தால், அபகரியார், ஆதலால், ஒருவன் மக்கட்கு) எச்சம் என—தான் இறந்தபிறகு ஒழிந்து நிற்கும் பொருளாக, செய்வன—தேடி வைத்தற்குரிய பொருள், விச்சை—கல்விப்பொருளேயாம், (வித்தை—விச்சை என்றாயிற்று, இது போலி.)

லையடிகள் நூ

## செல்வப் பொருள்

(3) மூன்றில்—(ஒருவன்) அறம், பொருள், இன்பம் என்னு மூன்றிலே, வடு இல்லாமல்-(அவமதிப்பாகிய) குற்றம் இல்லாமல், மன்னிய—நிலைபெறும்படி, இருதலையும்—முன்நின்ற அறத்தையும், பின் நின்ற இன்பத்தையும், உலைபெய்து—(கொல்லன்) உலையில் இட்டு அடுவது போலும்—காய்ச்சுவதனால் உளதாகும் துன்பத்தை ஒக்கும்.

(4) நாகும்—இளங்கன்றும், புல் ஈரம் போதின்—(நிலம) சிறிது ஈரமாகிய காலத்தில், உழவே போல்—உழுதற் கருவியேபோல், (அக்கருவி நிலத்திற் பதியாமைபோல்) மீது ஆடி—கேட்போர் உள்ளத்திற் பதியாமல், செல்லா ஆம்—ஏற்றுக்கொள்ளப் படாதனவாம்.

### ஈகை

(5) உண்ணான்—(ஒருவன் நல்லுண்டிகளை) உண்ணமலும், ஒளி—மதிப்பை, நிறான்—நிலைக்கச்செய்யாமலும், கொன்னே—கைம்மாறு வேண்டாமலே, வழங்கான்—இரப்பவர்க்குக் கொடாமலும், அஆ—ஐயோ (இழந்தான் என்று எண்ணப்படும்.)

• (6) செற்றும்—வருந்தியும், கெடாத—தாம் கெடாமைக்குக் காரணமாகிய, நல் அறமும் செய்யார்—துறவறத்தையாயினும் செய்யாமலும், வைத்தீட்டினார்—(ஈட்டிவைத்தார்)—(பொருளைத்) தேடிவைத்தவர்கள்.

### நட்பு

(7) தானே நந்தும்—தானே பெருகும், தொடர்பு—நட்பு, மதியம் போல்—நிறைந்த மதி குறைதல்போல, வைகலும்—தினமும், வரிசையால்—முறையில்.

(8) தண் சேர்ப்ப—குளிர்ச்சியாகிய துறையை உடையவனே, (கரும்பை) நுனியின்—நுனியினின்று, தின்றால் அற்று—தின்றாற் போலச் செல்லச்செல்ல விருப்பந்தருவதாகும்.

நுனி நீக்கி—நுனியினின்று தின்னுதலை நீக்கி, தூரின்—வேரினின்று, தின்றால் அன்ன—தின்றாற்போன்ற, தகைத்து—(நாள் செல்லச்செல்ல வெறுக்கும்) தன்மை உடையது.

### அறிவு

(9) உப்பு ஈண்டு—(அதில்) உப்பாகிய சுவை மிகுந்த, உவரி பிறத்தலால்—உப்புநீர் பிறத்தலால், மக்கள் என்பார்—மக்களென்று

சொல்லப்படும் கல்வி அறிவுடையார், தம் தம்—தம் தம்முடைய, இனத்து—(சேர்ந்த)இனத்தை, அனையர் அல்லர்—ஒத்த செயலினர் அல்லர், மனத்து—தம் மனத்தை, அனையர்—ஒத்த செயலினராவார்.

(10) நிலைக்கண்—நிலையில், நிறுப்பானும்—நிறுத்த வல்லவனும், நிலைகலக்கி—நன்னிலையினின்று தவறுதல் செய்து, கீழ் இடுவானும்—தீய நிலையில் இருத்தும் மெல்லியனும், நிலையினும்—நன்னிலையினின்றும், மேல் மேல்—மேலு மேலும், உயர்த்து—(தன்னை) உயரச்செய்து, நிறுப்பானும்—நிறுத்த வல்லவனும்.

## கடற்கரைக் காட்சி

## குயிலும் பாடகச்சிறுவனும்

வரி—1—3. இளவேனில் கு—இளவேனில் பருவத்தில், (இளவேனில் பருவமாவது—சித்திரை வைகாசி மாதங்கள், இளவேனிற்கு—உருபு மயக்கம்,) காட்சி—தோற்றம், மனக்கு உறு களி—மனத்திற்கு மிகுதியாகிய சந்தோஷத்தை.

4—7. புகை கலம்—புகைக்கப்பல், (Steamers); புகை ரதம்—புகைவண்டி, (Trains) மண்ணின் தைலம் உற்றுள சாலைகள்—மண்ணெண்ணெய் பொருந்திய விடங்கள், (Kerosine oil tanks) பொலிந்தன—விளங்கின.

8—11. அமைதரா—பொருந்த, உற்றென—அடைந்தாற்போல, தண்கால்—குளிர்ந்தகாற்று, உலவி உற்றது—சஞ்சரியா நின்றது.

12—14. ('சிறுமணல் செறிந்த தரையிடை' என மாற்றுக,) செறிந்த—நிறைந்த, மீ மகிழ்ச்சியின்—அதிக சந்தோஷத்தோடு.

15—16. நீரின் அணித்து ஆ(க)—கடலுக்குச் சமீபத்தில், வெண்திரை விநோதம் வியந்து—வெண்மையாகிய அலைகளின் அதிசயத்தைப் புகழ்ந்து.

17—18. திரை அருகு எய்தி—அலைகளுக்குச் சமீபத்தில் போய்.

19—34. அணி கெழு கதிர் திரள்—அழகு பொருந்திய கிரணங்களின் தொகுதி, பொலிந்தனன் இருந்த—விளங்கி இருந்த, பொலிந்தனன்—முற்றெச்சம், பொரு அறு பரிதிக்கு அஞ்சுபு—சமானமில்லாத சூரியனுக்குப் பயந்து, ஆர் இருள்தொகை—நிரைந்த இருள் கூட்டம், ஆர் இருள்-பொருந்திய விருளெனினுமாம், அகன்றனன் மறைந்தமை—நீங்கி மறைந்தமை, உய்த்துணர்ந்தன—ஆராய்ந் தறிந்தன, எனும்—என்றாலும, எனினும்

என்பதன் மரூஉ, ஒண்மை மணி திரள்—ஒளி பொருந்திய ரத்தின ராசிகள், கரந்து உறை இடம் ஆம—மறைந்து கிடக்குமிடமாகிய, முகில் இனம்—மேகக் கூட்டங்கள், வான் இடை—ஆகாயத்தில், பைப்பய—மிகவும் மெதுவாய், ஈண்டு உறுவண்ணம்—இவ்விடம் (வந்து) அடையாதபடி, பித்திகை, சுவர், பிறங்கு வான் தொட்டு—விளங்கும் ஆகாய மளவும், திகழ்ந்த அ செவ்வி—விளங்கிய அந்த அழகை.

35—38. இயற்கையின் வளம்—இயற்கைப் பொருள்களின் மேன்மை, என்னே—என்ன ஆச்சரியம், இறைவன்—கடவுள், சிறு புலத்து எம் அ(ன்) ஞோர்—அற்ப அறிவையுடைய எம்மைப் போன்றவர், இயம்புதல்—சொல்லுதல்.

## கலத்திற்கோர் விளு

1—4. பொரு திரை—(கரையில், மோதும் அலைகள், மறிந்து உறு பிறவி—மேலும் மேலும் உண்டாகும் பிறப்பு.

5—6. கலம் கரை விளக்கம்—கப்பல்களின் பொருட்டுக் கரையி லேற்றும் விளக்கு, (Light House) 'கண்டனை கரையை அணுகுவை' எனக்கூட்டுக, கண்டு கரையைச் சேர்வாய்.

7—10 'கற்று உறு நெறியினர் மாந்தர்' எனக்கூட்டுக, உறு—(அதன்படி) பொருந்திய, நெறியினர் மாந்தர்—நல்வழியில் நடப்பவராகிய மனிதர், நல்ஞானம என்—சிறந்த ஞானமென்னும், காண் உறின்—கண்டால், ஈது என் உரை—இதென்ன விநோதம் சொல்வாயாக, மதி—முன்னிலை அசைச்சொல்.

## பெண் கல்வி

1—2. உயர்வு—மேன்மை, கலை நலம்—நூல்களைக் கற்கும் மேன்மை, பிறிது காரணம் எவன்— வேறு காரணம் என்ன (இருக்கிறது)

3—6. மாண்பு உறுவார்—பெருமையடைவார், செப்பு உறு மொழி—சொலும் மிகுதியாகிய சொல்,

7—8. கற்பினில் பிழைப்பர்—நல்லொழுக்கத்தினின்றுந் தவறிப்போவார், உற்று உணராமல்—ஆலோசித்து அறியாமல்.

9—12. அ வயின்—அவ்விடம், அடு வளி—(விளக்கை) அணைக்குங் காற்று, உறுமை—சேராமை, ஏயும்—பொருந்தும்,

13—22. புன்மதிஒன்றும்—அற்பமாகிய அறிவு சிறிதாயினும், கரிசு—குற்றமாகிய செய்கை, சிதைத்தல்—வருந்தல், நிறை எ(ன்) னும் குணம்—(மனத்தை நல்வழியில்) நிறுத்துதலென்னும் (நல்ல) குணம், நிலையுற—நிலை நிற்கும்படி, கொளுவி—அடைவித்து, தற்

காத்து—(கற்பினால்) தம்மைத்தாம் பாதுகாத்து, நிறுவி—நிலை நிறுத்தி இல்—இல்லறம், இலகும், இயல்பினை—விளங்குந் தன் மையை, மதிகெழு—நல்லறிவு பொருந்த இவ் அன்றி—இவைகளை யல்லாமல், ('அவர்க்கு இயற்றும் நன்று உளவோ' என மாற்றுக)

## முந்நீர்க் கடலும் மொழிக் கடலும்

1—3. வான் முகில் உரு ஆய்—ஆகாயத்திலுள்ள மேகங்களின் வடிவமாய்.

4—9. கதிப்பினை மேவி—உயர்வையடைந்து, அகன்று அவிர் கின்றனை—பரந்து விளங்குகின்றாய், ஒண் பொருள் கொண்டு உளை—ஒளிபொருந்திய (முத்து முதலிய) பொருள்களைக் கொண் டிருக்கின்றாய், (மொழிக்கடலுக்கு) ஒண் பொருள்—அகப்பொரு ளும், புறப்பொருளுமாகிய உயர்ந்த பொருள்கள், குறிக்கொளும்—எண்ணும், போற்றி—பாதுகாத்து, புகல் மொழிக் கடலும் பொன்போல்போற்றி நின்போல் குறிக்கொள்ளும் நீர்மையது, எனமாற்றிப் பொருள் கொள்க.

10—13. காண்குபு—கண்டு, உற அமைந்த—மிகுதியாய்ப் பொருந்திய.

14—20. நினைவுறு—எண்ணப்பட்ட, நின் துணை கொண்டு—உனது உதவியால், பல் சேண் நாடு—பலவாகிய தூரதேசங்கள், நலம் சார்—நன்மை பொருந்திய, இன்ன வகையினர்—இப்படிப் பட்ட தன்மை யுடையவர், ஆகுநர்—ஆவார்.

21—23. உரை சால் நும் இயல்—புகழமைந்த உமது இலக் கணம், நேர்மை—தன்மை, நயம் தகும்—விருமபத்தகும், நுண் புலம்—நுட்பமாகிய அறிவு, நாவலோர் உளம் விம—நாவன்மை வாய்ந்த வித்துவான்களுடைய மனமும், உயத்தகும் நீர்மையின்—புகழத் தகும் தன்மையால், இச்செய்யுளின் பொருள் கடலுக்கும் நூல்களுக் கும் ஏற்றவாறு அமைந்துள்ளமை காண்க.

## தாமரை இலை சார் தண்ணீர்த் திவலை

தண் அம கமலம்—குளிர்ச்சியாகிய அழகிய தாமரை மலர், பசுமை + அடை—பசுமையாகிய இலை, பொலியும்—விளங்கும், தண் திவலாய்—குளிர்ச்சியாகிய நீர்த் துளியே! களம் ஆர்—கழுத் தில் பொருந்திய, வண்ணம் பொலி—அழகால் விளங்கும், இயல்—இலக்கணம், என்று—என்று, இறுமாப்பு—கர்வம், பண்ணின்—ராகத்தைக் காட்டிலும், பயிலார்—(யாப்பிலக்கணம்) கற்காதவர், புன் கவி—அற்பமாகிய பாடல்கள், படி—பூமி, ஆட்டம் கொள் கிற்போா—(செருக்கால்) அலைபவர், பதம்—தகுதி

## முடிசூட்டுச் சிறப்பு

1. திரு ஓங்கு—செல்வம் மிகுந்த, செயல்—கைத்தொழில், உரு—அழகு, மணிமாடம்—அழகிய மாளிகைகள், உயர்ச்சி—மேன்மை, துவசம்—கொடி, நிரை—வரிசை, ஆர்ந்து—பொருந்தி. மரு ஓங்கு குழலியர்—வாசனை மிகுந்த கூந்தலையுடைய பெண்கள்,

2. பல கலையின் திறம—பலவாகிய நூல்களின் வகைகள், கதிரின் அணியார்ந்த பரிதிகள்—கிரணங்களின் அழகு பொருந்திய (பல) சூரியர்கள், வலம்—வெற்றி, நல் உதயம் என்(ன்)னும் வரை—மேன்மையாகிய உதயமலை, (சூரியனைப்போன்ற பல அரசர்கள் இங்கிலாந்தில் வீற்றிருந்து அரசு செலுத்தியதால், அந்நாடு உதயமலைக்கு ஒப்பாகுமென்பது.)

3. எழில் திரு நண்ணும் நாடு—அழகும் செல்வமும் பொருந்திய நாடு, கண்ணும்—நினைக்கும், உற்றனன்—தோன்றினன், இயல் + அழகு, இறைவன்—அரசன்.

4. கமல ஆசன மகள் சேர்—தாமரை மலரை இருப்பிடமாக வுடைய திருமகள் வசிக்கும், மஞ்சு அம் வரு மார்பு உறு—மேகத்தினது அழகு பொருந்திய மார்பை உடைய, மறை ஓது-வேதங்களை (பிரமனுக்கு) கற்பித்த, வேதங்களாற் சொல்லப்படும என்றலுமாம், இறை அன்னோன்—திரு மாலுக்கு ஒப்பானவள், பஞ்சு அஞ்சு உறு—(மென்மையால் பஞ்சும் அஞ்சத்தக்க, பனிமா மொழி இறைவி—குளிர்ந்த சிறந்த சொற்களையுடைய அரசி, புளகு உறு நாயகன்—களிப்புக் கொள்ளும் கணவன்.

5. நிதி—செல்வம், மேதக்க—மேன்மை பொருந்திய, இயல் சீர்த்தியான்—விளங்கும் புகழையுடையவன், தொக்கான—ஒன்று கூடின, தொகை—கூட்டம், கலம் மேவு துறை ஆறு—கப்பலைச் செலுத்தும் நூல்களின் விதங்கள், சதுராளன்—வல்லவன்.

6. ஒருபான் ஒடு—ஒருபத்தோடு, ஓர் ஒன்பது உறு நூறு ஒடு—ஒரு ஒன்பது பொருந்திய நூறோடு, ஒருபத்து ஒடு ஒன்று எய்தி—ஒருபத்தும் ஒன்றும்சேர்ந்து, வருசோதி வருடத்தின்—வருகிற ஒளி பொருந்திய வருஷத்தில், (பத்தோடு ஒன்பது—பத்தொன்பது, (உறு) நூறு—பத்தொன்பது நூறு, எனவே—1900, ஒருபத்து ஒன்று-பதினொன்று, எனவே 1911-ம் வருஷ மென்பது.) மதி எட்டொடு ஒருநாலு—மதிக்கத்தக்க பன்னிரண்டாகிய, ம(ன்)னு மாமதி—நிலைபெற்ற சிறந்தமாதத்தில், (டிசம்பர் மாத மென்பது,) உரு ஆரும்—அழகுபொருந்திய, அ தெய்தி—அதே தேதியில் (பன்னிரண்டாம் தேதி) திரு ஆரும்—மேன்மை பொருந்திய, தேர்ந்து ஓத—தெளிவாய்ச் சொல்ல.

7. சீர்த்தி வாய்ந்த—மேன்மை பொருந்திய, ஒள்ளிய—புகழை யுடைய, பதி—தேசம், திருமகளே அன்ன—இலக்குமிதேவியே போன்ற, துணைவி—மனைவி.

8. தூய நல் சீரினன் கு—பரிசுத்தமாகிய சிறந்த குணங்களை யுடையவராகிய ஜார்ஜ் சக்ரவர்த்திக்கு, தோய—அளாவ, எழில் மணி குயின்று—அழகிய ரத்னங்களைப் பதித்தலால், காந்திமேயது—ஒளி பொருந்தியது, பொரு இல்—ஒப்பில்லாத.

9. பாங்கர்—(வலப்)பக்கம், வீற்றிருக்கும் மால்—உட்கார்ந்திருக்கும் திருமால், உரு உறு—அழகுபொருந்திய, பெருமன்—அரசன்; சீர்சால்—மேன்மை நிறைந்த, மருவு—பொருந்திய, பேர் குரவன்—பெரிய குரு, மௌலி புனைந்தான்—முடிசூட்டினன்.

10. துவக்கம் கல்விக்கு—ஆரம்பக் கல்வியின் பொருட்டு, (Elementary Education) ஒருமதி வேதனம்—ஒருமாதச் சம்பளம், இன்ன அன்ன—இவை போன்ற, வள்ளல்—(தயாள குணத்தால்) அளவில்லாமல் கொடுப்பவன்.

## சீறாப்புராணம்

### கடவுள் வாழ்த்து

1. திருவினும் திருவாய்—(எல்லாச்) செல்வங்களிலும் (சிறந்த) செல்வமாய், மருவினும மருவாய்—வாசனைப் பொருள்களெல்லாவற்றிலும் (சிறந்த) வாசனையாய், பொருவினும் பொருவாய்—உவமைகளுக்கெல்லாம் உவமையாய், கரு—(மாதாவின்) வயிற்றிலுள்ள பை பொருத்துதல்—(மனத்தில்) அமைத்துத் துதித்தல்.

2. முக்காலம்—இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், (காலை, உச்சி, மாலை என்றலுமாம்,) இதய ஆசனம்—மனமாகிய பீடம்,

### தேம்பாவணி

1. வெருள் தரும் குரல்—அச்சத்தைத் தரும் ஒலி, வெம சினம் ஏறு—கொடிய கோபமாகிய இடியேறு, இருள் தரும புயல்—கரிய நிறம பொருந்திய மேகம், ஏத்துவார்—துதிப்பார், மருள் தரும் புகர்—மயக்கத்தை யுண்டாக்கும குற்றம், மல்கினும்—பொருந்தியிருந்தாலும், மாறுஇலா—(கொடுத்தலினின்றும் நீங்காத.)

2. பூ கதிர்—அழகிய நெற்கதிர்கள், மாழ்கிய—வாடிய (உலர்ந்த), வான்புயல் — சிறந்த மேகங்கள், கிளர்ந்த —விளங்குகிற, வான் கொடை— சிறந்ததானம், கேழ்த்து எழும்—விளங்கித் தோன்றும்.

முற்றிற்று

PRINTED AT THE HUXLEY PRESS, MADRAS

47060

...யடிகள் நூல்...